www.padippakam.com
நன்றி நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
செப் .25- ஒக்.01,1994
ரூபா 9/00

# வாரமலர் தினமுரசு

SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 69



## அரசு புலிகள் பேச்சு

விவேகமா—வியூகமா?

எக்ஸ்ரே ரிப்போர்ட்

இவ்வார மகாபாரதம்

## இ. தொ. கா. நிலைப்பாடு

தொண்டாவோடு நேர்முகம்

லேடீஸ் ஸ்பெசல்

அசத்தலான சினிவிசிட்

## இராட்சத மீன் அதிசயத் தகவல்கள்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
பிரதமரும்-பிரபாவும்
கடிதங்கள் மூலமாக
'ஹலோ' சொல்லிக்கொண்டுள்ளார்கள்.

பகிரங்கமான பேச்சு என்று
அரச தரப்பில் இருந்து
சொல்லப்பட்டபோதும்
பிரபாவுக்கு அனுப்பிய கடிதத்தையோ
அதற்கு பிரபா அனுப்பிய பதிலையோ
அரச தரப்பினர்
உடனே வெளியிட முன்வரவில்லை.

ஆனால்-புலிகள் அமைப்பினரோ
பிரதமர் தமக்கு அனுப்பிய
கடிதம், அதற்கு
பிரபா அனுப்பிய பதில் கடிதம்
இரண்டையும் யாழ்ப்பாணத்தில்
பகிரங்கப்படுத்தியிருந்தனர்.
முரசு இரு கடிதங்களையும்
வெளியிட்டுமிருந்தது.

பிரபா அனுப்பிய கடிதம்
பிரதமர் கரம்சேர முன்னரே
யாழ்ப்பாண மக்களுக்கு-அந்த
கடிதத்தில் இருப்பது என்னவென்று
முன்கூட்டியே தெரிந்துவிடுகிறது.

மக்களுக்கு உடனுக்குடன்
தகவல்களை தெரிவிக்கும்
புலிகளின் அணுகுமுறையை
நிச்சயம் வரவேற்கலாம்.

எதையும் மறைக்கும் போதுதான்
அறியும் ஆவல் எழுவது இயல்பு.

அரசியல் ரீதியிலும் அது பொருந்தும்.
செய்திகளும்-தகவல்களும்
மறைக்கப்படும்போதே
அறியும் ஆவலும்
அது பற்றிய சந்தேகங்களும் எழுவதுண்டு.

முன்னர் பிரேமதாசா அரசாங்கமும்
புலிகள் அமைப்பும் பேச்சு நடத்தியபோது
பேச்சுவார்த்தை அரங்குக்கும்
பொது மக்களுக்கும் இடையே
திரையொன்று தொங்கியது.
இன்று ஆளும்கட்சியில் உள்ளவர்களே
திரைக்குப் பின்னால் நடப்பது பற்றி
அன்று கேள்விகள் எழுப்பினார்கள்.

இந்தியப் படை இங்கிருந்தமையும்
புலிகள் நடத்திய போரும்
பிரேமா அரசு பலமாக இருந்ததும்
ஜே.வி.பி.கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட சூடும்
எதிரணிகளது கேள்விகளை
ஒரு பொருட்டாகக் கொள்ளும்
அவசியத்தை ஏற்படுத்தவில்லை.

ஆனால்-பின்னர்
பேச்சுக்கள் முறிந்து போனதும்,
போர் தொடர்ந்ததும்,
ஆளும் கட்சியாகவிருந்த ஐ.தே.கட்சிக்குள்
ஏற்பட்ட உள் பிரச்சனைகளும்
நெருக்கடியை ஏற்படுத்தியபோது
புலிகளோடு நடத்திய பேச்சுக்கள் பற்றிய
எதிரணிகளது சந்தேகங்களும், கேள்விகளும்
பிரேமா அரசாங்கத்தை சங்கடத்துக்குள்ளாக்கின.

தற்போதைய நிலையில்-
புதிய அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு
பொதுவான வரவேற்பு காணப்படுகிறது.

தமிழ் கட்சிகளும்
புதிய அரசாங்கத்தை பாராட்டுவதில்
போட்டி போடுவதும் தெரிகிறது.

முஸ்லிம் காங்கிரஸ்
அரசாங்கத்தில் ஓர் அங்கம்.

எதிர்க்கட்சி மௌனமாக
காட்சி மாற்றங்களை கவனிக்கிறது.

போருக்கெதிரான
பொதுவான அதிருப்தி
பேச்சு முயற்சிகளை
இனவாதிகளும் பெரிதாக எதிர்க்க முடியாமல்
தற்காலிகமாக அடக்கி வைத்திருக்கிறது.

ஆனால்-நாளை நிலைமைகள் மாறினால்
சந்திரிக்கா அரசாங்கம்
எதிர்க்கட்சியாலும்
இனவாதிகளாலும் கேள்விக்குள்ளாகும்
என்பதை மறந்துவிடக்கூடாது.

எனவே-பேச்சுக்களிலும் சரி
பேச்சு முயற்சிகளிலும் சரி
பகிரங்கத்தன்மை முக்கியமானதாகும்.

அரச தரப்பைப் போலவே
புலிகளும் கடித விடயங்களை
வெளியிடாமல் இருந்திருந்தால்
ஏதோ முக்கியமான-இரகசியமான
தகவல்கள். செய்திகள் பரிமாறப்பட்டதாக
நாமெல்லாம் நினைத்திருப்போம்.

அரசியல் அரங்கத்தின்
செயற்பாடுகளை வைத்து
மக்கள் தம் கணிப்புக்களை
உருவாக்கிக்கொள்வதே ஆரோக்கியம்.
அதைவிடுத்து
மாயத் தோற்றங்கள்
வெறுமனே பரபரப்பான எதிர்ப்பார்ப்புகள்
உருவாக்கப்படுமானால்
நம்பிக்கையீனங்களும் தோன்றும்.
அதுமட்டுமல்லாமல்-
யார் சரி-யார் தவறு
என்று மக்கள் அறியவும்
பகிரங்கத்தன்மை முக்கியமாகும்.
இல்லாவிட்டால் ஒருவரை ஒருவர்
குற்றம் சாட்டிக்கொண்டிருக்க-
மக்கள் முடியைப் பிய்த்துக்கொள்வார்கள்.
இது கடந்த கால அனுபவம்.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-

# ஆன்மீகம்

## வார்த்தைகளால் தேவனை பிரியப்படுத்துகிறோமா?

அன்றாடம் எம் நாவுகளினால் உதிர்க்கபடும் வார்த்தைகளை சற்று சிந்தித்துப் பார்ப்போம். வீணாக நேரத்தை போக்கடிக்கும், நம்மையே புகழ் பாடும், அநீதியை ஊக்குவிக்கும், பிரச்சனைகளை ஏற்படுத்தும், விரோதங்களை வளர்க்கும், கோள் காவும், பிறர்க்கு அவப் பெயர் உண்டு பண்ணும், கேட்போர் மனதைப் புண்படுத்தும் கேடான வார்த்தைகள் எத்தனை!


நாவு சிறிய அங்கமாக இருந்தாலும் அதன் செயற்பாட்டின் விளைவுகளோ மிகப் பெரியது. "நாவும் நெருப்புத்தான். அது அநீதி நிறைந்த உலகம். நம்முடைய அவயவங்களில் நாவானது முழு சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது." (யாக் 3: 6)

திருவள்ளுவர் கூறுகிறார்,
"தீயினால் சுட்ட புண் ஆறும்
ஆறாதே நாவினால் சுட்ட வடு"

நாவைக் கட்டுப்படுத்தி சிந்தித்துப் பேச நாம் பழகிக்கொள்ள வேண்டும். "அதனால் நாம் பிதாவாகிய தேவனை துதிக்கிறோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதனாலேயே சபிக்கிறோம். துதித்தலும், சபித்தலும் ஒரே வாயால் இருந்து புறப்படுகிறது. என் சகோதரரே இப்படியிருக்கலாகாது" (யாக் 3:9,10)

ஆகையால் எம் பேச்சுக்கள் இறைவனின் வல்லமையையும், நீதியையும் அளப்பெரிய அன்பையும் பிரதிபலிக்க வேண்டும். நாம் கூறும் வார்த்தைகள் யாவும் கர்த்தருக்கு பிரியமானவையும், அவரை மகிமைப்படுத்துபவையாகவும் இருக்கட்டும்.

## இஸ்லாத்தில் பங்கில்லை



"தொழுகை இல்லாதவருக்கு இஸ்லாத்தில் எவ்விதப் பங்குமில்லை. உளூஉ இல்லாமல் தொழுகை இல்லை' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றார்கள். இன்னொரு ஹதீஸில், 'தொழுகை இல்லாமல் தீன் இல்லை. உடலில் தலை எவ்வளவு முக்கியமோ அந்த அளவு தீனில் தொழுகை முக்கியமானதாகும்' என்று கூறப்பட்டுள்ளது.

தம்மை முஸ்லிம்கள் என்றும், இஸ்லாத்தின் பாதுகாவலர்கள் என்றும் கூறிக்கொண்டு அதே நேரத்தில் தொழுகையை அலட்சியம் செய்துவரும் அன்பர்கள் பெருமானாரின் பொன்மொழிகளைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். முன்னோர்கள் அடைந்த வெற்றிகளைத் தானும் அடைய வேண்டும் என்று கனவு காண்பவர்கள் அந்த முன்னோர்கள் எந்த அளவு தீனைப் பின்பற்றினார்கள் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களுடைய கண்களில் நீர் வழிந்துகொண்டே இருந்தது. 'இதற்கு மருத்துவம் செய்வதனால் நீங்கள் சில நாட்கள் தொழுகையை விடவேண்டியிருக்கும்" என்று சிலர் அபிப்பிராயப்பட்டார்கள். அதற்கு இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் " அது முடியாது. தொழுகையை விட்ட மனிதன் இறைவனை அதிருப்தி நிலையில் சந்திப்பான் என்று நபி (ஸல்) அவர்கள் நவில நான் கேட்டுள்ளேன்" என்று கூறினார்கள். இன்னொரு முறை "நீங்கள் ஐந்து நாட்களுக்குப் பலகையின்மீது ஸஜ்தாச் செய்ய வேண்டும்' என்று ஆலோசனை கூறப்பட்டபோது, "இவ்வாறு நான் ஒரு ரக்அத்கூடத் தொழ மாட்டேன்" என்று அவர்கள் பதில் கூறினார்கள். இத்தகைய காரணங்களால் தொழுகையை விடுவது கூடும் என்று இருந்தும்கூடத் தொழுகையை விடுவதைவிட வாழ்நாளெல்லாம் பார்வை இழந்து சிரமப்படுவது அவர்களுக்கு இலேசாகத் தெரிந்தது.

கவிப்பிரியா நிஷா-வெல்லம்பிட்டிய.

## கவிதைப்போட்டி இல-66

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**எனக்கென்ன?**

"யார் வந்தால் தான் என்ன?
போர் நின்றால் தான் என்ன?
குண்டு துளைத்த
என் அண்ணன் உயிரை
கொண்டு வந்தா
தருவார்கள்...?"

பாலசுந்தரம் பானுசந்தர்
அக்கரைப்பற்று-07.

### வியக்கப்பட்டவை

இவைகளைக் கண்ட
பிறகுதானோ
ரவைகளை விட்டு
சமாதானச் சமர்புரிய
ஆயத்தமாகிவிட்டார்
சந்திரிகா அம்மையார்
சபாஷ்!

தங்கத்துரை ஜெயாஞ்சலி
தம்பிலுவில்-2.

யுத்தத்தின் முன்னே
நீயும் நானும் வேறல்ல....
எஸ்.ஜெயச்சித்ரா-கொழும்பு-12.

**அகழ்ந்தெடு!**

மாண்ட அண்ணன்
தம்பிகளின்
மண்டை ஓடுகளை
அகழ்ந்தெடுங்கள்!
யுத்த நிறுத்தப்
பாதைகளில்
அணியாய் அடுக்கி.
வைப்போம்.

சீ.கணேசமூர்த்தி
அக்கரைப்பற்று-08.

**சர்வதேச இலச்சினை**

மண்டையோடு கண்டு
மனம் வெதும்புவதென்ன?
இந்நூற்றாண்டின் சர்வதேச
இலச்சினை இதுதானே!

பி.சி.அன்ரன்-மட்/கூளாவடி.

**ஆயத்தம்!**

"அழாதே!
ஆறுதல் சொல்ல
ஆணைக்குழு
ஆயத்தமாகிறது!"

பாலசுந்தரம் மஜுரன்
தெமட்டக்கொட.

**சிரிப்பின் விளைவு**

புதைக்க வேண்டியவை இருக்க
புதைக்கப்படுவது வேறு!
போர் சிரிக்க,
பார் இங்கே அழுகின்றதோ?

செல்வி.எ.ஃப்.பர்ஸினா
பெந்தொட்டை.

போரில்
நீ பழசு
நான் புதுசு!
எம்.சுரேஷ்.

**மனிதனாய் வாழ...!**

மண்டையில் போடும்
மடைத்தனம் காண
கூசுதோ
உன் கண்கள்?
மடைமை ஒழித்து
மனிதனாய் வாழ
அழைக்குதோ
உன் உள்ளம்?

ஏ.அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-06.

**கற்பனை**

இறந்தவுடன் என்
முகமும் இப்படியா?
கண்ணை மூடிக்கொண்டு
கொஞ்சம் கற்பனை
செய்யட்டுமா?

பெ.ராம்தாஸ்-ராகலை பஸார்.

**மாற்றம்**


சமாதானம் வரும்
போது
சத்தியமாய் என்
முகம்
இப்படித்தான்
இருக்கும்.

க.இந்து
திருகோணமலை.

**மூலதனம்**

போர்ச் சிதைவுகளில்
தேசம் கண்டெடுத்த
தேசிய மூலதனம்

என்.சுதர்ஷினி-புத்தளம்.



என்
தேசத்தின்
தெருக்களில்
மனிதக் கூடுகளும்
மண்டையோடுகளும்
குப்பை மேடுகளாய்
குவிந்து கிடக்கின்ற
வேதனைக்
காட்சிகளை
விழிகள் பாராமல்
விரல்கள் மூடினவோ?

ரேணுகா நிபாய்தீன்
ஏறாவூர்-02.

**சமர்(ச்)சான்று**

மீன்பாடும்
ஆழ்கடலிலும்
இழக்கப்பட்ட
எம்மவரின்
இறுதி
எச்சங்கள்.

ஆர்.சாந்தசீலன்
பொத்துவில்.

**முடிவு**

சூரியகந்தையா?
மைலந்தனையா?
ஆண்டவனே!
மூர்க்கப் போருக்கு
முடிவே இல்லையா?

எஸ்.உமையவன்-வவுனியா.

**பரிசு**

நீச்சல் வீரருக்கு
போர்த் தேசம்
கொடுத்த பரிசை
நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-02.

போர்க்கடலில்
மூழ்கியவன் எடுத்த
நவீன முத்து
கண்ணைப்
பறிக்கிறதோ!


மெய்யன் நடராஜ்
பூண்டுலோயா.

**எஞ்சிய சு(சோ)கம்**

எனக்கு எஞ்சிய
சொத்து சு(சோ)கம்-இந்த
மண்டையோடு மாத்திரம்தான்!!

மஜிமிலா ஸலாம்
ஏறாவூர்-06.

## கவிதைப் போட்டி இல-69



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள்.

சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.
அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 01.10.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 69
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

## வாசகசாலை

என் அன்பு முரசே!

நீ சுமந்து வரும் முத்தான பல அம்சங்களில் அதிரடி அய்யாத்துரை, மகாபாரதம், அவற்றிலும் சிறப்பான இன்றைய அரசியல் நிலையை விளக்கும் எக்ஸ்ரே ரிப்போர்ட் போன்ற சிறப்பான அம்சங்கள் எமக்கு அள்ளி வழங்குகிறீர் முரசே! தினமும் நீ வருவாயானால் திகைப்பே இல்லை எனக்கு.

உன் உண்மையான சேவை மென்மேலும் வளர எம் வாழ்த்துக்கள்.

கே.எஸ்.லதா-அக்கரைப்பற்று-08.

□□

என் அன்பான முரசே,

நீ வாராவாரம் வெளியிடும் கதைகள் மற்றும் பல்சுவை அம்சங்கள் எல்லாம் எனது மனதை கவர்ந்து வருகிறது. அதனால் முரசுக்கு இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

ரிஹானா பாயிஸ்-புத்தளம்.

□□

அன்பின் முரசே, நீ சுமந்துவரும் அத்தனை அம்சங்களும் எமது சிந்தைக்கு அறிவூட்டும் வகையில் அமைகிறது. இதே போன்று மீண்டும் உன் சேவை எமக்குதேவை. வாழ்க உன் புகழ் வளர்க நம் தமிழ்.

பி.ராதாகிருஷ்ணன்-டிக்கோயா.

□□

உமக்கு தினமுரசு அல்ல, தேன் முரசு என்று பெயர் வைப்பதே பொருந்தும். ஏனெனில் சுவை மிகுந்த செய்திகளை அள்ளி வழங்குகின்றீர். உலக அதிசயங்களை புகைப்படத்துடன் தருகின்றாய். உலக அதிசயங்களை கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் முரசே உம்மைக் கண்டபின்பு படத்துடன் பார்த்து இரசிக்கின்றோம்.

ஏ.எம்.கனகேஸ்வரன்-பூண்டுலோயா.

□□

வாரம் ஒருமுறை வலம் வரும் வாரமலரே, தயங்காது அழுத்தம் திருத்தமாக தெளிவு நடையில் நீ தரும் விடயங்கள் யாவும் பிரமாதமானது. வசனமும் கவிதையும் கலந்த அமைதியான நடையில் ரசிகன் தரும் 'இலக்கிய நயம்' கட்டுக்குலையாதது. கொஞ்சமும் குமுறி விழும் வசனங்களாலும் 'கொலை விழும் நேரம்' தரும் ரசிகனுக்கு எமது பாராட்டுக்கள். இவற்றைத் தாங்கி வரும் முரசுக்கு எமது வாழ்த்துக்கள்.

இர்பானா றியால், அரபாத்,
பஸ்மியா-மக்கொன.

□□

சிந்தனையூட்டும் முரசே,

நன்றி சொல்லவே உனக்கு என்னிடம் பல வார்த்தைகள் உண்டு. ஒரு வண்டு பூவில் தேன் அருந்துவது போல சில சிறுகதைகளும், மகாபாரதம் போன்ற சுவையான அம்சங்களையும் அள்ளித் தரும். உனக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

பசறையூர்-ப.சுபத்திரா.

□□

சிந்தை கவரும் தினமுரசே!

ஆழ்கடலில் கண்டெடுத்த முத்துப்போல எங்கள் திருநாட்டில் உதித்த மனங்கவர் முரசே! நீ தாங்கிவரும் அனைத்து விடயங்களும் சுவையிலும் சுவையே! இதுபோல் இன்னும் பல அருமையான விடயங்களைத் தந்து நீ என்றும் நலம் வாழ வாழ்கவென வாழ்த்துகிறேன்.


செல்வி.நஸீராஜ் சம்சுதீன்
கந்தளாய்.

□□

எங்களன்பு தினமுரசே!

வாரம் ஒன்றாய் வலம் வருகின்றாய். பல்சுவையில் கரங்களில் தவழ்கின்றாய். எம் மனம் கவர்ந்து நிலை கொள்கின்றாய். ஆவல் தந்து அரவணைக்கின்றாய். எங்களது வாழ்த்துக்களை நீ ஈர்க்கின்றாய் அதனால் உனக்கு எம் மனமார்ந்த பாராட்டுக்களை நாம் தருகின்றோம்.

ரஜனி.சுரேந்தர்,ஜனனி,
செல்வா-கொழும்பு-12.




எம்மை தித்திக்க வைக்கும் அன்பின் முரசே,

வாரந்தோறும் ஆன்மீகம், எக்ஸ்ரே ரிப்போர்ட், உலக ரவுண்டப் அரசியல் அலசல், லேடிஸ் ஸ்பெசல், தகவல்பெட்டி, பாப்பா முரசு மற்றும் பல அம்சங்களுடனும் நடைபயின்று வரும் தினமுரசே, உன் பணி தொடர வாழ்த்துக்கள் பற்பல.

தியாகு-நமுனுகுல பஜார்.

□□

நீண்ட காலமாக உனது சேவைக்கு எனது நன்றி!

நீ அள்ளித்தரும் ரசிகனின் கொலை விழும் நேரம், அதிரடி அய்யாத்துரை, சிறுகதைகள் என்றுமே எனக்குத் தேவை.

சிந்தாத்துரை விஜயகுமார்
அக்கரைப்பற்று-07.

□□

இனிய முரசே!
ஆலமரமென நீ வாழ-அதில்
ஆயிரம் வாசகர்கள் உறவாட
காலமகள் உனைத் தாலாட்ட-நான்
உன் பணிக்கு வாழ்த்துகிறேன்
மனதார.

கந்தப்போடி ஜீவகுமாரி-கொம்மாதுறை.

□□

முரசே!

உன் வரவுகாண சந்தோஷக் கனவுகளுடன் காத்திருக்கிறோம்.

செல்வன்.ஸலீம் மு.கடாபி
ஹொறவபொதானை.

□□

தினமுரசு தரும் 'கொலை விழும் நேரம்' தொடர் கதையின் ஒவ்வொரு அங்கங்களும் அடுத்த கட்டம் எவ்வாறாக அமையும் என ஏங்க வைக்கின்றது!

ரசிகனுக்கு எனது பலகோடி வாழ்த்துக்கள்!

ஏறாவூர்-எம்.ரி.எம்-அன்ஸார்.

□□

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# போர் நிறுத்தம் இல்லாமல் மோதல்கள் ஓயாது!

## படைகள்-புலிகள்- இடையே தொடரும் பலப்பரீட்சை!!

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்துமாறு தனது கெரில்லாக்களுக்கு உத்தரவிட்டுள்ளதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என்பது வெளிப்படையாகியுள்ளது.

வடக்கு-கிழக்கில் படைகளும் புலிகளும் தொடர்ந்தும் மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

### மீனவர்மீது தாக்குதல்

வடபகுதி கடற்பிராந்தியத்தில் கடற் படையினரின் தாக்குதல்கள் தொடர்வதாக புலிகள் அமைப்பினர் தொடர்ந்து புகார் தெரிவித்து வருகின்றனர்.

15.09.94, 16.09.94 ஆகிய தினங்களில் பருத்தித்துறைக் கடலில் மீனவர்கள்மீது கடற்படையினர் பீரங்கி மற்றும் கலிபர் 50 ரக துப்பாக்கிகளால் தாக்கியதாகவும், ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும், மீனவர்கள் வலைகள் வள்ளங்கள் என்பவை சேதமாக்கப்பட்டதாகவும் புலிகளின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கடற்பரப்பிலும் தாக்குதல் நடைபெற்றதாகவும், மீனவர்களது படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டதாகவும் அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விமானக் குண்டுவீச்சு

வெலி ஓயாப் பகுதியில் விமானக் குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றதாக 19.09.94 அன்று 'புலிகளின் குரல்' வானொலி யாழ்ப்பாணத்தில் அறிவித்தது.

### 8 புலிகள் பலி

15.09.94 அன்று மட்டக்களப்பு பகுதியில் புலிகளது முகாம் ஒன்றை பாதுகாப்பு படையினர் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தினார்கள். அத்தாக்குதலில் தமது உறுப்பினர்கள் 8 பேரும் ஆதரவாளர்கள் 2 பேரும் பலியானதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

### நெடுங்கேணி மோதல்

17.09.94 அன்று நெடுங்கேணியில் பாதுகாப்புப் படைக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் ஒன்று நடந்தது. அதில் 3 புலிகள் பலியானதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

திருகோணமலை புல்மோட்டையில் 16.09.94 அதிகாலை புலிகள் நடத்திய தாக்குதலில் இரு பொலிசார் பலியானார்கள். ரி.56 ரக துப்பாக்கிகள் இரண்டு, கைக் குண்டுகள் 2 ரவைகள் 235 போன்றவை தம்மால் கைப்பற்றப்பட்டதாக புலிகள் அறிவித்தனர்.

17.09.94 மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் நடத்திய தாக்குதலில் அண்ணா தாஸ் எனப்படும் புலிகள் அமைப்பின் உறுப்பினர் பலியானார்.

### பாரிய தாக்குதல்

19.09.94 அன்று மன்னார் கடலில் கடற்படையினரின் ரோந்துப்படகின்மீது புலிகள் நடத்திய பாரிய தாக்குதல் பாதுகாப்பு படை வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவ பலத்தை நிரூபிக்கவும், போர் நிறுத்தத்துக்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தவும் புலிகள் முடங்குவதாக முரசு கடந்தவாரம் வெளியிட்டிருந்த செய்தியை மன்னார் கடல் தாக்குதல் ஊர்ஜிதப்படுத்தியுள்ளது.

புலிகள் அமைப்பினர் தமது இராணுவ நடவடிக்கைகளை இடைநிறுத்தியிருப்பது போல அரசாங்க வெகுஜன தொடர்பு சாதனங்கள் செய்துவந்த பிரசாரங்கள் மன்னார் கடல் தாக்குதல்கள் காரணமாக சங்கடத்துக்குள்ளாகியுள்ளன. போர் நிறுத்தம் அறிவிக்கப்படாத வரை இரு தரப்பும் தாக்குதல்களை நிறுத்தப் போவதில்லை என்பதையே நடைபெற்றுவரும் மோதல் சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

புதிய பாரிய தாக்குதல்கள் எதுவும் உடனடியாக நடைபெறமாட்டாது. அதே சமயம் படையினரது வழமையான நடவடிக்கைகள் தடுக்கப் படவும் மாட்டாது என்றே இராணுவ வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

# மூடிய கதவுகளுக்குப் பின் பேச்சு நடக்காது

## சகல அரசியல் கட்சிகளுக்கும் பங்கிருக்கும்

### புலிகளோடு பேசுவது குறித்து பிரதி பாதுகாப்பு அமைச்சர் கருத்து

**"புலிகள் அமைப்பினரோடு நடத்தும் பேச்சுவார்த்தைகள் பகிரங்கமானதாக இருக்கும். சகல அரசியல் கட்சிகளும் அதில் பங்குபற்றவைக்கப் படும்" என்று நீர்பாசன மின்சக்தி அமைச்சரும், பாதுகாப்பு பிரதி அமைச்சருமான திரு.அநுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.**

விடுதலைப் புலிகள் மட்டும்தான் தமிழர்களுடைய ஏகப் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் நாங்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தையிலீடுபட விரும்புவதாகக் கருதுவது தவறு. ஆயுதமேந்திய ஏனைய குழுக்கள் ஏற்கனவே அரசியல் நீரோட்டத்தில் இணைந்துவிட்டன. அவர்களில் சிலர் இன்று பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் வந்துள்ளனர். ஆகவே தொடர்ந்தும் ஆயுதம் ஏந்திப் போராடி வரும் விடுதலைப் புலிகளுடன்தான் பேச வேண்டியிருக்கிறது. இதனால் ஏனைய தமிழ் அமைப்புக்களையும் அரசியற் கட்சிகளையும் புறக்கணிக்காமல், ஒரு முடிவினை எட்டுவதற்கு முன்னர் அவர்களையும் கலந்து முடிவெடுப்போம்.

புலிகளை நாம் புறக்கணிக்க முடியாது. அதேபோல் ஏனைய குழுக்களையும் அரசியற் கட்சிகளையும் ஓரங்கட்டமாட்டோம். ஒவ்வொரு அரசியல் அமைப்புக்கும் பங்குபற்றும் வாய்ப்பளிக்கப்படும். கதவுகள் எப்போதும் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

### சமாதான இலக்கு

சமாதானம்தான் எமது குறிக்கோளே தவிர ஒரு குழுவுடன் இன்னொரு குழுவினை மோதவைக்கும் சிண்டு முடியும் பணியினை நாம் செய்யப்போவதில்லை. புலிகளுடன் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் இரகசியமாக- மூடிய கதவுகளுக்குப் பின்னால் நடைபெறமாட்டாது.

சகல அரசியற் கட்சிகளும் பேச்சு வார்த்தைகளில் கலந்துகொள்ள அனுமதி அளிக்கப்படும்.

இரு தரப்பினரும் அமைதிகாண ஒருவர் மீது மற்றொருவர் நம்பிக்கை வைத்துப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள வேண்டும்.

### பாதை திறப்பு

ஆனையிறவுப் பாதையைத் திறக்க வேண்டும் என்று அரசாங்கம் முற்று முழுதான தீர்மானம் எடுக்கவில்லை. பொதுவாக தரைமார்க்கமாக பொருட்கள் கொண்டு செல்லப்படுவதுதான் சுலபமானதுடன் மலிவானதும்கூட. சங்குப்பிட்டிப் பாதை திறக்கப்படுவதும் நன்மை பயக்கும். வெளி இடங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பொருட்கள் தாராளமாகச் செல்வதுபோல் யாழ்ப்பாணக் குடாநாட்டின் உற்பத்திப் பொருட்கள் தீவின் நாலா பக்கங்களுக்கும் போய்ச் சேரவேண்டும். இதில் இருதிறத்தாருக்கும் பெரு நன்மை ஏற்பட வழியுண்டு. எல்.ரி.ரி.ஈயின் ஒத்தாசையுடன் இப்பாதைகள் திறக்கப்பட்டால் பொருட்கள் எல்லாம் மிக மலிவாகக் கிடைக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

### பிரிப்புக்கு இடமில்லை

பாதுகாப்புப் படையின் தளபதிகளுடனும் வேறுபல உயர்தர அதிகாரிகளுடனும் படை முகாம்களிலுள்ள படைவீரர்களைக் கண்டும் அவர்களுடைய ஐயப்பாடுகளை நீக்கினேன். அமைதி ஏற்படும் பட்சத்தில் அவர்களுடைய நிலை எவ்வாறிருக்கும் என்ற சந்தேகம் அவர்களுக்கிருக்கிறது. ஆகவே அவர்களுடைய சந்தேகங்களை நீக்கிவைத்தேன். அமைதி ஏற்பட்டாலும் இந்த நாடு பிரிபடும் நிலை ஏற்பட இடமளிக்கப்படமாட்டாது என்று படையினருக்கு அரசாங்கத்தின் சார்பிலும் பொ.ஐ.மு.சார்பிலும் உத்தரவாதமளித்துள்ளேன். படைவீரர்களும் யுத்தத்தை வெறுக்கிறார்கள். தங்கள் குடும்பங்களுடன் சேர்ந்து அமைதியாக வாழவே அவர்கள் நாட்டம் கொண்டுள்ளனர்" இவ்வாறு அமைச்சர் அநுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

# "பாதையை மாற்றவில்லை புலிகள்"

## 'பேட்டா' கொலைக்கு ரெலோ கண்டனம்

ரெலோ இயக்கத்தின் உப தலைவரும் செங்கலடி பிரதேச சபையின் தலைவருமான ரி.ஜெயராஜன் (பேட்டா) கொலைக்கு விடுதலை புலிகளே காரண கர்த்தாக்கள் என்று ரெலோவின் பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். "இந்தக் கொலை நடந்திருக்கும் முறைகளை உற்று நோக்கும்போது இது புலிகளின் கைவரிசையே என்பது தெளிவாகிறது" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த 13ம் திகதி செவ்வாய்க்கிழமை செங்கலடியிலுள்ள பிரதேச சபை அலுவலகத்தில் திரு.ஜெயராஜன் கடமையிலீடுபட்டிருக்கும்போது ஒரு மோட்டார் வண்டியிலிருந்து, கையில் சூட்கேசுடன் வந்த சிலர் அலுவலக அறையினுள் சென்று துப்பாக்கியால் சுட்டு அவரைக் கொன்றனர். கடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ரெலோவின் சார்பில் இவரும் ஒரு வேட்பாளராகப் போட்டியிட்டார்.

திரு.சிவாஜிலிங்கம் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், "புலிகள் முன்பு பிரேமதாசாவோடு பேச்சுவார்த்தையிலீடுபட்டிருக்கும் காலத்திலேயே திரு.அமிர்தலிங்கம், திரு.யோகேஸ்வரன், திரு.சாம் தம்பி முத்து மற்றும் திருமதி.கலா தம்பிமுத்து ஆகியோரையும் கொன்றனர். நீண்ட நெடுங்கால யுத்தத்துக்கு முடிவு கட்டி ஓர் அமைதியான தீர்வினை எட்டுவதற்கு நாடு முழுவதும் மட்டுமல்லாமல் உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் இப் படுகொலையினை இவர்கள் செய்திருக்கிறார்கள். இதிலிருந்து புலிகள் எத்தகைய சூழ்நிலையிலும் தங்களுடைய பாதையை மாற்றிக்கொள்ளப்போவதில்லை என்றே தோன்றுகிறது" என்று கூறினார்.

கடந்த பொதுத் தேர்தலின்போது "இன்றைய யுத்தத்தில் புலிகளை தோற்கடிக்க முடியாது என்று கூறிய ரெலோவின் கரங்களை பலப்படுத்த வாக்களியுங்கள்" என்று திரு. சிவாஜிலிங்கம் பிரசாரம் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கிழக்குக்கு விரைவில் மின்சாரம்

வட கிழக்கில் மீண்டும் மின்சாரம் வழங்குவதற்கு ஒரு பில்லியன் ரூபாய் தேவைப்படுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு வெளி நாட்டு உதவி பெறப்படும் என்று இலங்கை மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடக்கைப் பொறுத்தவரை அங்கு மின்சார வினியோகத்தை துரிதப்படுத்துவது, நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தைகளின் தன்மையைப் பொறுத்திருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். கொழும்பிலிருந்து இப்பணிக்காக ஒரு குழுவினர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அவர்களுடைய பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து பல வர்த்தகர்கள் மின் உற்பத்திக்கான சிறு இயந்திரங்களைக் கொண்டு செல்வதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. கடந்த 4 வருடங்களாக வடக்கே மின்சார வசதி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கைப் பொறுத்தவரை பாதுகாப்புத்துறையினரின் அங்கீகாரம் கிடைத்ததும் அங்கு மின் வினியோகம் பூரணப்படுத்தப் பட்டுவிடும். இ.மி.சபை பொறியியலாளர்களும் வேறு அதிகாரிகளும் அங்குள்ள நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்காக அங்கு சென்றுள்ளதாக தெரிகிறது.

# ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி.

## சோமவன்ச போட்டியிடத் திட்டம்!

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனதா விமுக்தி பெரமுனையின் சார்பில் சோமவன்ச அமரசிங்க போட்டியிடக்கூடுமென அறியப்படுகிறது. இக்கட்சியின் பொதுச் செயலாளராக இவரை தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா ஏற்றுக்கொண்டுள்ளதாக உதவி ஆணையாளர் தயானந்த திசநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனதா விமுக்தி பெரமுனை 80ம் ஆண்டுகளில் அரசாங்கத்துக்கெதிரான ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டதைத் தொடர்ந்து அவ்வியக்கம் முழுமையாக நசுக்கப்பட்டது. தலைவர் ரோகன விஜேயவீர, பொதுச்செயலாளர் உபதிஸ்ஸ கமநாயக்க ஆகிய இருவருடன் அக்கட்சியின் அரசியற் குழு உறுப்பினர்கள் சகலரும் கொல்லப் பட்டனர். இக்கால கட்டத்தில் அரசியற் குழுவில் ஒருவரான சோமவன்ச, அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் பிரமுகர் ஒருவரின் உதவியுடன், நாட்டைவிட்டு வெளியேறி பிரிட்டனில் வாழ்ந்தார். அக்காலத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்ன, சோமவன்சவைக் கைது செய்வதற்காக எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை.

ஜே.வி.பியின் தலைமைப்பீடத்தைக் கைப்பற்றுவதற்கு வேறு பலர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலிக்கவில்லை. இப்பொழுது சோமவன்சவே இக்கட்சியின் தலைமைக்கு ஏற்றவர் என்று நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல் ஆணையாளர் இவருக்கு அங்கீகாரம் அளித்துள்ளதாகத் தெரிகிறது.

# பொன்னம்பலம் மறைவுக்கு

## புலிகள் அஞ்சலி

கொழும்பில் 16.09.94அன்று மரணமான டாக்டர் சுப்பிரமணியம் பொன்னம்பலம் மறைவுக்கு யாழ்ப்பாணத்தில் புலிகள் அஞ்சலி தெரிவித்துள்ளனர்.

"சிறந்த சத்திரசிகிச்சை நிபுணரான பொன்னம்பலம் 1976ம் ஆண்டு 'யாழ் பொது மருத்துவமனைக்கு மாற்றலாகி வந்தார். இவ்வாண்டு முற்பகுதியில் சுகவீனமாகி கொழும்பு செல்லும் வரை 18 ஆண்டுகள் தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்கு சேவை புரிந்துள்ளார். இந்தியப் படைகளால் யாழ்ப்பாணம் முற்றுகையிடப்பட்டு யாழ் வைத்தியசாலையில் படுகொலை இடம்பெற்ற வேளையில் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் யாழ் மருத்துவமனையில் கடமை புரிந்தார். அவர் செய்த மருத்துவ சேவையை இந்த மண் எப்போதும் மறக்காது" என்று புலிகளின் அரசியல் பிரிவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "தமிழுக்கில்லை உரிய இடம்!"

கல்வி, உயர் கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட தேசிய பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு போட்டிகளுக்கான அழைப்பிதழில் தமிழுக்கு உரிய அந்தஸ்து அளிக்கப் படாததையும், நிகழ்ச்சி நிரலில் தமிழ் இடம் பெறாததையும் சுட்டிக்காட்டியும், இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை கிராம அபிவிருத்தி அமைச்சினால் நடாத்தப்பட்ட தேசிய விளையாட்டு விழாவிற்கு அனுப்பப்பட்ட அழைப்பிதழில் தமிழுக்கு உரிய அந்தஸ்து அளிக்கப்படாததை சுட்டிக்காட்டியும், வருங்காலத்தில் மேற்படி அமைச்சுக்களால் அனுப்பப்படும் கடிதங்கள், அழைப்பிதழ்கள் போன்றவற்றிலும், வெளியீடுகளிலும் தமிழுக்கு சம உரிமை வழங்கும்படியும் கேட்டு இவ்வமைச்சுக்களுக்கு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பா.உ கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

# திருமலை நகரசபையில் காசோலை மோசடி?

(சஞ்சயன்)

திருகோணமலை நகராட்சிமன்றத்தில் பொருட்கள் கொள்வனவின் போது பண மோசடிகள் இடம் பெற்றிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. கடந்த மாதத்தில் ஐந்து வெற்றுக் காசோலைகள் கையெழுத்திட்டுக் கொடுக்கப்பட்டதாகவும் இவற்றில் இரண்டு கட்டளை இடப்பட்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் இடை நடுவில் உள்ள மூன்று தொடரிலக்கக் காசோலைகள் திரும்பவும் ஒப்படைக்கப்பட்டதாகவும் நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இக்காசோலைகள் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் தரநிர்ணயம் சந்தேகத்துக்குரியதாக இருக்கின்றது. இந்த விடயங்கள் தற்போது கணக்காய்வாளர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் நகர சபைத் தலைவர் பெயரும் செயலாளர் பெயரும் பலமாக அடிபடுகின்றது.

இதன் எதிரொலியாகக் கடந்த வாரம் இடம் பெற்ற நகராட்சிமன்ற மாதாந்தக் கூட்டத்தில் நகரசபைத் தலைவர், உறுப்பினர்களின் சரமாரியான கேள்விக்கணைகளுக்கு இலக்கானார். ஐ.தே.கட்சி உறுப்பினரான ஜனாப். எம்.நூர் முகமட் கேள்விக்கணைகளை ஆரம்பித்து வைக்க ஆளும் ரெலோ உறுப்பினரான திரு. நந்தகுமாரன் சேர்ந்து கொண்டு தலைவரை திணறடித்து விட்டார்கள். நகராட்சி மன்றத்தின் நிர்வாகம் தலைவரிடமா? அல்லது செயலாளரிடமா? என்றும் கேட்டுத் துளைத்துவிட்டார்கள்.

சென்ற கூட்டத்தின் போது நகராட்சி மன்றத்துக்கு பணம் சேகரித்துத் தந்த 'ஏந்தல்' என்று புகழப்பட்ட அதே செயலாளர் இந்தக் கூட்டத்தில் 'மோசடிக்காரன்' என வர்ணிக்கப்பட்டார். நகராட்சிமன்றத் தலைவரோ, செயலாளர் விடுமுறையில் சென்றுள்ளதாகவும் அவரே இந்த மோசடிக்கும் பொறுப்பு என்று பதில் கூறி தற்காலிகமாகத் தப்பித்துக்கொண்டார். எனினும் இந்த மோசடியில் நகராட்சி மன்றத் தலைவருக்கும் பங்குண்டு என மக்கள் கூறுகின்றார்கள்.

# புதிய அரசாங்கம் நடவடிக்கை

## ராஜதந்திர வட்டாரங்களில் பாரிய மாற்றங்கள்!

ஓய்வு பெற்ற பொலிஸ் உயர் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், உயர் நீதியரசர்கள் ஆகியோரை பிற நாடுகளுக்கு தூதுவர்களாக அனுப்பி வைப்பதற்கு எதிரான தீர்மானத்தை அரசாங்கம் எடுத்திருக்கிறது. தூதரகச் சேவையினை தொழிலாகக் கொள்ளாத-தற்போதுள்ள தூதுவர்களில்- இருவரைத்தவிர ஏனையோரை உடன் நாடு திரும்புமாறு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது கனடாவில் உயர்ஸ்தானிகராகவுள்ள குடிவரவுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளர் திரு.வோல்டர் பெர்னாண்டோ மற்றும் திரு.டி.பி. விஜேதுங்காவின் கிராமமான பிலிமத்தலாவயைச் சேர்ந்தவரான டாக்டர் ஜி.ஜி.எம். குருஜாபதி ஆகியோரே திருப்பி அழைக்கப்படாதவர்களாவர்.

ஓய்வு பெறும் நிலையிலுள்ள பொலிஸ் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள் நீதியரசர் போன்றோரை தூதுவர்களாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் நிலைமையினால் அவர்கள் தங்கள் கடமைக் காலங்களில் சுதந்திரமாக நடக்க முடியாத நிலை உருவாக வாய்ப்புண்டு என்று அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

பிரதமர் சந்திரிக்கா குமாரதுங்காவுக்கும் வெளி விவகார அமைச்சர் திரு. லெக்ஷ்மன் கதிர்காமர் அவர்களுக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்தே அரசாங்கம் இம்முடிவினை மேற்கொண்டது. இந்த வாரம் வெளி விவகாரம் தொடர்பான சேவைகள் அனைத்தையும் இருவரும் தெளிவாக ஆராய்ந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் தூதராக இருந்த டாக்டர் ஆனந்த குருகே, ரஷ்யாவில் தூதுவராகவிருந்த நிசங்கா விஜேரத்ன போன்றோர் தங்கள் கடமைக்குரிய கால எல்லை முடிவடைந்தமையினால் நாடு திரும்பிவிட்டனர்.

இராஜ தந்திரத் துறையினைச் சாராத நிசங்க விஜேசுந்தர (அவுஸ்திரேலியா), எ.எம். ஹனிஃபா (பங்களாதேஷ்), சிசில் வைத்திய ரத்ன (தாய்லாந்து), ஏர்னஸ்ட் பெரேரா (மலேசியா), எம்.ஐ.அகமட் (சவுதிஅரேபியா) மற்றும் ஹெட்டியாராச்சி (ஃபிரான்ஸ்) ஆகியோர் தூதுவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

முன்னாள் வெளியுறவுச் செயலாளர் பேர்னார்ட் திலகரத்னா இரண்டாவது தடவையாக இந்தியத் தூதுவராக கடந்த மாதம் அனுப்பப்பட்டார். அவரும் திரும்பி அழைக்கப்பட்டுள்ளார்.

சில தூதுவர்களுக்கு தங்கள் கடமைகளை முடித்துத் திரும்ப அக்டோபர் 31 வரையும் வேறு சிலருக்கு டிசம்பர் 1ம் திகதிவரையும் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. திரும்ப அழைக்கப்பட்டுள்ள தூதுவர்களுக்கான செப்டம்பர், அக்டோபர் மாதங்களுக்கான மாத வேதனம் மட்டுமே வழங்கப்படும் என்றும் பிறநாடுகளில் சேவை புரிவதற்கான பிரத்தியேகப் படி வழங்கப்பட மாட்டாதெனவும் அதிகாரிகள் கூறினர்.

## சட்டத்தோடு விளையாடும் திணைக்களங்கள்

(திருமலை நிருபர்)

திருகோணமலையில் கொந்தராத்து வேலைகளை பிறருக்குக் கொடுக்க விரும்பாமல் அந்தந்தத் திணைக்கள சிரேஷ்ட ஊழியர்களே செய்து வருகின்றனர்.

சிறிய கட்டடங்கள் அமைத்தல், நீர்க்குழாய்கள் இணைத்தல், பாதைகளைச் செப்பனிடுதல் போன்ற சிறிய வேலைகளை அந்தந்தத் திணைக்கள ஊழியர்களே சட்டத்துக்கு முரணான வகையில் செய்து இலாபமடைகின்றனர்.

மேற்படி வேலைகளை சிறிய கொந்தராத்துக்காரர்களுக்கோ கிராமோதய சபையினருக்கோ சட்டப்படி ஒப்பந்தம் செய்துவிட்டு தாங்களே எடுத்துச் செய்துவிட்டு சிறியதொரு தொகையை கமிஷனாகக் கொடுத்து சமாளித்து வருகிறார்கள்.

அதிகாரிகளே வாய் கூசாமல் 'உங்களுக்கு ஒப்பந்தப்படுத்துவதானால் நாங்கள் தான் வேலை செய்வோம். ஐந்து வீதக் கமிஷனை உங்களுக்குத் தந்து விடுகிறோம்' என்கிறார்களாம்.

"நாங்கள் ஒப்பந்தம் செய்யும் வேலைகளை நாங்களே செய்வோம்" என்று அடம் பிடித்த சில கிராமோதய சபைகள் அடுத்த முறை ஒப்பந்தமொன்றைச் செய்து புதிய வேலைகளைப் பொறுப்பேற்க முடியாத அளவுக்கு மேற்படி திணைக்கள 'முதலை' களால் திட்டமிட்டு நஷ்டப்படுத்தப் பட்டுள்ளனராம்.

இதனால் கிராமோதய சபையினரும் சிறு கொந்தறாத்துக்காரர்களும் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளிக்க வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளனர்.

## திருமலையில் அனல் மின் நிலையம்

திருகோணமலையில் அனல் மின் நிலையம் ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பாக கனடா நிறுவனம் ஒன்றுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பூர்த்தியடைந்துள்ளதென்று இலங்கை மின்சார சபையின் பிரதி பொதுமுகாமையாளர் திரு.பந்துல திலக்கசேன தெரிவித்துள்ளார்.

உத்தேச மின் நிலையத்திற்கு தேவையானளவு கெந்தகம் குறைந்த நிலக்கரியை அவுஸ்திரேலியாவிலிருந்து பெற்றுத் தருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இம்மின் நிலையத்தில் திட்டமிட்டபடி மின் உற்பத்தி செய்யப்படும் பட்சத்தில் தேவைக்கதிகமானவற்றை ஹபரணை வழியாக அனுராதபுரம்வரை எடுத்துச் செல்லக்கூடிய வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## இலங்கையின் கடற் பரப்பளவு விரிவடையும்

இதுவரை இலங்கைக்கு சொந்தமாக இருந்துவந்த 200சதுரமைல் கடற்பரப்பு தற்போது 350 000 சதுர மைலாக விரிவு படுத்தப்பட்டுள்ளது.

இக் கடல் பரப்பு விஸ்த்தீரணம் குறித்து வெளி விவகார அமைச்சின் ஆலோசகரான திரு.ரொகான் பெரேரா கருத்து வெளியிடும் போது 1982ம் வருடம் ஐ.நா. அமைப்புடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி நமது நாட்டிற்கு 200, மைல் கடற்பரப்பே இதுவரை சொந்தமாக இருந்து வந்ததாகவும் நமது நாட்டைச் சூழவுள்ள கடற் பிரதேசத்தை கருத்திற் கொண்டு 1994ம் வருடம் எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை பரிசீலனை செய்த ஐ.நா.அமைப்பு 1994 ஜூலை 19ம் திகதி தொடக்கம் எமது கடல் பரப்பளவை 350 000 சதுர மைலாக அங்கீகரித்துள்ளது என்றும், இக் கடற்பரப்பில் அமையப் பெற்றுள்ள கனிவளங்களையும் உயிரினங்களையும் நமது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடிய வாய்ப்புகள் அதிகமுள்ளதாகவும் தெரிவித்தார்.

### நுவரெலியா அவதி

## தமிழ் அரசகரும மொழிதானா?

அரசு தமிழ் அரசகருமமொழி என அங்கீகாரமளித்துள்ளது. ஆனால் நடைமுறையில் தமிழ் அரசகரும மொழிதானா என்ற ஐயப்பாடே தோன்றுகின்றது. உதாரணமாக நுவரெலியா மாவட்ட திணைக்களங்களில் நடைபெறும் சம்பவங்கள் இதற்கு தக்க சான்றாகும். நுவரெலியா மாவட்டத்தை பொறுத்தவரை தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதி என்றுதான் சொல்ல வேண்டும். ஆனபோதும் கல்வி மற்றும் பல திணைக்களங்களில் இருந்து அனுப்பப்படும் சுற்று நிருபங்கள், கடிதங்கள் போன்றன பெரும்பாலும் சிங்களத்திலேயே அனுப்பப் படுகின்றன.


மொழி புரியாத எம்மவர்கள் சிங்கள மொழி தெரிந்தவர்களின் துணைகொண்டு சுற்று நிருபங்களை, கடிதங்களை மொழி பெயர்த்து பதில்களை சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் எழுதி அனுப்புகின்றார்கள். இது திணைக்கள ஊழியர்களுக்கு மேலும் வாய்ப்பாக அமைந்து விடுகின்றது.

அவர்கள் தாம் பிடித்த முயலுக்குத்தான் மூன்று கால்' என நினைத்து தொடர்ந்தும் சிங்களத்திலேயே கடிதப் போக்குவரத்துகளை வைத்துக்கொள்கின்றார்கள். இது விடயத்தில் நாங்கள் சற்று சிந்திக்கவேண்டும். தமிழ் அரசகரும மொழி என்பதால் சுற்று நிருபங்கள், கடிதங்கள் இவற்றுக்கான பதில்களை நாம் தமிழ் மொழியிலேயே எழுதுவதோடு, தமிழ்மொழி அமுலாக்கத்திற்கு நாங்கள் அனைவரும் ஒன்றுபட்ட ஒத்துழைப்பை வழங்குவது அவசியம்.

இல்லையேல் எங்கள் உரிமைகளை நாங்களே விட்டுக்கொடுக்கும் நிலைக்கு தள்ளப்படுவோம் என்பது வெளிப்படை.

துரைசாமி நடராஜா-புசல்லாவ.

### பேரன்பு கொண்டோரே நீவிர் பிரிந்து சென்று ஈராண்டு சென்றதன்றோ!



| சுப்பிரமணியம் கந்தவனம் | | கந்தவனம் தில்லைநாச்சியார் |
|---|---|---|
| தோற்றம்: | 21.11.1921 | 08.07.1931 |
| மறைவு: | 29.04.1992 | 29.09.1992 |

நெஞ்சம் நிறைந்த உங்கள் நினைவுடன் வாழும்-
மக்கள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.
256/30, உட்துறைமுக வீதி,
திருகோணமலை.


### விளம்பரப் பகுதி



**மலையாள மாந்திரீகம்**

27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையான மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

- நிறைவேறாத காதல் வசியம்- 100/97
- கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
- கணவன் மனைவி பிணக்கு- 100/45
- பெற்றோர் விரும்பாத காதல்-100/87
- குத்தகை குடியிருப்போர் பிரச்சனை-100/33
- தீரா ஆஸ்துமா நோய்- 100/100
- திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
- குடிபோதை நிவர்த்தி- 100/97
- கல்வி ஞான விருத்தி- 100/72
- சகல வியாபார விருத்தி- 100/83
- மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
- புத்திர பாக்கியம்-100/33
- பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

**தலைமைப்பீடம்**
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3039

**கொழும்பு இல்லம்-**
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464



### நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு | ரூபா 440/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் | ரூபா 225/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் | ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.
சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.



# DIPLOMA IN FINANCIAL TRAINING

## நிதித்துறையில் டிப்ளோமா பயிற்சிப் பாடநெறி

REGISTRATION No.W/A 3596

### யாருக்கு?

1. தொழில் தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு.
2. சுய தொழில் பார்ப்பவர்களுக்கு அல்லது சுயதொழிலில் ஈடுபட விரும்புகின்றவர்களுக்கு.
3. தொழில் செய்து கொண்டிருப்பவர், எனினும் முன்னேற வாய்ப்புக்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு தமிழ் மொழி மூலம் முதன் முறையாக இப்படியான ஒரு பாடத்திட்டத்தை வகுத்து, இதுவரையில் நான்கு தொகுதியினர்களை வெற்றிகரமாகப் பயிற்றுவித்த, அனுபவமிக்க பட்டயக் கணக்கறிஞர்களால் (CHARTED ACCOUNTANTS) இந்த 06 மாத காலப் பயிற்சிப் பாடநெறி மீண்டும் 02.10.1994ல் ஆரம்பமாகின்றது. ஆகக் குறைந்த கல்வித் தகைமை G.C.E. O/L.

### கற்பிக்கப்படும் பாடங்கள்

1. கணக்கியல் (Accountancy)
2. கிரயக்கணக்கியல் (Costing)
3. கணக்காய்வு (Auditing)
4. வரியியல் (Taxation)

**மாணவர் பதிவு**
**நடைபெறும் தினம்: 94.10.02**

இடம்-கொட்டாஞ்சேனை பிரின்ஸ் கல்லூரி

இப்பயிற்சிப் பாடநெறியைப் பின்பற்றுவதால் பின்வரும் தொழில்களைப் பெற வாய்ப்பு ஏற்படும்:

| | | |
|---|---|---|
| * Accounts Clerks | * Tax Assistants | * Accounts Executives |
| * Bank Clerks | * Wages Clerks | * Accounts Assistants |
| * Cost Clerks | * Store Keepers | * Audit Clerks |
| * Stores Clerks | * Book Keepers | * General Clerks |

வகுப்புகள் பிரதி ஞாயிறு தோறும் நடைபெறுவதால் தூர இடங்களில் இருப்போரும் இலகுவாகப் பங்குபற்றலாம்.
VENUE: கொட்டாஞ்சேனை பிரின்ஸ் கல்லூரி (கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தையடுத்து)
♥ வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் பயிலுநர்களுக்கு சான்றிதழ் ♥ செயன்முறைப் பயிற்சி

இலவசமாக **ETF., EPF., GRN, PRO, MRF, INVENTORY RECORD, LEDGER SHEETS, VOUCHERS, CASH MEMOS, CREDIT INVOICE** போன்றவை வழங்கப்படும். இப்பயிற்சி நெறியைப் பின்பற்றுவோர் இடையில் வேறு ஏதேனும் பரீட்சைக்குத் தோற்ற விரும்பினால் (உ+ம்) **GOVERNMENT CLERICAL EXAM, GOVT. TEACHERS EXAM, BANKERS ENTRANCE EXAM etc.** எவ்வித கட்டணமும் இன்றிப் பயிற்சி அளிக்கப்படும்.

**மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்த ஆங்கிலப் பாடநெறி இலவசமாக நடத்தப்படும்**

விபரங்களைப் பெற விரும்புவோர் சுயமுகவரியுடன் கூடிய ரூபா எட்டு 8/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட (9x5) கடித உறையுடன் தொடர்பு கொள்ளவும்.
விபரங்களை நேரடியாகப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் ஞாயிறு தினத்தில் மட்டும் கொட்டாஞ்சேனை பிரின்ஸ் கல்லூரிக்கு வருகை தரவும்.

FTB

**DIRECTOR OF STUDIES,**
**FINANCIAL TRAINING BASE,**
S-71, 3rd FLOOR, (CENTRAL SUPER MARKET COMPLEX)
**COLOMBO-11**

முக்கிய கவனிப்பு- இலங்கையில் எமக்கு வேறு எந்த இடத்திலும் கிளைகள் கிடையாது.

Advt.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே நாரதர் ரிப்போர்ட்



# அரசு-புலிகள் பேச்சு விவேகமா-வியூகமா?

## முஸ்லிம்கள் பிரச்சனையும் பிரபாவின் பேட்டியும்

நிகழ்ச்சிகளின் வாலைப் பிடித்துத் தொங்கிச் செல்லும் விமர்சனப் போக்கு ஒன்று இருக்கிறது.

இப்போதும் அது பரவலாகத் தலை காட்டுகிறது.

புதிய அரசாங்கம் வந்திருக்கிறது. பொதுவாக எல்லோருமே வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

கீழ் வானம் சிவக்குமா? சிவக்கும் போலத்தான் தெரிகிறது என்று சொல்லாவிட்டால் அது அபசகுனமாகக் கருதப்படும்.

சிவக்காது என்று நினைக்கக்கூடிய காரணங்கள் இருந்தாலும் சொல்ல நாக் கூசுகிறது.

அரசையும்-புலிகளையும் விரோதிக்க வேண்டி வருமே- ஏன் வம்பு என்ற பயமும் இல்லாமல் இல்லை.

அரசின் போக்கில் அவநம்பிக்கை தெரிவித்தால் அரச விரோதி என்ற பெயர்வரும்.

புலிகளது போக்கில் முரண்பாடு இருக்கிறது என்று சுட்டிக்காட்டினால் தமிழின விரோதி என்று பட்டம் கொடுக்க ஆட்கள் இருக்கிறார்கள்.

எனவே வானம் சிவக்கும்தான் என்று எழுதிவிடுவது வசதி.

அடேயப்பா சமாதானத்தில் எத்தனை அக்கறை என்று பாராட்டுக் கிடைக்கும்.

துரதிஷ்டவசமாக அந்தப் பாராட்டைப் பெறமுடியாத ஒரு கண்ணோட்டத்தை செலுத்த வேண்டியிருக்கிறது.

பேச்சுவார்த்தை பற்றிய செய்திகள் அடிபடுகிற அளவுக்கு பேச்சுவார்த்தைக்குரிய முக்கிய விசயங்கள் முகம் காட்டவில்லை.

உதாரணமாக வடக்கு-கிழக்கு இணைப்பு நிரந்தரமாக இருக்கவேண்டும் என்பது புலிகள் உள்ளிட்ட சகல தமிழ் கட்சிகளதும் பிரதானமான கோரிக்கை.

வடக்கு-கிழக்கு இணைந்த தமிழ் பேசும் மக்களது தாயகம் என்ற அடிப்படையை புலிகள் எக்கட்டத்திலும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களது தாயகம் என்ற கோட்பாடு பற்றி தவறான விளக்கங்கள் கொள்ளக்கூடிய நிலை இருக்கிறது.

பொதுஜன முன்னணிக்குள் வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்ற விடயத்தில் ஒருமித்த கருத்துக் காணப்படவில்லை.

பிரதமர் சந்திரிக்காவும் இதுவரை ஒரு தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை.

ஆனால், தற்போது அமைச்சுப் பொறுப்பு எதுவும் இல்லாத அமைச்சராக உள்ளவரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பொதுத் தேர்தலுக்கு முன்னர் பௌத்தபீடாதிபதிகளுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தில் வடக்கு-கிழக்கு இணைந்திருக்க தமது கட்சியோ பொ.ஜ. முன்னணியோ சம்மதிக்காது என்றே தெரிவித்திருந்தார்.

ஆனால், பிரதான நம்பிக்கை பிரதமர் மீதே இருப்பதால் அம்மையாரின் கருத்துப் பற்றி கவலைப்படத் தேவையில்லை என்று சொல்லலாம்.

என்றாலும், அம்மையாரின் கருத்து மறுக்கப்படாதது மட்டுமல்லாமல், மாற்றுக் கருத்து எதுவும் பொ.ஜ.முன்னணியால் இதுவரை முன்வைக்கப்படவில்லை.

இதுபற்றியெல்லாம் ஏனைய தமிழ்-முஸ்லிம் கட்சிகள் கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

பிரேமதாசா இருந்தவரை முதலில் புலிகளும், பின்னர் ஏனைய தமிழ்-முஸ்லிம் கட்சிகளும் அவரைப் பாராட்டுவதில் ஒரு போட்டியே நடத்திக்கொண்டிருந்தன.

பின்னர் கடந்த பொதுத் தேர்தலில் அவர்கள்தான் அரசாங்கத்தின் ஆட்கள், இவர்கள்தான் அரசாங்கத்தின் ஆட்கள் என்று ஒருவரை ஒருவர் திட்டியும் தீர்த்தன.

இப்போது புதிய பிரதமரை பாராட்டுவதில் ஒரு போட்டி ஆரம்பித்திருக்கிறது போலத் தெரிகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் இந்தப் போட்டியில் மிக விருப்பத்துடன் கூட்டுச் சேர்ந்திருக்கிறது.

கடைசியாக புலிகளின் தலைவர் பிரபாகரனும் அந்தப் போட்டியில் மறைமுகமாகக் குதித்திருப்பதுதான் அமோகமான திருப்பம்.

பி.பி.சி. செய்தியாளர் பிரபாகரனிடம் பேட்டி எடுக்கும்போது, வடக்கு-கிழக்கு இணைப்பை பிரதமர் ஏற்றுக்கொள்ளவில்லையே என்று கேட்டார். அதற்கு பிரபாகரன் அதனை பிரதமரிடம் பேசி அறியவேண்டும். அதற்கு முன் பதிலளிப்பது விவேகமல்ல என்று கூறியுள்ளார்.

இதனையே ஏனைய தமிழ் அமைப்புத் தலைவர்கள் கூறியிருந்தால் துரோகம் என்று அர்த்தப்படுத்தப்பட்டிருக்கும்.

பிரபா கூறியதால் விவேகம் என்று விளக்கம் சொல்லப்படலாம்.

ஆனால்-பிரதமர் அவ்வாறு கூறியிருந்தால் அது தவறு. பேச்சுக்கு அடிப்படையே அதுதான் என்று பிரபா ஏன் கூறவில்லை என்பது யோசிக்கப்படவேண்டியது.

மிக அடிப்படையான விசயங்களையெல்லாம் பின்னே தள்ளிவைத்துவிட்டு முதலில் தெரு போடுவது, மின்சாரம் போடுவது பற்றிய பேச்சுக்களும், போடுவோம் என்று பிரதமர் சொல்ல, போடுவதை வரவேற்போம் என்று பிரபா சொல்ல அதுவே பெரிய திருப்பம் என்று தலைப்புச் செய்திகளாவதும் எதுவரை நீடிக்கும் என்ற சந்தேகம் வரவே செய்கிறது.

முன்னர் பிரேமா அரசோடு புலிகள் நடத்திய பேச்சுவார்த்தையிலும் முதலில் அடிப்படை விசயங்கள் ஆராயப்படவில்லை.

வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தைவிட, மாகாணசபை கலைப்பு விடயத்தையே புலிகள் வற்புறுத்தினார்கள்.

பிரேமா அரசும் தமக்கும் அது தேவையாக இருந்தமையாலும், வடக்கு-கிழக்கு மாகாண அரசில் இருந்த கட்சியின் இயலாமையைச் சாதகமாகக் கொண்டும் வடக்கு-கிழக்கு மாகாண சபையைக் கலைத்தது.

அதுமட்டுமல்லாமல் புலிகள் தமக்குத் தேவையான ஆயுதங்களில் ஒரு பகுதியையும் பெற்றுக்கொண்டார்கள்.

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தை வாபஸ் பெறுமாறு புலிகள் முன்வைத்த அரசியல் கோரிக்கையை பிரேமா அரசும் கவனிக்கவில்லை. புலிகளும் பேச்சு முறியும் கட்டத்தில்தான் அதனை வலியுறுத்தினார்களே தவிர, பேச்சின் இனிப்பான கட்டத்தில் வற்புறுத்தவில்லை.

அந்தப் பேச்சுவார்த்தையினால் தமிழ் பேசும் மக்களது அரசியல் நலன்களுக்கு எவ்வித லாபமும் கிடைக்கவில்லை.

ஆனால், பிரேமா அரசுக்கும், புலிகள் அமைப்புக்கும் லாபங்கள் கிடைக்கவே செய்தன.

இப்போதும் அரசும்-புலிகளும் பேச்சுவார்த்தை என்ற சீசன் ஆரம்பிக்கக்கூடிய அரசியல் வானிலை காணப்படுகிறது.

பேசப்போகும் முகங்கள் புதியவை.

புலிகள் தரப்பில் மாத்தையாவுக்குப் பதிலாக கரிகாலன்.

அரச தரப்பில் பிரேமதாசாவுக்குப் பதிலாக சந்திரிக்கா. ரஞ்சனுக்குப் பதிலாக அநுர ரத்வத்த.

பாவம் ஜனாதிபதி! அவரும் ஒரு பார்வையாளராக- என்று முடியும் பதவிக்காலம் என்று நாட்களை எண்ணியபடி இருக்கிறார்.

அவரும் இப்படியொரு முயற்சியை செய்திருக்கலாம். முயலவில்லை.

28 பாவனைப் பொருள்கள்மீது அவராலும் தடையை விலக்கியிருக்க முடியும்.

தெருப் போடவும், குளம் திருத்தவும், மின்சாரம் கொடுக்கவும் எற்பாடு செய்திருக்க இயலும்.

எப்போது செய்திருக்க வேண்டுமென்றால்- அவர் ஜனாதிபதியானவுடன் செய்திருக்க வேண்டும். இனப்பிரச்சனை கிடையாது என்று பேசிவிட்டு பின்னர் செய்திருந்தால் அதற்கு வரவேற்பிருந்திருக்காது.

பிரதமர் சந்திரிக்காகூட இன்னும் ஒரு பத்துமாதம் சென்றபின் பாவனைப் பொருள் தடையை விலக்கியிருந்தால் இப்போதுள்ள பிரமிப்பான வரவேற்பு அப்போது கிடைக்காமல் இருந்திருக்கலாம்.

பொருத்தமான நேரத்தில் சந்திரிக்கா பந்தை வீசியிருக்கிறார்.

ஆனால், விக்கெட்டை நோக்கி வீசாமல், எதிர்தரப்பில் உள்ளவர் மட்டை போட்டு ஆட்டத்தை நீடிக்கும் விதமாக பந்து வீசப்பட்டுள்ளது.

அதே போலத்தான் பிரபாவும் பந்தை வீசியுள்ளார்.

இரு தரப்புமே ஒருவரை ஒருவர் உடனடியாக 'அவுட்' ஆக்க விரும்பவில்லை.

ஆனால், தொடர்ந்தும் இப்படியே ஆடிக்கொண்டிருக்க முடியுமா?

அடிப்படை பிரச்சனைகள் பற்றி பேசத் தொடங்கும் போதுதான் உண்மையான ஆட்டம் ஆரம்பமாகும்.

அப்போது பந்துகள் விக்கெட் நோக்கித்தான் வீசப்படும்.

இப்போதே பிரதமர் சந்திரிக்காவை கேட்கக்கூடிய 'வடக்கு-கிழக்கு தாயகக் கோட்பாட்டுக்கு சம்மதமா?' 'சமஷ்டித் தீர்வுக்கு வரமுடியுமா?' என்பதையெல்லாம் புலிகள் தமக்கு வசதியான ஒரு நேரத்தில் கேட்க நினைக்கிறார்கள்.

கதையின் முடிவு முன்னரே தெரிந்தாலும் நாலு பாட்டு, நாலு சண்டைக்காட்சி, நகைச்சுவைக் காட்சிகள் என்று 2 1/2 மணிநேரம் எடுக்கப்படுகின்ற சினிமாப்படம் மாதிரித்தான் இதுவும்.

இதை இப்போது எழுதும்போது ஜீரணிப்பது கஷ்டமாக இருந்தாலும் உண்மையை சொல்லி வைப்பது கடமை.

பி.பி.சி. பேட்டியில்கூட பிரபாகரன் புதிதாக எதையும் கூறவில்லை. சென்றவார எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் எழுதியது போல ஒரு வரையறைக்குள் நின்று, சொன்னதையே திருப்பிச் சொல்லியிருக்கிறார்.

ஒரு மூன்று வாரங்களுக்கு முன்னர் திரு.அன்ரன் பாலசிங்கம் தனது பேட்டியில் எதைச் சொன்னாரோ அதையே திருப்பிச் சொல்லியிருக்கிறார் பிரபாகரன். அதற்கேற்பவே சகோதரி ஆனந்தியும் கேள்விகளை அமைத்துக்கொடுத்திருந்தார்.

பேட்டி கொடுத்தது பிரபாகரன் என்பதால் என்ன சொல்லப்படுகிறது என்பதைவிட எவர் சொல்கிறார் என்ற அடிப்படையில் பார்க்கப்பட்டது.

"முஸ்லிம்களை வெளியேற்றியது பற்றி வருந்துகிறோம்" என்று பிரபா கூறியிருந்தார்.

உடனே அரச சார்பு பத்திரிகைகள் பிரபாவின் நல்லெண்ணம் என்று பாராட்டியுள்ளன.

ஆனால்-அப்படி வருந்தும் பிரபாகரன் தம் வசம் உள்ள 38 முஸ்லிம்களையும் ஏன் இன்னும் விடுதலை செய்யவில்லை என்று அவை யோசிக்கவில்லை.

யாழ் முஸ்லிம் அகதிகள் தமது சொந்த பகுதிகளுக்கு திரும்புவது பிரச்சனையல்ல. ஆனால் தமிழ் அகதிகள் தமது சொந்தப் பகுதிகளுக்கு திரும்பிச் சென்றபின்னரே முஸ்லிம் அகதிகள் திரும்பவரலாம் என்று அன்ரன் பாலசிங்கம் கூறியிருந்தார். அதையே பிரபாவும் கூறியிருக்கிறார்.

தமிழ் அகதிகள் பிரச்சனையை முஸ்லிம் அகதிகள் பிரச்சனையோடு முடிச்சுப்போடுவது எவ்வகையிலும் சரியல்ல.

வடக்கே தமிழர்கள் அகதிகளானதற்கு முஸ்லிம்கள் காரணமல்ல.

"தமிழ-முஸ்லிம் மக்களது தாயகம் வடக்கு-கிழக்கு" என்று தனது பேட்டியில் கூறியுள்ள பிரபாகரன் முஸ்லிம்கள் அகதிகளாக அந்த தாயகத்திற்கு வெளியே வாழட்டும் என்று நினைப்பது முரண்பாடாக இல்லையா?

தீவுப் பகுதியில் இருந்து இராணுவம் வெளியேறினால்தான் அங்கு தமிழர்கள் செல்ல அனுமதிப்போம் என்பது புலிகளது நிலைப்பாடு.

ஆனால் யாழ்-முஸ்லிம்கள் மட்டும் இராணுவம், பொலிஸ் உள்ள புத்தளம் போன்ற பகுதிகளில் அகதிகளாக இருக்கட்டும் என்றுமட்டும் அனுமதிக்கலாமா?

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதி 'சவூதி' என்று தற்போது அழைக்கப்படுகிறது.

அங்கே இருப்பது இடம்பெயர்ந்த தமிழ் மக்களல்ல. புலிகள் அமைப்பின் வெளிமாவட்ட உறுப்பினர்களது குடும்பங்களே என்பதுதான் உண்மையாகும்.

அதுமட்டுமல்ல, யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லிம்களது தொழில் நிறுவனங்கள் தற்போது புலிகளால்தான் நடத்தப்படுகிறது.

தமிழ் அகதிகள் முஸ்லிம்களது வீடுகளை பிடித்து இருப்பது போன்ற ஒரு தவறான எண்ணத்தை பிரபாகரனின் பேட்டி எற்படுத்தியிருப்பதை யாரும் கவனிக்கவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ்கூட வாய் திறக்கவில்லை. பிரபாவின் பேட்டி பி.பி.சியில் இருந்து இலங்கை வானொலியிலும் மறு ஒலிபரப்பு செய்யப்பட்டது.

அகதிகள் விடயத்தை கவனிக்கும் அமைச்சர் அஷ்ரப்கூட எந்தக் கருத்தையும் கூறமுன்வரவில்லை.

தமிழ் கட்சிகளும் மௌனமாக இருக்கின்றன.

அரசச் சார்பற்ற பத்திரிகைகளும் ஒன்றுதான். தமிழ்-முஸ்லிம் அரசியல் கட்சிகளும் ஒன்றுதான்.

அதிகாரத்தில் யார் இருக்கிறார்களோ அவர்களது மனம் கோணாமல் நடந்து கொள்வது என்பது பொது விதியாகி விட்டது.

ஐ.தே.கட்சி அதிகாரத்தில் இருந்தவரை அரசின் தகவல் தொடர்பு சாதனங்கள் புலிகளை பயங்கரவாதிகள் என்றன.

இப்போது அதே சாதனங்கள் பிரபா பி.பி.சி.க்குக் கொடுத்த பேட்டியை தேடிப்பிடித்து வெளியிடுகின்றன.

பிரபா எது சொன்னாலும் 'ஆகா-பிரமாதம். நல்லெண்ணம்' என்று தலையங்கம் தீட்டுகின்றன.

நாளை இதே சாதனங்கள் மீண்டும் புலிகளை 'பயங்கரவாதிகள்' என்று சொல்லலாம்.

வரவேற்பது என்றால் கண்ணை மூடிக்கொண்டு வரவேற்பது; கண்டிப்பது என்றாலும் கண்ணை மூடிக்கொண்டு கண்டிப்பது என்னும் போக்குத்தான் இது.

ஒரு நிகழ்வு நடந்துகொண்டிருக்கும் போதே அதில் உள்ள சரி-பிழைகளை கண்டறிந்து மக்களுக்கு சொல்ல வேண்டும் என்பதை வசதியாக மறந்துவிடுகிறார்கள்.

அப்படி யாராவது கண்டறிந்து சொன்னால் "இவர்கள் சகலதையும் குழப்புகிறார்கள்" என்று சொல்லிவிடுவார்கள்.

அரசும்-புலிகளும் தம்மைப் பாதிக்காத பிரச்சனைகளில்தான் தொட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

பொதுமக்களைப் பாதிக்கும் போக்குவரத்து விடயத்திலும் இரு தரப்பும் தம் நலன்களைப் பற்றியே யோசிக்கின்றன.

ஆனையிறவுப் பாதையை திறந்தால் போக்குவரத்து சுலபமாகும். ஆனால் புலிகள் சம்மதிக்கமாட்டார்கள்.

சோதனை இருக்கக்கூடாது என்கிறார்கள் புலிகள்.

மேலோட்டமாகப் பார்த்தால் அது பொதுமக்களுக்கான கோரிக்கைபோலத் தெரியும்.

ஆனால், ஆணையிறவில் சோதனை நடத்தப்படாவிட்டாலும், தாண்டிக்குளத்தில் கெடுபிடி இருக்கும். அதனைப்பற்றி புலிகள் பேசவில்லை.


தமது உறுப்பினர்கள் ஆயுதங்களோடு நடமாடக்கூடிய போக்குவரத்துப் பாதையைத்தான் புலிகள் கோருகிறார்கள். சோதனை கூடாது என்பதன் அர்த்தம் அதுதான்.

அதற்கு இராணுவம் சம்மதிக்காது. புலிகளுக்கு சுலபமான போக்குவரத்து தமது நலனுக்கு ஆபத்து என்று இராணுவத்தரப்பு நினைக்கும்.

முன்னர் யாழ் சென்ற ஆயர்குழு ஒன்று பிரபாவிடம் கேட்டது: தாண்டிக்குளத்தில் இராணுவம் இருக்கிறது. அதனூடாகப் போக்குவரத்தும் நடக்கிறது. பூநகரியில் இராணுவம் இருப்பதை மட்டும்

(6ம் பக்கம் பார்க்க)

## அதிரடி அய்யாத்துரை



நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி புல்லுக்கும் பொசியும் எண்டு தெரியுமல்லோ. அப்படித்தான் பாருங்கோ ரெண்டு எழுத்தாரின் தலைவரை பேட்டி எடுத்த ஆனந்தமானவவும் தலைவரோடை படம் எடுத்து பேப்பருகளுக்கு கொடுத்து விலாசம் காட்டிப் போட்டா. கேள்விகளிலை மட்டுமில்லை படத்திலையும் பவ்வியம் பளிச்சிட்டது பார்த்தியளோ. அது தானுங்கோ சொல்லுறது அடிக்கிருக்கிற மரியாதை மாதிரி மற்றது எதுக்கும் வராது எண்டு.

பொருளாதார தடை விலகிறதுக்கு மூன்றுநாள் முதல் தாண்டிக்குளம் வழியாக 'பஜிரோ' வாகனங்களுக்குரிய கண்ணாடிகள் லொறியிலை போனதாம். கவனிக்க வேண்டிய இடத்திலை கவனிச்சதாலை கண்டும் காணதமாதிரி இருந்ததாகத் தகவல். இப்ப தடை விலகின பிறகு முகம் சுளிக்கிற ஆட்களிலை முந்தி சுளையாய் உழைச்சவையும் அடக்கமாம்.

ஆட்சிமாற்றம் நடந்தாலும் நடந்தது; கிழக்கிலை இடமாற்ற விவகாரங்கள் சூடு கிளப்புதாம். அங்கை இருந்தவர் இஞ்சை, இஞ்சை இருந்தவர் அங்கை எண்டு பந்தாட்டம்தான்.

ரெண்டு எழுத்தாரோடை நடத்திற பேச்சு பற்றி கிழக்கைச் சேர்ந்த தனித்துவ தலைவருக்கு தனிப்பட்ட முறையில் திருப்தி இல்லையாம். "மேடம் பேசிப் பார்க்கட்டும்" என்று சொல்லுறார். நீங்கள் யோசனை சொல்லலாமே எண்டு கேட்டா "நான் பீஸ் வாங்காமல் அட்வைஸ் கொடுக்காத சட்டத்தரணி. என்னைக் கேட்காமல் வலியப் போய் யோசனை சொல்ல முடியுமோ?" என்று ஜோக் அடிக்கிறாராம்.

பாதை திறப்புப் பற்றி யாழ்ப்பாணச் சனம் என்ன நினைக்குது எண்டு அறிய உதாரணமான ஒரு உரையாடல். கொழும்பு விடுதி ஒண்டிலை நடந்தது இது- யாழ்வாசி: "எப்ப நீங்கள் யாழ்ப்பாணம் வருவியள்?"

நண்பர்: "ஆனையிறவுப் பாதை திறக்கட்டுமன் கட்டாயம் வருவன்."

யாழ்வாசி: " அப்ப உங்களுக்கு யாழ்ப்பாணம் வாற நோக்கமேயில்லைப் போல கிடக்கு."

எங்கடை கிரிக்கெட் அணித் தலைவரின் அப்பா ஆளும் கட்சியிலை செல்வாக்கான எம்.பி. அந்த சந்தோசத்திலைதான் மைந்தன் புகுந்து விளையாடுறாரோ? எல்லாம் கிடக்க, கால நேரம் அறியாமல் போட்டி வைச்ச ரசிகர்களை சோதனைப்படுத்துற போட்டி ஏற்பாட்டாளர்களை என்ன செய்யலாம். எங்கட வானிலை அவதானிப்பு நிலையத்திலை அவைக்கு அவநம்பிக்கை இருக்கலாம். அதுக்காக வான் நிலையும் பொய்க்கும் எண்டு நினைக்கலாமோ?

மாகாணசபை தமிழ் கட்சி செயலாளராலை இனி முடியாது எண்டுபோட்டு மு.முதல்வரை இறக்குமதி செய்ய யோசிக்கினமாம். அவர் வாறமாதிரித் தெரியேல்லை. பக்கத்து நாட்டுச் செலவிலையே மீதிக் காலத்தை ஓட்டுறதுதான் பாதுகாப்பு-படு சோக்கு எண்டு நினைக்கிறாராம்.

தமிழ் கட்சி ஒண்டு ஜனாதிபதித் தேர்தலிலை குதிக்கப் போகுதாம். செய்தியறிஞ்ச பெரிய கட்சிகளின் வேட்பாளர்களுக்கு தங்கடை வெற்றிகளில் நம்பிக்கை இல்லாமல் போச்செண்டு தகவல். இந்த முறை பலத்த போட்டிதான். இப்பிடி எழுதினா, அந்த தமிழ் கட்சிக்கு எவளவு சந்தோசமாயிருக்கும். திட்டவும் மாட்டினம். தம்பியும் வருவீர் போலத்தான் கிடக்கு' எண்டு ஆசைகாட்டி யாரை வேட்பாளராய் நிறுத்தலாம் எண்டு பலத்த யோசனை நடக்குதாம். வெல்லாட்டியும் பிறகு வழக்குப் போட்டா வெட்கம் போகுமல்லோ. பெயரும் பேப்பரிலை வந்து கொண்டிருக்கும்.

பிரான்சிலை கொல்லப்பட்ட சபாலிங்கத்தாருக்கு அவர் நண்பர்கள் அஞ்சலி நூல் வெளியிட்டிருக்கினம். (முரசில் வந்த ஆசிரியர் தலையங்கமும் அதில் உண்டு) 'ஒரு படுகொலையின் மொழி' என்பது நூலின் பெயர். அமைப்பும், உள்ளடக்கமும் வெகு சிறப்பு. துணிச்சலான முயற்சி. நூலின் முடிவில் உள்ள கருத்து நெஞ்சிலை ஆணியடிச்ச மாட்ட வேண்டியது பாருங்கோ. அது இதுதான்:

"நீ சொல்லுகிற கருத்துடன் எனக்கு
உடன்பாடில்லை. ஆனாலும்
அதைச் சொல்வதற்கான
உனது உரிமையைப் பாதுகாப்பதற்காக
எனது உயிரையும் கொடுத்துப் போராடத் தயார்"

-வோல்த்தயர்-

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# “இருபெரும் கட்சிகளிலும் இனத்துவேஷிகள் இருக்கிறார்கள்”

# “நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை ஒரு பூச்சாண்டி”

## இ.தொ.கா. தலைவர் தொண்டா முரசிற்கு அளித்துள்ள பேட்டி

**17 வருடகால அமைச்சர் பதவி. இப்போது ஓய்வு கிடைத்திருக்கிறது. பலமான வெகுஜனப் பின்னணி இருப்பதால் கவலை இல்லாமல் அடுத்த காயை எப்படி நகர்த்துவது என்று அவரால் யோசிக்க முடிகிறது. பொதுத் தேர்தலில் தோல்வி ஐ.தே.கட்சிக்கே தவிர; இ.தொ.காவுக்கல்ல என்று அவர் சொல்வதில் உண்மை இல்லாமல் இல்லை. திரு.சந்திரசேகரனின் வளர்ச்சி இ.தொ.காவுக்கு ஒரு உறுத்தல் அல்ல என்றும் தொண்டா கூறுகிறார். 81 வயதின் தளர்ச்சி இல்லாத ‘முதிய இளைஞர்’ தொண்டா, முரசின் உதவி ஆசிரியருக்கு ஒரு இதமான மாலைப்பொழுதில் மனம் திறந்தளித்த பேட்டி.**


**கேள்வி:** 82 வது வயதில் பிரவேசித்திருக்கிறீர்கள். நீண்டகால அரசியல் அனுபவத்தைக் கொண்டிருக்கும் தாங்கள் இலங்கையின் இன்றைய அரசியல் நிலவரம் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:** இதுவரைக்கும் இலங்கையில் இனத்துவேஷ அடிப்படையிலேயே அரசாங்கங்கள் ஆட்சியைக் கைப்பற்றி ஆட்சி புரிந்து வந்துள்ளன. இப்பொழுது இனத்துவேஷத்தை விட்டு பொருளாதார அடிப்படையில் நாட்டை முன்னேற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதைக் காணக்கூடியதாகவிருக்கிறது.

**கேள்வி:** ஐ.தே.க. அரசின் காலத்தில் மலையக மக்களுக்கு வாக்குரிமையும் தங்களுக்கு அமைச்சர் பொறுப்புக்களும் தரப்பட்டன. இன்று தாங்கள் எதிர்க்கட்சியில் இருக்கின்றீர்கள். இந்நிலையில் தாங்கள் ஐ.தே.க.வுடன் கொண்டுள்ள உறவு எத்தகையது?

**பதில்:** 17 வருடங்கள் ஐ.தே.கட்சியில் இணைந்து அமைச்சர் பதவி ஏற்றிருந்தமையினால் தோட்டத் தொழிலாளர்களின், பிரஜா உரிமை, வாக்குரிமை போன்ற அடிப்படை உரிமைகள் சிலவற்றையாவது பெற்றுக்கொடுக்கும் வாய்ப்பு இருந்தது.

இவை பூரணமானதல்ல. ஆனால் இதுதான் அடிப்படை. இதனை அடித்தளமாக வைத்து மக்களுடைய ஏனைய



“ஐ.தே.கட்சியுடன் எமது உறவு அன்பும் அதேநேரம் வெறுப்பும் என்ற ரீதியில் தான் இருந்தது.”

உரிமைகளைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஐ.தே.கட்சியுடனான எமது உறவு எப்போதுமே LOVE AND HATE- அதாவது அன்பும் அதே நேரம் வெறுப்பும் என்ற ரீதியில்தான் அமைந்திருந்தது. அண்மைக் காலங்களில்கூட சில சிக்கல்கள் எழுந்தன. அடிப்படை உரிமைகளை மட்டும் பெற்றால் போதாது. அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். இந்நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களைப் போன்று தோட்டத் தொழிலாளர்களும் வாழ்வதற்கேற்ற வழிமுறைகளை வகுத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கைகளை வற்புறுத்தியபோது அதற்குரிய மதிப்புத் தரப்படவில்லை. அத்தகைய எண்ணமும் அவர்களுக்கு ஏற்படவில்லை.

தேர்தலுக்கு முதல் நாளன்றுகூட ஒரு கசப்பான சம்பவம் நடைபெற்றது. வாக்குகள் எண்ணும் இடங்களில் எங்கள் சார்பில் கண்காணிப்பு முகவர்களாக சிலரை நியமித்து, உத்தியோக ரீதியிலான கடிதங்கள் வழங்கப்படவேண்டும் என்று கட்சி தலைமைப் பீடத்தைக் கேட்டுக்கொண்டோம். எமது கோரிக்கை உதாசீனம் செய்யப்படுவதை உணர்ந்து இறுதி நேரத்தில் ஓர் எச்சரிக்கையினை விடுத்தேன். தொழிலாளர்கள் எவரும் வாக்களிக்க வரக்கூடாது என்று அறிக்கையினை விடப்போகிறேன் என்று எச்சரிக்கும் அளவு நிலமை சென்றது. அந்த அளவுக்கு அந்தக் கட்சியுடன் எமது உறவு இருந்து வந்துள்ளது.

இந்நாட்டில் இப்போதுள்ள நிலையில் ஐ.தே.கட்சி அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனான கூட்டு அமைப்பு ஆகிய இரண்டு கட்சிகளில் ஒன்றுதான் ஆட்சி அமைக்க முடியும். இக்கட்சிகளில் ஏதாவது ஒரு கட்சியுடன் ஒத்துப் போவதைத் தவிர வேறு வழியில்லை. ஆகவே ஐ.தே.கட்சியுடன் இத்தனை காலம் உறவு பூண்டிருந்த போதிலும் அது அந்யோன்யமான உறவாக இருந்ததில்லை என்பதுதான் நான்கண்ட அனுபவம்.

**கேள்வி:** தங்களுடைய மகன் திரு.இராமநாதன் முன்னர் மத்திய மாகாண சபையில் ஓர் அமைச்சராக இருந்தவர். ஆனால் தங்கள் நடவடிக்கைகள் பேரப்பிள்ளையான ஆறுமுகம் தொண்டமானை அரசியல் ரீதியாக ஊக்குவிப்பதாக இருக்கின்றது. ஆறுமுகம் தொண்டமான் தங்களுடைய அடுத்த வாரிசாக வருவார் என்று பேசப்படுகின்றது. இது குறித்து என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:** இது ஒரு தப்பான கணிப்பாகும். இராமநாதன் என்னுடைய மகன் என்பதனால் அந்தப் பதவிக்கு அவர் வரவில்லை. எங்களில் பலதரப்பட்ட நிலையிலிருந்தும் பலர் முன்னேறிக்கொண்டு வருகிறார்கள். அதேபோல என் மகனும் ஒரு சந்தர்ப்பத்திலே வர நேரிட்டது. அதேபோலத்தான் என் பேரனும் சந்தர்ப்பவசத்தால்– எதிர்பாராத வேளையில் தேர்தல் வந்தமையினால்-மக்களும் விரும்பினார்கள். அவரும் தேர்தலில் நின்றார். இடைக் காலத்தில் திரு.செல்லச்சாமியால் ஏற்பட்ட சிக்கல்களில் எனக்கு உதவி புரிய வந்த என் பேரன் சந்தர்ப்பத்தால் தேர்தலில் நின்று ஜெயித்தாரேயல்லாமல் என்னால்தான் அவர் முன்னுக்குக் கொண்டு வரப்படுகிறார் என்றோ வாரிசாக உருவாக்கப்படுகிறார் என்றோ கூறுவது தப்புக்கணக்கு.

**கேள்வி:** எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தங்கள் நிலைப்பாடு (Stand) எப்படி இருக்கும்?


**பதில்:** இ.தொ.கா.எப்போதும் தனது கொள்கைக்கு மதிப்பளிக்குமேயல்லாமல் தனிப்பட்டவருக்கோ வேறு ஸ்தாபனங்களுக்கோ மதிப்பளிக்கப் போவதில்லை. நாட்டில் அமைதி நிலவவேண்டும். ஒரு ஸ்திரமான அரசாங்கம் இருக்கவேண்டும். அப்போதுதான் எமது சமூகம் போன்ற பின்தங்கிய மக்களுடைய அபிலாசைகள் நிறைவேற வாய்ப்பு ஏற்பட முடியும். ஸ்திரமான ஆட்சியை ஏற்படுத்தி அமைதியை நிலைநாட்ட இந்த இரு கட்சிகளில் எது முயற்சித்து வெற்றியீட்டுகிறதோ அக்கட்சி வெற்றிபெற நாம் ஒத்துழைப்பினை நல்குவோம். இதற்காக ஐ.தே.கட்சியைத்தான் ஆதரிப்போம் என்றோ காமினி எமக்கு வேண்டியவர் அவருக்கு உதவுவோம் என்றோ நாம் வாக்களிக்கப் போவதில்லை. எமது சமூகத்துக்கு வேண்டிய உரிமைகளை எவர் பெற்றுத் தருவாரோ அவரையே நாம் ஆதரிப்போம்.

**கேள்வி:** இலங்கையில் கடந்த 17 வருட காலமாக நிலவிய ஐ.தே.க. ஆட்சிபற்றி என்ன கூறுகின்றீர்கள்?

**பதில்:** ஐ.தே.கட்சி ஒரு மிதவாதக் கட்சி. அமைதியான கட்சி-வசதி படைத்தவர்கள் பெரும்பாலானோரை அணைத்து வைத்திருக்கும் கட்சி. ஆனால் பல சந்தர்ப்பங்களில் எம்மையும் சர்வசாதாரணமாக எண்ணிக் கணக்கிட்போடும் நிலைக்கு அவர்களும் வந்துவிடுகிறார்கள். இரு கட்சிகளிலும் இனத் துவேஷிகள் இருப்பினும் இன்று சிறிதளவு அடங்கியே இருக்கிறார்கள். காங்கிரசுக்கும் ஒரு மதிப்பும் மரியாதையும் இருக்கிறது என்பதனை இருசாராரும் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

**கேள்வி:** மூன்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளை தாங்கள் கண்டுள்ளீர்கள். இவர்கள் குறித்து தாங்கள் கொண்டுள்ள கண்ணோட்டம் என்ன?

**பதில்:** இவர்களில் ஜே.ஆர்.ஜயவர்த்தனாவும் திரு.பிரேமதாசாவும் ஓரளவு பொறுப்புள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். ஆனால் திரு.விஜேதுங்காவை அவர்களுடன் ஒத்துப்பார்க்க முடியாது. இருப்பினும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்று கூறுவதில் அவ்வளவு பெரிய மதிப்பு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. திரு.பிரேமதாசாமீது அரசியல் குற்றச்சாட்டுக்களை



“தமிழன் என்று நாம் சொல்லிக்கொள்ள முடிவதற்கு புலிகள் தான் காரணம்.”

(IMPEACHMENT) கொண்டு வந்து ஆட்டி வைத்தார்கள். அவரே மிகவும் விவேகமானவர்-அவரையே ஆட்டி வைத்து விட்டார்கள். அவரே ஆடிப்போய்விட்டார். நிறைவேற்று அதிகாரம் என்று சொல்வதெல்லாம் வெறும் பேச்சுக்கு அலட்டிக்கொள்கிறார்களே தவிர-வேறு எதுவுமில்லை. என்னைப் பொறுத்தவரை இப்பதவி ஒரு பெரும் பதவியாகத் தெரியவில்லை.

திரு.விஜேதுங்கா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிதான். ஆனால் அவரையே பாராளுமன்றத் திறப்பு விழாவுக்கு வரவேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். அவர்கள் வரவேண்டாம் என்றார்களோ அல்லது இவராக போகாமல் விட்டாரோ தெரியாது. ஆனால் அவர்கள் வர வேண்டாம் என்று சொன்னதாகத்தான் சொல்கிறார்கள். பிரேமதாசா தனக்கெதிரான குற்றச்சாட்டுக்களுக்கு நேராகப் பதில் கூறக்கூடிய திராணி இருந்தது. ஆனால் இவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவரானால் இவரால் ஏன் பாராளுமன்றம் போயிருக்க முடியாது? ஆகவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்பது வெறும் பூச்சாண்டி காட்டுவதைப் போலத்தான் எனக்குப் படுகிறது.

**கேள்வி:** த.வி.புலிகள் குறித்து தங்கள் உண்மையான நிலைப்பாடு என்ன?

**பதில்:** என் மனதுக்கு இன்று தமிழன் என்று நாம் சொல்லுவதற்கு அவர்கள்தான் காரணம் என்று படுகிறது. அவர்களுடைய போக்கும் நடவடிக்கைகளும் நமக்குப் பிடிக்காமலிருக்கலாம். இலங்கையில் மட்டுமல்ல உலகின் வேறு எந்த நாட்டிலும் தமிழன் என்று மதிக்கப்படுவதெல்லாம் இன்று அவர்களால்தான். இதனை எந்தத் தமிழனும் புறக்கணிக்க முடியாது.

**கேள்வி:** தேர்தலுக்கு முன்னர் தொண்டா–அஷ்ரப் ஒப்பந்தம் என்ற பெயரில் வடக்கு-கிழக்கு பிரச்சனை குறித்து தீர்வுத் திட்டம் ஒன்றை உயர்திரு ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா அவர்களிடம் கையளித்திருந்தீர்கள். அத்திட்டத்தை மீண்டும் வலியுறுத்துவீர்களா?

**பதில்:** சந்தர்ப்பம் வருமானால் அதுபற்றி மீண்டும் கேட்கத்தான் இருக்கிறோம். திரு.அஷ்ரப் ஆட்சியாளர் முகாமிலிருந்த போதும் அவரிடம் .இதுபற்றி கேட்க வேண்டிய அவசியமில்லை. சந்தர்ப்பம் வருமானால் அதனை மீண்டும் வலியுறுத்துவோம். எப்போது-எந்தக் காலத்தில் என்பதை இப்போது கூற முடியாது.

**கேள்வி:** வடக்கு-கிழக்குப் பிரச்சனையின் தீர்வு எந்த அடிப்படையில் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றீர்கள்?

**பதில்:** இல.தொழி.காங்கிரஸ் சார்பாகவும் இதற்கான விரிவான திட்டத்தைத் தயாரித்து இலங்கை அரசாங்கத்துக்குக் கொண்டுத்திருக்கிறோம். புலிப்படைக்கும் கொடுத்திருக்கிறோம். அவர்கள் (புலிப் படையினர்) இதுவரைக்கும் சமர்ப்பிக்கப் பட்ட தீர்வுத் திட்டங்களை விட இது நன்றாகவே இருக்கிறது எனக் கூறியிருக்கின்றனர். இருப்பினும் இன்னும்பல குறைகள் உள்ளன.அவற்றையிட்டுப் பேச வேண்டும். நேரடியாக வாருங்கள் என்றுதான் என்னை அழைத்தார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தினால் திருப்தியாக முடியலாம்.

**கேள்வி:** பொதுஜன முன்னணியோடு தாங்கள் அரசியல் உடன்பாடு கண்டால், மலையக மக்கள் முன்னணியோடு தங்கள் நிலை என்ன?



“திரு.சந்திரசேகரனுக்கு உதவி மந்திரிப் பதவிதான் கொடுக்கப்பட்டிருக்கிறது.”

**பதில்:** பொது.ஜ.ஐ.முன்னணியுடன் மலையக முன்னணி ஆரம்பத்தில் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறது. ஆனால் அது சரிவரவில்லை. திரு.சந்திரசேகரன் குழுவினர் முன்னணியோடு சேர்ந்து போட்டி போட்டிருந்தால் திரு.செல்லச்சாமி மாதிரித்தான் அவர் நிலையும் ஆகியிருக்கலாம்.

ம.ஐ.முன்னணி ஆட்சியை அமைக்க இவரை 113வது ஆளாக இணைத்துள்ளது. இவர் அதில் இணைந்திராவிட்டால் ஐ.தே.கட்சி அரசாங்கத்தை அமைத்திருக்கும். திரு.சந்திரசேகரனுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பமாக இது ஆகிவிட்டது. அவர்

அரை மந்திரியாக மட்டுமல்ல ஒரு கபினெட் மந்திரியாகவோ ஒரு சூப்பர் மினிஸ்டராகவோ ஆகியிருக்கலாம். இதனைப் பயன்படுத்தி அவர் மக்களுக்கு வேண்டிய சேவை செய்வாரானால் அதனை நாங்கள் நிச்சயமாக வரவேற்போம்.

எங்களைப் பொறுத்தவரை-எங்கள் சமூக மக்களுக்கு வாக்குரிமை இல்லாத காலத்திலேயே ஜனாதிபதி என்னை அழைத்து காபினட் அமைச்சர் பதவியினைக் கொடுத்தார். ஆனால் இந்த மாதிரி சூழ்நிலையிலேயும் உதவி மந்திரிப் பதவிதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? நமது சமூகத்தை குறைவாகக் கணக்கிடுகிறார்களா? அல்லது இவருக்கு இதுதான் தகுதி என்று நினைக்கிறார்களா? நாம் நினைத்துப்பார்க்க வேண்டும். ●

### (எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி.....)

ஏன் எதிர்க்கிறீர்கள்? அதனூடான போக்குவரத்தை ஏன் தடுக்கிறீர்கள்?"

அதற்கு பிரபாகரன் சிரித்துக்கொண்டே சொன்னபதில் இது:" நாடுகளின் எல்லைகளில் இராணுவங்கள் இருக்கலாம்"

இப்போதும் பிரபாகரன் அப்படியான கருத்தில்தான் இருக்கிறார்.

சங்குப்பிட்டி-கேரதீவு , பாதையைத் திறப்பது நல்லது. அங்கிருப்பது சிறு முகாம். சுலபமாக தூக்கலாமே என்று புலிகள் சொல்கிறார்கள்.

அது புலிகளோடு சண்டைபோட்டு அமைத்த முகாம்- எப்படி விலக்க முடியும் என்று இராணுவ தரப்பு சொல்கிறது.

முடியாத பாதையால் போக்குவரத்து நடப்பதை புலிகள் விரும்பவில்லை என்பதே சந்தேகத்திற்கிடமில்லாத நிலைப்பாடாகும்.

பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு இரு தரப்புமே விருப்பம் தெரிவிக்கும் செய்திகள் தான் கிடைக்கின்றனவே தவிர அடிப்படை நிலைப்பாடுகளில் விட்டுக்கொடுக்கும் அறிகுறிகள் தெரியவில்லை.

அடிப்படை அரசியல் பிரச்சனைகளை ஒத்திவைத்துவிட்டு தெருப் போடுவதிலிருந்து பேச ஆரம்பித்தால் தினசரிகளுக்கு தினமும் செய்தி கிடைக்கலாமே தவிர திருப்தியான தீர்வினை எட்ட முடியுமா? என்பதே கேள்வியாகும்.


### பாதைத் திறப்பும் இருதரப்பு நலன்களும்

எனவே- போக்குவரத்துப் பாதையை உடனே திறப்பதற்கு இரு தரப்பு நலன்களுமே தடையாக இருக்கின்றன.

இரு நாடுகள் என்ற கோட்பாட்டை புலிகள் அமைப்பினர் கைவிட்டால் ஆனையிறவுப் பாதையூடாக முன்னர் போலவே போக்குவரத்துக்கள் நடக்கலாம். ஆனால் அது சாத்தியமா?

அரசாங்கத்தால் வடபகுதிக்கு நடத்தப்படும் கப்பல் சேவையில் கூட திருமலையில் இருந்து பயணிகள் யார் வேண்டுமானாலும் செல்லமுடியும். ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து கப்பலில் வர சாதாரண பயணிகளை புலிகள் அனுமதிப்பதில்லை. நோயாளர்கள் மட்டுமே வரமுடியும்.

எந்த வழியிலாவது பயணிகள் சுலபமாக போய்ச்சேரட்டும் என்று புலிகள் நினைக்காதிருப்பது ஏன்? தம்மால் பயணம் செய்ய



பிரதமர் சந்திரிக்கா

ஆனால்- இவ்வாறான முயற்சிகளால் அரசுக்கும்-புலிகளுக்கும் உடனடி லாபம் இருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற போர் நிறுத்தப்பட்டு பிரச்சனையை தீர்க்கும் கட்டம் நெருங்கிவிட்டதான நம்பிக்கையை அரசாங்கம் ஏற்படுத்தும். அது கணிசமான வாக்கு அறுவடைக்கு உதவும்.

மறுபுறம்- மின்சாரம் கிடைப்பதும், வீதிகள் திருத்தப்படுவதும், புனரமைப்பு பணிகளும் யாழ் குடாநாட்டு மக்களின் நீண்டகால போரினால் ஏற்பட்ட சலிப்பையும், விரக்தியையும் போக்க உதவும்.

புதிய அரசாங்கம் விரும்பியபோதும் புலிகள் பேச்சுக்குச் செல்லவில்லை என்று மக்கள் நினைக்கக்கூடிய சூழல் புலிகளின் போருக்கான வெகுஜன ஆதரவு தளத்தை சேதப்படுத்தும்.

எனவே- அவ்வாறான ஒரு நிலையை தவிர்க்கும் சந்தர்ப்பத்தை புலிகள் விரும்பவே செய்வர்.

அரசுக்கும் வெளிநாட்டுக் கடனுதவிகள் அதிகரிக்கப்படும்.

இனப் பிரச்சனையை தீர்க்கவும் போரை நிறுத்தவும் அரசாங்கம் முயற்சிப்பதால் கடனுதவி செய்ய இப்போதே பல வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

வெளிநாட்டு கடனுதவிகள் மூலம் அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுமானால் தென்னிலங்கையில் தனது கால்களை திடமாக ஊன்றிவிடலாம்.

எனவே- பேச்சு முயற்சிகளில் விவேகம் பாதி- வியூகம் மீதி.

எனினும்- பிரதமர் சந்திரிக்கா அடிப்படையில் ஒரு இனவாதியல்ல.

ஆனால்- அவர் விரும்பினாலும், பேச்சுவார்த்தைகளில் எழக்கூடிய சிக்கல்கள் என்ன?

புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு இருக்கும் நிர்ப்பந்தங்கள் என்ன? அவற்றை வரும் வாரம் நோக்குவோம். ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது-இராஜதந்திரி

# புதிய பேச்சுவார்த்தை அணுகுமுறைகள்: 'இலவுகாத்த கிளி'யாக வடக்கு-கிழக்கு மக்கள்!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசுடனான பேச்சுவார்த்தைகள் குறித்த தமது நிலைப்பாடு, மற்றும் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கான ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தைகள் குறித்த தமது எதிர்பார்ப்புகள் என்பன குறித்து கடந்தவாரம் பி.பி.ஸி. 'தமிழோசை'க்கு விரிவான பேட்டியொன்றை வழங்கியிருந்தார்.

இப்பேட்டியின்போது திரு.பிரபாகரன் தெரிவித்தவை, பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் அவருக்கிருக்கும் விருப்பத்தை வெளிப்படுத்துபவையாக இருந்தன.

வடக்கு-கிழக்கு பிரச்னையின் அடிப்படை அம்சங்களை அணுகத் தவறியிருந்தார் எனவும், இந்நிலையில் முன்னைய பேச்சுக்கள் முறிவடைந்ததற்கு பிரேமா அரசின் அணுகுமுறைகளே முக்கிய காரணமாகும் என்ற தோரணையில் திரு.பிரபாகரன் தமது விளக்கத்தை வெளியிட்டிருந்தார்.

ஆயினும் முன்னைய ஆட்சியாளர்கள், புலிகள் நம்பத் தகாதவர்கள் என்ற ரீதியில் கருத்துக்களை வெளியிட்டிருந்ததுடன், தாம் எந்த வகையிலும் பேச்சுக்களை முறிக்கவில்லை என்று குறிப்பிட்டவர்களாக இருக்கின்றனர்.

எது எப்படி இருந்தபோதிலும் முன்னைய பிரேமா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடந்த



90ல் பிரேமாவோடு மாத்தையா-பாலசிங்கம் ஆகியோர்

தென்னிலங்கையில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்ல. எதிர்க்கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும் வடக்கு-கிழக்குப் பிரச்னையை அரசியல் ரீதியாக தீர்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

இது தவிர வடக்கு-கிழக்குப் பிரதேச மக்கள் உட்பட நாட்டின் பெரும்பாலான மக்கள் வடக்கு-கிழக்கின் இன்றைய கெடுபிடி யுத்தம் அவசியமற்ற தொன்றெனவும், இந்த யுத்தத்தினால்

பேச்சுவார்த்தைகளின்போது, இரு சாராருமே பரஸ்பர விசுவாசத்தைக் கட்டியெழுப்பத் தவறியிருந்தனர் என்பது மட்டும் தெட்டத் தெளிவாக இருக்கின்றது.

பிரேமதாசா அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே கொழும்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற காலத்திலேயே புலிகளின் அரசியல் பிரிவு தோற்றம் பெற்றிருந்தது.

கொழும்பு மெரியட் (Marriot) ஹோட்டலில்

இந்நிலையில் புலிகளின் அரசியல் பிரிவு எவ்வளவுதூரம் காத்திரமான அரசியல் நடவடிக்கைகளைக் கொண்டிருக்கின்றதென்பதும், கேள்விக்குரியதாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியிலான செயற்பாடுகள் திறமையானவையாகவே இருந்து வருகின்றன. அரச படையினர் கடந்த காலங்களில் மேற்கொண்ட தாக்குதல்களை வெற்றிகரமாகத் தாக்குப் பிடித்து வருவதுடன், தாமாகவே பல துணிகரத் தாக்குதல்களையும் புலிகள் இயக்கத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

எனவே இராணுவ ரீதியிலான செயற்பாடுகளில் காட்டும் தீவிரத்தையும், திறமையையும் அரசியல் ரீதியாகக் காட்டத் தவறியவர்களாகவே புலிகள் இயக்கத்தினர் விளங்குகின்றனர்.
புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் புதிய பிரதமர் சந்திரிகா பண்டாநாயக்கா குமாரதுங்கவுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

திரு.பிரபாகரன் கடந்த பத்து வருடகாலத்தில் மிக அரிதாகவே அரசியல் ரீதியிலான பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றியுள்ளார்.

தமிழக அரசியல்வாதிகள் பலரையும், மற்றும் இந்தியாவின் முக்கிய இராஜதந்திரிகள் சிலரையும் சந்தித்த திரு.பிரபாகரன், 1987ம் ஆண்டில் இந்தியப் பிரதமராக இருந்த திரு.ராஜீவ் காந்தியை புதுடில்லியில் வைத்துச் சந்தித்திருந்தார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் தொடர்பாகவே திரு.பிரபாகரன், திரு.ராஜீவ் காந்தியைச் சந்தித்திருந்தார்.
இந்நிலையில் திரு.பிரபாகரன் சந்தித்த முதலாவது பிரதம மந்திரியும், அதிமுக்கிய அரசியல்வாதியாகவுமே திரு.ராஜீவ் காந்தி விளங்கியிருந்தார்.

யாழ்ப்பாணத்தின் சுதுமலைப் பகுதியிலிருந்தும் விசேட ஹெலிகாப்டர் மூலமாக புதுடில்லிக்கு திரு.ராஜீவுடனான

பின்னணியைக் கொண்டவராக இருக்கின்றார்.

இந்நிலையில் அரசியல்-இராணுவ ரீதியாக மிகவும் சிக்கலடைந்து காணப்படும் வடக்கு-கிழக்கு சர்ச்சையை முற்றிலும் புதிய அணுகுமுறைகளுடன் ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தை பெருமளவு கொண்டவராகவே சந்திரிகா காணப்படுகின்றார்.

சந்திரிகாவின் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள அமைச்சர்கள் பலரும் வடக்கு-கிழக்குப் பிரச்னையை அரசியல் ரீதியாக தீர்க்க வேண்டுமென்பதிலேயே ஆர்வங்கொண்டவர்களாக இருக்கின்றனர்.

இது தவிர நாட்டில் கடந்த பதினேழு வருடகாலமாக அமுலில் இருந்துவரும் ஜனாதிபதி ஆட்சி முறையையும் மாற்றியமைக்க வேண்டுமென்ற கண்ணோட்டத்தைக் கொண்டவர்களாக அவர்கள் இருக்கின்றனர்.

சந்திரிகாவின் அமைச்சரவையில் நீதி, மற்றும் அரசியலமைப்புத் துறைக்குப் பொறுப்பான அமைச்சராக முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பதவி வகிக்கின்றார்.

பேராசிரியர் பீரிஸ் அண்மையில் வெளிநாட்டு முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்ட வைபவமொன்றில் பேசுகையில்கூட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை கடுமையாக விமர்சித்ததுடன், இத்தகைய ஆட்சிமுறையின் அதிகாரங்களை பாராளுமன்றமே கொண்டிருக்கும் வகையில் அரசியலமைப்பு திருத்தியமைக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தார்.
இது தவிர தென்னிலங்கையில் இடம்பெற்ற அடிப்படை மனித உரிமை மீறல்

படையினர் கொண்டுள்ள மனநிலையை வெளிப்படுத்துவதாகவே இக் கேள்விகள் விளங்கியிருந்தன.

ஆனால் இன்று வடக்கு-கிழக்கில் ஆயுதப் போராட்டம் விரிவடைந்து காணப்படுவதற்கு அரச படையினரால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கண்மூடித்தனமான நடவடிக்கைகளே முக்கிய காரணங்களாக விளங்கியிருக்கின்றன.

வடக்கே இடம்பெற்ற 'குமுதினிப் படகுப் படுகொலைகள் முதற்கொண்டு கிழக்கே இடம்பெற்ற கொக்கட்டிச்சோலைப் படுகொலைச் சம்பவங்கள் வரை பலமூர்க்கத்தனமான நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகள் விரிவுபட்ட காலங்களில் குண்டுவீச்சுக்கள், மற்றும் ஷெல் வீச்சுக்கள் என வடக்கு-கிழக்கின் குடிமக்களை 'குடிமுழுகிப்' போகச் செய்யும் கெடுபிடி யுத்தத்தையும் அரச படையினர் மேற்கொண்டிருந்தனர்.

சந்திரிகா தலைமையிலான புதிய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே தோன்ற ஆரம்பித்திருக்கும் நல்லெண்ணங்கள் குறித்து பல்வேறு விமர்சனங்களும் வெளியாகி வருகின்றன.

வடக்கு-கிழக்கு மக்கள் புதிதாக உருப்பெற்றுவரும் நல்லெண்ணங்கள் நல்ல முடிவுகளைத் தரவேண்டுமென எதிர்பார்க்கின்றனர்.

இருந்த போதிலும் கடந்த கால அனுபவங்களை அவர்கள் முற்றிலுமாக மறந்துவிடவில்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது

அமைதியான வாழ்க்கைக்கு பல்வேறு கோணத்திலிருந்தும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதை உணர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

பத்து வருடகாலத்திற்கும் மேலாக வடக்கு-கிழக்கில் இடம்பெற்றுவரும் மோதல்கள், வெறுமனே அழிவுகளுக்கும், அவலங்களுக்குமே வழியமைத்திருக்கின்றன. யுத்தத்தில் குதித்திருப்போர் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்ட பல்வேறு யுக்திகளைக் கையாண்ட போதிலும், அவர்களது 'பலப்பரீட்சை'கள் தோல்வியையே தழுவியவையாக இருக்கின்றன.

இந்நிலையில் நாட்டின் அனைத்துத்

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம், மற்றும் அன்று புலிகளின் முக்கிய பேச்சாளர்களில் ஒருவராக இருந்த 'யோகி' என்றழைக்கப்பட்ட யோகரட்ணம் நரேன் ஆகியோர் புலிகளின் அரசியல் பிரிவின் அங்குரார்ப்பணத்தை அறிவித்திருந்தனர்.

'தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி' என்ற பெயரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவின் தோற்றம் பற்றி திரு.அன்டன் பாலசிங்கம் அன்று மெரியட் ஹோட்டலில் வைத்து அறிவித்திருந்தார்.

புலிகளின் இந்த அரசியல் பிரிவின் தலைவர் மாத்தயா என்றழைக்கப்பட்ட

சந்திப்பின் பொருட்டு திரு.பிரபாகரன் அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

திரு.ராஜீவ் காந்தி தவிர வெறெந்தவொரு நாடளாவிய முக்கிய அரசியல் தலைவரையும் திரு.பிரபாகரன் சந்தித்திருக்கவில்லை. மறைந்த இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட காலகட்டங்களில்கூட திரு.பிரபாகரன், ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்திக்க முன்வரவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்திருந்தனர். ஆனால்

சம்பவங்கள் குறித்து விசாரணைக் கமிஷன்களை உருவாக்குவதிலும், புதிய ஆட்சியாளர்கள் ஆர்வங்காட்டுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியினரின் கடந்த பதினேழு வருடகால ஆட்சி நாட்டில் எண்ணிலடங்காத மனிதப் படுகொலைகளுக்கு வழிவகுத்திருந்தது.

தென்னிலங்கையில் இனக்கலவரங்களினால் தமிழ் பேசும் மக்களின் உயிர், உடமைகள் சூறையிடப்பட்ட அதே சமயம் ஜே.வி.பி நடவடிக்கைகள் முனைப்படைந்திருந்த நாட்களில் தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கண் மூடித்தனமான முறையில் மனித வேட்டைகள் இடம்பெற்றிருந்தன.

அயுதங்களை ஒப்படைக்கப் போவதாக அறிவித்ததும் ஒரு பூரண அமைதி நிலை தோன்றி விட்டது போன்ற பிரமையே அன்று வடக்கு-கிழக்கு மக்களிடையே தோன்றியிருந்தது.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் படையினருக்குமிடையே வெடித்த மோதல் வடக்கு-கிழக்கு மக்களைப் பெரும் ஏமாற்றத்துக்குள்ளாக்கிவிட்டிருந்தது.

தொடர்ந்து மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா தலைமையிலான இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதையடுத்து தோன்றிய சுமுக நிலையைக்கண்டு அமைதி விரைவில்

## குமுதினிப் படகு முதல் கொக்கட்டிச்சோலை வரை

## வடக்கு-கிழக்கில் நிகழ்ந்த படுகொலைகள்



தரப்பினரையும் பெரும் பாதிப்புக்குள்ளாக்கி, முழு நாட்டையுமே அழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் வடக்கு-கிழக்கு யுத்தத்தை விரைந்து ஒரு முடிவுக்குக் கொண்டுவருவது மிகவும் இன்றியமையாததாகின்றது.

முன்னைய ஆட்சியாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர். ஆனால் அப் பேச்சுவார்த்தைகளில் அன்றைய ஆட்சியாளர்களும், தமிழீழ விடுதலைப் புலிகளும் எதைப் பேசினர்? எத்தகைய உடன்பாட்டுக்கு வந்திருந்தனர்? இறுதியாக எக்கட்டத்தில் அவர்களது பேச்சுக்கள் முறிவடைந்திருந்தன? போன்ற கேள்விகள் விடை காணப்படாமலிருக்கின்றன.

ஆயினும் திரு.பிரபாகரன் பி.பி.ஸி.க்கு வழங்கிய பேட்டியில், தமது தரப்பினர் பிரேமதாசா அரசுடன் நடத்திய பேச்சுக்களை முறிக்கவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். கூடவே முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா,

கோபாலசாமி மகேந்திரராசா என்றும், செயலாளர் யோகரட்ணம் யோகி எனவும் திரு.அன்டன் பாலசிங்கத்தினால் அன்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இன்று புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவராக அறிவிக்கப்பட்ட மாத்தயா என்றழைக்கப்படும் கோபாலசாமி மகேந்திரராசா, மற்றும் யோகரட்ணம் யோகி ஆகியோர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்தும் வெளியேற்றப்பட்டிருக்கக் காணப்படுகின்றனர்.

புலிகள் இயக்கத்திலிருந்தும் வெளியேற்றப்பட்ட யோகரட்ணம் யோகி யாழ்ப்பாணத்தினுள் நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆயினும் மாத்தயா என்றழைக்கப்பட்ட கோ.மகேந்திரராசா பற்றி எந்தவொரு தகவலும் வெளியிடப்படாதிருக்கின்றது. அவர் உயிர்வாழ்கிறாரா? அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளாரா? என்ற விபரங்கள்கூட வெளியே தெரியாமலிருக்கின்றது.

திரு.பிரபாகரன், ஜனாதிபதி பிரேமதாசா ஆகியோருக்கிடையே எதுவித சந்திப்பும் இடம்பெற்றிருக்கவில்லை.

ஆயினும் புதிய பிரதமர் திருமதி.சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கவை சந்தித்து நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்த திரு.பிரபாகரன் தயாராக இருப்பதாக வடக்கே புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க வடக்கு-கிழக்குப் பிரச்னையின் தாக்கத்தை நன்குணர்ந்த ஒருவராகவே இருக்கின்றார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் உட்பட வடக்கு-கிழக்கின் தமிழ் தீவிரவாத இயக்கங்களின் முக்கியஸ்தர்கள் தென்னிந்தியாவில் தஞ்சமடைந்திருந்த காலங்களில் சந்திரிகா அன்று அவர்களைச் சென்று சந்தித்திருந்தார்.

வடக்கு-கிழக்கு அரசியல் விவகாரம் தொடர்பில் சந்திரிக்கா தனிப்பட்ட முறையில் ஓர் அப்பளுக்கற்ற

வடக்கு-கிழக்கில் தமிழ் தீவிரவாதிகளுக்கெதிரான நடவடிக்கைகள் என்ற பெயரில் கடந்த பதினேழு வருடகாலத்தில் எண்ணிலடங்காத அப்பாவிப் பொதுமக்கள் ஆயுதப் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர்.

ஓரிரு வாரங்களுக்கு முன்னர் பிரதிப் பாதுகாப்பமைச்சர் கேர்ணல் அனுருத்த ரத்வத்த வடபகுதி இராணுவ, கடற்படை முகாம்களுக்கு விஜயங்களை மேற்கொண்டிருந்தார்.

அப்போது வடக்கே அவரைச் சந்தித்த படையினரில் பலர் வடக்கு-கிழக்கு பிரச்னை குறித்து அரசு கொண்டுள்ள நிலைப்பாடுகள் பற்றி பல்வேறு கேள்விகளையும் அவரிடம் கேட்டிருந்தனர்.

இராணுவ நடவடிக்கைகள் தொடருவதற்கு அனுமதிக்கப்படுமா? போர் நிறுத்தம் என்ற போர்வையில் புலிகள் மேலும் பலமடையும் சூழ்நிலைகள் தோன்றுமல்லவா? போன்ற கேள்விகளைப் படையினர் கேட்டிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து அரச

தோன்றி விடுமென மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அந்த எதிர்பார்ப்புக்கூட வீணாகி தாம் மீண்டும் 'இலவு காத்த கிளிகள்' போலானதை வடக்கு-கிழக்கு மக்கள் உணர்ந்தனர்.

எனவே கடந்த பதினேழு வருடகாலங்களில் பெருந்துயரகரமான அனுபவங்களுக்கும், ஏமாற்றங்களுக்கும் உள்ளாகி விரக்தியின் எல்லைக்கே தள்ளப்பட்ட நிலையிலேயே வடக்கு-கிழக்கு மக்கள் தற்போது காணப்படுகின்றனர்.

இந்நிலையில் சந்திரிகா தலைமையிலான புதிய ஆளுங்கட்சியினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே உருவாகிவரும் நல்லெண்ணங்களையும், அதன்மூலம் தோன்றக் கூடிய அரசியல் தீர்வுக்கான வாய்ப்புக்களையும் வரவேற்கத்தக்க அம்சங்களாகவே வடக்கு-கிழக்கு மக்கள் கருதுகின்றனரே தவிர, புதிய அணுகுமுறைகள் வெற்றிகரமான தீர்வை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை அவர்கள் கொண்டிராதவர்களாகவே இருக்கின்றனர்.


www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பெண்களுக்கான சில யோசனைகள்

# வாழ்க்கையில் வெற்றிகாணும் வழிகள்

பெண்கள் தங்கள் வாழ்க்கை என்றும் சிறப்புடையதாக- மகிழ்ச்சியுடையதாகத் துலங்க வேண்டுமென்றால் அதற்கான சில முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் பல வழிகளில் பெண்கள் தவறிழைத்துவிட நேர்டு கிறது. முக்கியமாக பிழையான கணிப்புகளும் தப்பான மதிப்பீடுகளும் தவறுகளுக்குக் காரணமாகின்றன. தனக்கேற்ற வாழ்க்கைத் துணை ஒன்றைத் தேர்ந்தெடுப்பது நண்பர்கள் யார் நம்பத்தகாதவர்கள் யார் என்பதை சீர்தூக்கிப் பார்ப்பது போன்ற இன்னோரன்ன அம்சங்களில் தீர்க்கமான முடிவு எடுக்க முடியாதுபோனால் நிச்சயமாக வாழ்க்கையில் வெற்றிகாண முடியாது.

பெண்கள் தவறிழைக்கும் சில வழிகளை வரிசையாக விபரிக்கும் குடும்பவியலாளரான டாக்டர் லௌரா ஸ்க்சிங்கர் அவற்றுக்கான பரிகாரங்களையும் இங்கு தருகிறார்.



டாக்டர் ஸ்க்சிங்கர் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்தவர். தம்பதிகள் சுகமாக வாழ்வதற்கான பல அரிய கருத்துக்களை விளக்கும் பல நூல்களை எழுதியுள்ளார். லொஸ் ஏஞ்சல்ஸ் வானொலியில் அவர் ஆற்றிய உரையிலிருந்து திரட்டிய கருத்துக்களை இங்கு தருகிறோம்.

- **கணவனையே முற்று முழுதாக நம்பி வாழ்வது:**

தன் கணவனையே சகலவற்றுக்கும் நம்பி தனது சகல சுதந்திரத்தையும் ஒப்படைக்கும் ஒரு பெண் இறுதியில் ஏமாற்றமடைவதுடன் எப்போதும் சினத்துக்கு அடிமையாகி விடுகிறாள்.

பொதுவாக பெண்கள் தங்களுக்கென சில வரையறைகளை வகுத்துக்கொள்ள வேண்டும். தனக்கான சில தனிப் பணிகளில் தலையிடுதலாகாதென கணவருடைய ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(உ+ம்): அறிவினை விருத்தியாக்கும் பொருட்டு பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லுதல், வருமானத்தைப் பெருக்குவதற்கான தொழிலைத் தேடுதல் போன்றவை)

இக்கூற்று நமது நாட்டுப் பண்பியல்புகளுக்கு ஒவ்வாதெனக் கருதப்படலாம். இருப்பினும் ஓரளவு படித்த பெண்கள்- பெண்களுக்கும் சமத்துவம் வேண்டும் என்று குரலெழுப்பும் இக்காலகட்டத்தில் சில வரையறைகளுடன் இதனை நம் பெண்களும் கடைப்பிடிப்பதில் தவறில்லை.

- **எந்த ஆணையும் தன் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொள்ளுதல்:**

பேசி முடிக்கும் திருமணங்களில் இது தவிர்க்கமுடியாததொன்று. பெற்றார் தெரிவு செய்யும் மணமகனுக்கு கழுத்தை நீட்ட வேண்டிய நிலையில்தான் பெரும்பாலும் நமது நாட்டுப் பெண்கள் இருக்கின்றனர். இருப்பினும் தங்களுக்கேற்ற வரன்களைத் தேர்ந்தெடுக்கும் பழக்கங்கள் இங்கும் பெருகி வருவதால் நம் நாட்டுப் பெண்களுக்கும் இது பொருந்தும்.

வயது வந்த பெண்கள் இன்று பலதரப்பட்ட ஆண்களுடன் பழகும் சந்தர்ப்பம் அதிகமாகவே இருக்கிறது. வெளுத்ததெல்லாம் பாலென்று கருதிவிடாமல் பழகுபவரெல்லாரையும் அருகே நெருங்கவிடாமல் அணைபோடப் பழகிக் கொள்ளுதல் அவசியம். தேனொழுகப் பேசித் தங்கள் தேவை முடிந்துவிட்டதும் தூர விலகி ஓடிவிடுவோரே பெரும்பாலும் காணப்படுகின்றனர். உணர்ச்சிகளுக்கு இடமளித்து விடாமல் ஓடும் புளியம் பழமும் போல் பழகி நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் வாழ்க்கைத் துணையாக வரக்கூடிய ஒருவரைத் தேர்ந்தெடுப்பதில் மிக மிக அவதானம் தேவை. ஆணின் குடும்ப நிலை, அவரின் குண நலன்கள், சேர்ந்து உறவாடும் நண்பர்கள் ஆகியவற்றை நன்றாக அலசி ஆராய்ந்தறிய போதுமான அவகாசமளித்து இறுதி முடிவினை எடுப்பதே நீடித்த நல்வாழ்வுக்கு வழிகாட்டும்.

- **அன்புக்கும் ஆசைக்குமிடையிலான குழப்பம்:**

பருவ மங்கையர்க்கு பாச உணர்வு ஒருபுறமிருக்க பாலியல் உணர்வுகளும் அடிக்கடி தலையெடுப்பதுண்டு. இத்தகையோர் காமத்தின் உந்துதல்களை காதல் என்று கருதி வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் அதிகம். இவர்கள் தங்கள் உணர்வுகளுக்குக் கடிவாளம் போடவேண்டியது மிகமிக அவசியமாகும். கண்களுக்கு விருந்தாகும் காளை, வாழ்க்கைக்கு உதவாத வீணனாகி விடக்கூடும். ஆகவே வாழ்க்கை வண்டியின் பாரத்தை உங்களுடன் சரிசமமாகப் பகிர்ந்து கொள்ளத்தக்கவனாக இருத்தல் இன்றியமையாதது.

- **ஆண்களுடன் கொள்ளும் உறவு:**

மேலை நாடுகளைப் பொறுத்தவரை திருமணமாகுமுன்னரே கணவன்- மனைவி போல் ஒன்றாக வாழும் முறை சர்வ சாதாரணமானது. இவர்கள் குழந்தைகளை ஈன்றெடுத்து வளர்ப்பதுமுண்டு. இது நமது நாட்டுப் பண்பியல்புகளுக்கு ஒவ்வாத முறை. இருப்பினும், நம் இள வட்டங்களில் சிலரும் திருமணமாகுமுன்னே உடலுறவு கொள்வதுமுண்டு. இவ்வாறு ஆரம்பத்திலேயே கட்டுப்பாடற்று நடப்பதனால் வெகு சீக்கிரத்தில் குடும்ப உறவில் கசப்புணர்வுகள் தோன்ற வாய்ப்பேற்படுகிறது. மேலை நாடுகளில் ஒன்றன்பின் ஒன்றாக விவாகாரத்துக்களும் மறுமணங்களும் ஏற்பட இதுவே காரணமாகின்றது. ஆகவே, தனது குடும்ப வாழ்க்கை இறுதிவரை நல்லறமான இல்லறமாக இயங்க வேண்டுமானால் திருமணத்துக்கு முன் உடலுறவு வைத்துக்கொள்ள இடமளிக்கலாகாது.

- **ஆண்களிடம் அளவுக்கு மீறிய எதிர்பார்ப்பு:**

சில பெண்கள் தங்களுக்குத் திருமணமாகிவிட்டால், கணவன் மூலம் சகலவற்றையும் அடைந்து பூரண திருப்தி அடைந்து விடலாம் என்று கற்பனை செய்துவிடுகிறார்கள். பெரும்பாலான பெண்கள் அளவுக்கு மீறிய கற்பனை காரணமாக பெரும் ஏமாற்ற நிலையினை அடைய நேரிடுகிறது. உங்கள் பிரச்சனைகள் அனைத்தையும் உங்கள் வருங்காலக் கணவரே தீர்த்து வைத்துவிடுவார் என்று மித மிஞ்சிய கற்பனைக்கு இடமளிக்காமலிருப்பது நல்லது.

- **நிர்க்கதியான நிலை பற்றிய நினைப்பு:**

பெரும்பாலான பெண்கள் தாங்கள் ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டதாக அழுது புலம்புவதுமுண்டு. இதனால் எந்தப் பிரச்சனையும் தீரப்போவதில்லை. எதற்கெடுத்தாலும் ஆண்களைக் குறை கூறிக் கொண்டிருக்காமல் எந்தப் பிரச்சனையிலும் முடிவெடுக்கவேண்டிய இறுதி நிலை உங்களைச் சார்ந்ததே என்பதனை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள்.

- **பழி சுமத்தும் பழக்கம்:**

எதற்கெடுத்தாலும் தம்பதியர் தமக்கிடையேயும் குழந்தைகள் மீதும் சுற்றத்தார் மீதும் கோபம் கொள்வதும் பழி கூறித் தூற்றுவதும் அழகல்ல. சிலர் எதற்கெடுத்தாலும் கோபப்பட்டு பெட்டி படுக்கைகளைச் சுருட்டிக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறுவது வழக்கம். இது நல்லதல்ல.

உங்கள் குடும்பச் சண்டைகளால் உங்கள் குழந்தைகளின் மனோநிலை பாதிப்படையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிக மிகப் பிரதானமானது.

இது பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் பொதுவானதே! ■

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

## முரசின் பரிசு

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

முரசின் பரிசு
கூப்பன் இல 8
உண்மை–நேர்மை–வெளிப்படைத்தன்மை

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

## தாமதத்திற்கு வருந்துகிறோம்

அருள் ஜுவல்லர்ஸ் உரிமையாளர் அவர்கள் சுகயீனமாக இருப்பதால் பரிசுக்குரியவர்களை தெரிவு செய்வதற்கான பரிசுக்கூப்பன் குலுக்கலில் பங்குபெற்ற முடியவில்லை. இவ்வாரம் பரிசுக் குலுக்கலில் கலந்துகொள்வேன் என்று தெரிவித்துள்ளார்.

போட்டி முடிவுகளை அறிவிப்பதில் முரசையும் மீறி ஏற்பட்ட தாமதத்திற்காக வருந்துகிறோம்.

போட்டி முடிவுகள் அடுத்த முரசில் வெளிவந்தே தீரும்.

அருள் ஜுவல்லர்ஸ் உரிமையாளர் பூரண குணமடைய முரசின் வாசகர்கள் சார்பில் வாழ்த்துகிறோம். –நிர்வாகி–

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### பழம் மற்றும் பருப்பு சாலட்(SALAD)

கனதியான உணவு உட்கொண்டபின் சமிபாட்டினைத் துரிதப்படுத்த உதவுவது 'சாலட்' எனப்படும் சமைக்கப்படாத பச்சை உணவு வகை. இவை பழங்களையோ, காய்கறி, இலை வகைகளையோ கொண்டு தயாரிக்கப்படுவது.

இன்று பழங்கள் மற்றும் பருப்பு ஆகியவற்றைக் கொண்ட சாலட் தயாரிக்கும் முறையினைப் பார்ப்போம். 'சாலட்' என்ற ஆங்கில (ஆங்கிலம் மட்டுமல்லாத வேறு பல ஐரோப்பிய மொழிகளிலும் இச்சொல் வழக்கிலுள்ளது) சொல்லுக்கு சிலர் 'பச்சடி' என்று தமிழில் விளக்கம் தருகின்றனர்.

**தேவையானவை:**

**அன்னாசிப்பழம்** (துப்பரவு செய்யப்பட்டு சிறு துண்டுகளாக்கப்பட்டது) -1/2 பழம்
**ஒரேஞ்ச் பழம்** (தோலுரித்து, விதை நீக்கி துண்டுகளாக்கப்பட்டது) - 3 பழங்கள்
**கொடி முந்திரிப்பழம்** (தோலுரித்து விதை அகற்றப்பட்டது)- 4 அவுன்ஸ்
**ஆப்பிள் பழம் (சிவப்பு)** -1 பழம் (நடுவிலுள்ள விதையுடன் கூடிய பகுதி நீக்கி தோலுரிக்காமல் சிறு துண்டுகளாக)
**முந்திரிப்பருப்பு** - 2 மேசைக்கரண்டி. (சிறு சிறு துண்டுகளாக)
அரைத்த சீனி - 3 தே. கரண்டி
எலுமிச்சம்பழச்சாறு - 1 பழத்தினது
• மேயோனைஸ் - சிறிதளவு.
பசளி அல்லது வல்லாரைக் கீரை- சிறிதளவு.
• முட்டை-பாலேடு-புளிக்காடி ஆகிய மூன்றும் சமனளவு சேர்த்துக் கலக்கப்பட்டது.

**செய்முறை:**

1. பழங்களை நன்றாகக் கழுவி நீர் வடிந்த பின் எடுத்து வைத்துக் கொள்ளவும்.
2. பழங்களுடன் முந்திரிப்பருப்பு மற்றும் சீனியைப் போட்டு நன்றாகக் கலந்து கொள்ளவும். சாலட்டுக்குரிய கண்ணாடி கோப்பையில் இவற்றைக் கொட்டி இதன் மீது எலுமிச்சம் சாற்றினை தெளிக்கவும்.
3. மேயோனைஸ் கலவையை பழங்களில் பட்டும் படாமலும் தெளிக்கவும்.
4. ஒரு அகலமான பளிங்குத் தட்டில் கீரை இலைகளை அழகாக அடுக்கி அவற்றின்மீது பழபருப்புக் கூட்டைப் பரப்பி வைத்துப் பரிமாறவும்.

## அழகுக் குறிப்புகள்

## பெண்கள்-குறிப்பாக டீன் ஏஜ் பெண்களுக்கு

ருக்கா–நாதன்



பெண்கள் குறிப்பாக டீன்-ஏஜ் பெண்களுக்கு பருவக் கோளாறு அதிகம். முகத்தை அடிக்கடி சோப்போட்டு கழுவ வேண்டும். இரவு தூங்கமுன் முகத்தில் படிந்துள்ள அழுக்கை போக்க க்லென்ஸில் லோஷன் தடவி இரண்டு நிமிடம் ஊறவிட்டு கழுவவும். நாம் வீட்டிலேயே தயாரிக்கும் சுலபமான க்லென்ஷல் லோஷன்கள்:

1. தயிர் அரை ஸ்பூன், எலுமிச்சை சாறு 1 ஸ்பூன், கரட்சாறு 1 ஸ்பூன், ஆலிவ் ஆயில் ஒரு ஸ்பூன், ரோஸ் வாட்டர் ஒரு ஸ்பூன், தக்காளி சாறு ஒரு ஸ்பூன், ஈஸ்ட்மாத்திரை பொடி ஒரு ஸ்பூன். இவை எல்லாவற்றையும் கலந்து குழைத்து முகத்தில் தடவி 20 நிமிடம் கழித்து கழுவி விடவும். பருக்கள் இருந்தால் ஒலிவ் எண்ணெய் வேண்டாம்.
2. தயிரைக் கொஞ்சம் ஏடோடு எடுத்து முகத்தில் நல்லா மசாஜ் செய்வதால் முகம் கருமை நீங்கி வெண்மையாகும்.
3. சுத்தமான தேனை முகத்தில் தடவி மசாஜ் செய்வதும் நல்லது.

புதினாச்சாறில் சிறிது கஸ்தூரி மஞ்சள் தூள் கலந்து தேய்த்து வந்தாலும் நல்லது.

உருளைக் கிழங்கின் சாறெடுத்து அதோடு கொஞ்சம் பன்னீர் கலந்து தேய்க்கலாம்.

முட்டையின் மஞ்சள் கருவும் தயிரும் கலந்து முகத்தில் பூசிக் குளித்து வந்தால் நல்லது.

இவற்றை விட நன்றாக சிரிக்கவேண்டும். நன்றாக வாய்விட்டு கதைக்க வேண்டும்.

பாதாம் பருப்பு ஒன்றுடன் ஒரு ஸ்பூன் தேன் கலந்து மையாக அரைத்து முகத்தில் பூசி ஊறவைத்து குளிக்கலாம்.

ஆரஞ்சுத் தோல்களைக் காயவைத்து அரைத்து எடுக்கவும். இதில் 1 ஸ்பூன் கடலைமாவு, 1 ஸ்பூன் கஸ்தூரி மஞ்சள் சேர்த்து பன்னீர்விட்டு குழைத்து முகத்திற்கு மாஸ்க் போல் வாரம் ஒருமுறை பூசி 20 நிமிடம் கழித்து கழுவிவிடவும். முகம் புது பொலிவு வரும்.




## கைவேலைப் பகுதி–நீங்களும் செய்து பாருங்கள்

### ஐந்தூரியம் எஸ்.எஸ்.

**தேவையான பொருட்கள்:**
வர்ணச் சேர்க்கை றோஸ் நிற ஸ்ரொக்கிநெற் 1
பச்சை நிற ஸ்ரொக்கிநெற் 1
தங்கநிறக் கம்பி 6
பஞ்சு சிறிதளவு
கம்ரேப் (ஒட்டும்நாடா)
கட்டுக்கம்பி
நூல்

**எடுக்கப்படவேண்டிய அளவுகள்:**
பூ 10 அங்குல அளவில் 1 கம்பித்துண்டு
இலை 10 அங்குல அளவில் 1 கம்பித்துண்டு




**செய்யும்முறை:**

10 அங்குல அளவிலான தங்க நிறக் கம்பியை எடுத்து இரண்டு நுனிகளும் சேரும் வண்ணம் குறட்டினால் முறுக்கவும். முறுக்கிய அக்கம்பியை படம் 1ல் காட்டப்பட்டவாறு வடிவமைத்து வர்ணச் சேர்க்கையான ஸ்ரொக்கிநெற்றை போட்டு இறுக்கமாக இழுத்து முறுக்கப்பட்ட நுனிகளுடன் சேர்த்து நூலினால் கட்டவும்.

அதன் பின்னர் மகரந்தம் கட்டுவோம். 8அங்குல அளவிலான கட்டுக்கம்பியோ, அல்லது தங்கநிறக் கம்பியையோ எடுத்து 3 அங்குல அளவுக்கு பஞ்சினால் சுற்றி (படம்:2) மஞ்சள் நிற ஸ்ரொக்கிநெற்றால் மூடிக்கட்டவும். அப்படி கட்டியதும் படம் 2ன் அமைப்பு வந்துவிடும். அவ்வமைப்பு மகரந்தமாகும்.

மகரந்தத்துடன் படம் 1இற்கான இதழை இணைத்து நூலினால் கட்டி கம்ரேப்பினால் சுற்றவும். இவ்விதழை சிறிது கீழ்நோக்கி வளைத்தல் போதுமானது.


விரும்பினால் இதுபோன்று 5,6 பூக்களை செய்து கொள்ளுங்கள்.

**இலை:** இதனையும் இவ்வாறு படம் 3ன் படி வடிவத்தில் செய்து பச்சைநிற ஸ்ரொக்கிநெற் போட்டு நூலினால் கட்டி கம்ரேப்பினால் சுற்றவும். இதனைப் போன்று விரும்பினால் 4,5,6 இலைகளைச் செய்து கொள்ளவும்.

இவ்வாறு அமைக்கப்பட்ட ஐந்தூரியம் மலர்களை விறாந்தையில் சோபா அருகில் மலர்ச்சாடி ஒன்றில் வைத்து அழகுபடுத்த உதவும். இயற்கை ஐந்தூரியம்போல் காட்சி தருவதைப் பார்த்து அனைவரும் மகிழ்கின்றனரா? ●

### பருமனாக இருக்கிறீர்களா?


நாம் அதிக நாட்கள் ஆரோக்கியத்துடன் வாழ உடல் எடையில் அக்கறை காட்ட வேண்டும். உடல் எடையை குறைப்பதில் முக்கிய பங்கு வகிப்பது நாம் உண்ணும் உணவு, உண்ணும் உணவினை அளவை திட்டமிட்டு ஒரு அட்டவணை தயாரித்து அதன்படி உட்கொள்ள வேண்டும். நம் உடலுக்கு செல்லும் உணவானது கலோரியாக மாற்றப்படுகிறது. நாம் உட்கொள்ளும் உணவிலிருந்து கிரகிக்கப்பட்ட சக்தியே கலோரி எனப்படும்.



கொழுப்பு சத்து, மாவுச் சத்து நிறைந்த உணவுகளைப் பொருட்களை கண்டிப்பாக விலக்க வேண்டும். காப்பி, டீ போன்றவற்றில் சர்க்கரை அதிகம் போட்டு அருந்தக்கூடாது. உணவில் வாழைத் தண்டை இரண்டு நாட்களுக்கு ஒருமுறை சேர்த்துக்கொண்டால் உடலின் அதிகப்படியான கெட்ட நீரைப் போக்குகிறது.

தினமும் காலையில் வெறும் வயிற்றில் 1 முடி எலுமிச்சம்பழம் பிழிந்து 1 ஸ்பூன் தேன் சேர்த்து 1 டம்ளர் வெது வெதுப்பான நீர் அருந்திவர ஊளைச் சதை படிப்படியாகக் குறைந்து உடல் உறுதியுடன் விளங்கும். உடற்பயிற்சி மூலமும் உடல் பருமனை குறைக்கலாம். ■

தகவல் பெட்டி



இது சந்தைக்கு வராத மீன்


# தரைக்கு வந்த இராட்சத மீன்!

அமெரிக்காவின் புளொரிடா மாநிலத்தில் உள்ள கடற்கரையில் இந்த இராட்சத மீன் வந்து ஒதுங்கியது.

அதன் நீளம் 16 1/2 அடி. கடலுக்குள் வாழ்ந்தது போதும் என்று கரைக்கு வந்து ஓய்வெடுக்க நினைத்ததோ தெரியவில்லை. உயிர்போய்விட்டது.

இராட்சத மீனோடு காணப்படுபவர் ஜோசெப் பார்ட்டோன்.

## மாடியிலிருந்து விழுந்த குழந்தை கூடியிருந்தோர் பதறினர்! குழந்தை சிரித்தது!!



மூன்றாவது மாடி ஜன்னலிலிருந்து தலைகீழாக விழுந்த குழந்தை லைடெல் கிரெங்கை கீழே-சிமெந்துத் தரையில் விழுந்து விடாமல் தாங்கிப் பிடித்து காப்பாற்றியுள்ளார் ஒரு சாதாரண பூங்கா சுத்திகரிப்புத் தொழிலாளி. ஒரு சில நொடிகள் தாமதித்திருந்தால் பிறந்து 18 மாதங்களேயான அக்குழந்தை தலை சிதறி இறந்திருக்கும்.

டொன் ஹியுக்ஸ் என்னும் 30 வயது பூங்காத் துப்பரவுத் தொழிலாளி தன்னோடொத்த தொழிலாளர்களுடன் பல்ரிமோர் நகரப் பூங்காவில் பணி புரிந்துகொண்டிருந்தார். அண்மையிலிருந்த 3 மாடி கட்டிடத் தருகே நின்ற பலர் பலவிதமான குரல்களில் திகிலுடன் கத்தியதைக் கேட்டு அத்திசையைத் திரும்பிப்பார்த்தார். அவரை அறியாமல் அவர் கால்கள் அவ்விடத்துக்கு டொன்னை இழுத்துச் சென்றன. கீழே நின்றவர்களில் அனேகர் வயதானவர்கள். அவர்கள் நடுவில் ஒரு தாய் அலறிக்கொண்டிருந்தாள்.

மூன்றாவது மாடி ஜன்னலின்மீது சின்னஞ்சிறிய லிண்டெல் நின்று கொண்டிருந்தான். அவன் அபாயகரமான நிலையிலுள்ளான். எந்த நேரத்திலும் கீழே தவறி விழுந்துவிடுவான் என்று கீழே உள்ளவர்கள் கதறுவது லைடெல்லுக்கு வேடிக்கையாக விருந்தது. பயங்கரத்தை உணராத அப்பச்சிளம் பாலகன் அனைவரையும் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

நொடிப்பொழுதில் எதிர்பார்த்தது நடந்துவிட்டது. லிண்டெல் யன்னலிலிருந்து சறுக்கிவிட்டான். தலைகீழாக வந்துகொண்டிருந்தான். கூடி நின்ற கூட்டத்தை விலக்கியவாறு டொன் ஹியூக்ஸ் முன் பாய்ந்தார். இரு கைகளையும் நீட்டி குழந்தையைப் பிடித்துக்கொண்டார்.

"குழந்தை கீழே விழுகிறது என்பதனை என் கண்கள் காண்பதற்கு முன்னதாக என் புலனுணர்வுகள் என்னை உறுத்தியிருக்கவேண்டும். என்னை அறியாமலே அக்குழந்தையை நான் தாவிப் பிடித்துவிட்டேன். மேலே இருந்து வேகமாக வந்தமையினால் குழந்தையைப் பிடித்தபோதும் என் கைகள் தரையை நோக்கியே அழுத்தப்பட்டன. இருப்பினும் தரையிலிருந்து ஒரடிக்கு மேல் குழந்தையுடன் என் கைகள் நின்றுவிட்டன." என்கிறார் டொன்.

அதிர்ச்சியுற்ற தாய் ஷெரியோன் டொன்னிடமிருந்து குழந்தையைப் பெற்றுக்கொண்டதும் கண்ணீர் சொரிந்தார். "என் குழந்தைக்கு உயிர் கொடுத்த தெய்வம் நீங்கள். என் இறுதி மூச்சுள்ளவரை உங்களை மறக்கமாட்டேன்" என்று கூறினார்.

டொன் ஹியூக்ஸ் இதுமட்டுமல்ல, பிறிதொரு சமயத்தில் தீப்பற்றி எரிந்த வீட்டினுள்ளிருந்து மூவரைக் காப்பாற்றியும் இருக்கிறார். பல்ரிமோர் நகரவாசிகள் நகரமேயர் தலைமையில் கூடி டொன் ஹியூக்சுக்கு விருதுகளையும் வெகுமதிகளையும் அளித்து நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

# ஒரு நாயகன்-இருநாயகி

## -101-98-92-

பொரிஸ் கபியார்டென்னுக்கு வயது 101. மேற்கு அஸெர்பெய்ஜானிலுள்ள சிறிய பண்ணையின் உரிமையாளரான இவருக்கு 98 வயதான மனைவி உண்டு. தெரேசா என்பது அவள் பெயர். இருவரும் மணம் முடித்து 13 வருடங்களான போது- 1988ல் தங்கள் குடும்பத்தில் மற்றுமொரு உறுப்பினரைச் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் பொரிசுக்குத் தோன்றியது. தன் கருத்தை மனைவி தெரேசாவிடம் கூறினார். கணவனின் கருத்துக்கு மறு கருத்துக் கூறாத தெரேசா உடன் சம்மதமளித்தாள்.

பண்ணையை விட்டு இருவரும் ஒரு நாள் பட்டணம் சென்றனர். ஒல்கா என்ற பெண்ணைக் கண்டதும் பொரிசுக்கு அவள்மீது காதல் அரும்பியது. தெரேசாவே தன் கணவனுக்காகத் தூது போனாள். தூது வெற்றியளித்தது.

பொரிஸ் தன் இரு மனைவியருக்கும் தனித்தனி படுக்கை அறைகள் அமைத்துக் கொடுத்திருக்கிறார். கசப்பில்லாமல் வாழ்க்கையை இருவருடனும் சமமாகப் பகிர்ந்துகொள்கிறார். இருவருமே உருசியாக உணவு தயாரிப்பதில் சிறந்து விளங்குவதாக பொரிஸ் கூறுகிறார்.

"எந்தக் கவலையும் அணுகாமல் எங்களை எங்கள் கணவர் கவனித்து வருகிறார்.



www.padippakam.com

# சினிவிசிட்



ராதாரவி
படம்-இளைஞர் அணி

## ஜீவா

கார்வண்ணன் இயக்கிய 'பாலம்', 'புதிய காற்று' போன்ற படங்களில் கதாநாயகனாக நடித்த முரளிக்கு ஜீவா என்று பெயர். தற்போது கார்வண்ணன் இயக்கத்தில் முரளி நடிக்கும் 'தொண்டன்' படத்திலும் முரளிக்கு ஜீவா என்றுதான் பெயர்.

## படக்கூடாது விரல் நகமும்!

அவனுக்கோ எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் தொட்டுப்பார்க்க ஆசை. அவனுக்குத்தான் கழுத்தை நீட்டுகிறாள் தமிழச்சி. கணவனின் சுரூபம் தெரியவர பூ புயலாகிறது. "தொடாதே. உன் விரல் நகமும் படவிடமாட்டேன்" என்கிறாள் தமிழச்சி. அவன் திருந்துகிறான். ஆனால் அவளோ நம்ப மறுக்கிறாள்.

நம்ப மறுக்கும்போது சோகம் நெகிழ்ச்சி-என்று ரசிகர்களின் குறிப்பாக பெண்களின் மனதைத் தொடும் வகையில் காட்சிகள்-சம்பவங்கள். 'தமிழச்சி' படம் வந்தபின் இதையெல்லாம் பெரிய திரையில் அல்லது சின்னத்திரையில் கண்டுகளிக்கலாம்.

## காளையின் கதை

பிரபு நடித்துள்ள 'ஜல்லிக்கட்டுக்காளை' விரைவில் திரைக்கு வரப்போகிறது. 'ஜல்லிக்கட்டு' என்றதும் மாட்டுப்போட்டி என்று நினைத்தால் அது தப்பு.

ஜல்லிக்கட்டுக்காளை போன்ற இளைஞன் ஒருவரைப் பற்றிய கதைதான் அது.

அந்த இளைஞர்தான் பிரபு. அவருக்கு ஜோடி கனகா. எண்ணெய் ஆலையில் பிரபு வேலை செய்கிறார். ஆலையின் உரிமையாளரது மகள் கனகா. இருவரும் கண்ணோடு கண் நோக்கிவிட காதல் வந்துவிடுகிறது.

பிறகென்ன, காதலைப்பிரிக்க சதி. அந்தச் சதிகளை தகர்த்து வெற்றிபெறுகிறார் 'ஜல்லிக்கட்டுக் காளை'. கனகா கிராமத்துப் பெண்ணாக நடித்தாலும் கவர்ச்சிக்கு குறைவைக்காமல் நடித்துள்ளார். பிரபுவின் சண்டைக்காட்சிகள், கவுண்டமணி-செந்தில் கூட்டணியின் நகைச்சுவை என்று மசாலா சேர்த்து படமாக்கி வருகிறார்கள்.

## எஸ்.பி.பியின் 'ஹலோ பிரதர்'

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் முதல் முதலாக தெலுங்கில் தயாரித்த 'ஹலோ பிரதர்' பெருவெற்றி பெற்றுள்ளது. நாகார்ஜுன் இரட்டை வேடத்தில் நடித்திருக்கும் இந்தப் படத்தில் அவருக்கு ஜோடிகளாக ரம்யா கிருஷ்ணனும், சௌந்தர்யாவும் நடிக்கிறார்கள். தமிழில் மொழிமாற்றப்பட்டு வரும் இந்தப் படத்தினையும் எஸ்.பி.பாலசுப்பிரமணியமே வெளியிடுகிறார். அத்துடன் நாகார்ஜுனுக்கு தமிழில் இவரே பின்னணி குரல் கொடுத்துள்ளார்.



சிலைக்குத்தான் பூ சூடுகிறாரோ?

ஹீரா

## ஒரு நேரத்தில் ஒன்று!

## விடுவதாக இல்லை

திருமணத்திற்குப் பின்பு சுஹாசினியின் 'இந்திரா' படத்துடன் நடிப்புக்கு முழுக்குப் போடவிருந்த அரவிந்த்சாமி, தனது நண்பர் ஒருவரின் வேண்டுகோளை ஏற்று புதிய படமொன்றில் நடிக்கவுள்ளார்.

இதில் அரவிந்தசாமிக்கு ஜோடியாக மதுபாலா நடிப்பார் என்று தெரிகிறது. விரைவில் இப்படத்தின் படப்பிடிப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அரவிந்தசாமி பல தடவை சினிமாவுக்கு டாட்டா காட்ட நினைத்தாலும் சினிமா உலகம் அவரை விடுவதாக இல்லை.

## கத்தரிக்கு வேலை இல்லை

"எனது படங்கள் என்றால் தணிக்கைக் குழுவின் கத்தரிக்கு எந்தவொரு காட்சியும் இரையாகாது. அது போன்றுதான் நான் நடித்து அடுத்து வரவுள்ள 'ஸ்ரீட் பைட்டர்' படமும். ஆபாசம், வன்முறை போன்றவற்றிற்கு முக்கியத்துவம் இல்லாது ஊழல் காண்ட்ராக்டர் ஒருவரையும், அவருக்கு உடந்தையாக இருக்கும் ரயில்வே அதிகாரியையும் தட்டிக்கேட்கும் துணிச்சல்காரப் பெண்ணாக நடித்து வருகிறேன்" என்றார் லேடி சுப்பர் ஸ்டார் விஜயசாந்தி.

## வெயிட்

'வைத்தல்' படம் தோல்வியடைந்ததைத்தொடர்ந்து 'மண்ணைத் தொட்டுக் கும்பிடணும்' படத்தை மிகவும் எதிர்பார்ப்புடன் பார்த்திருக்கிறார் செல்வா.





ரஜினிகாந்த்
படம்-பாட்சா

## இளைஞர்கள் நெருப்பு

"இளைஞர்கள் நெருப்பு மாதிரி. அவர்களை வைத்து விளக்கேற்றவும் செய்யலாம். ஊரைக்கொளுத்தவும் வைக்கலாம். நான் இந்த இளைஞர் அணியை நாட்டுக்காக பயன்படுத்தி இருக்கிறேன். இது ஏழு இளைஞர்கள் சம்பந்தப்பட்ட கதை" என்று தனது சொந்த தயாரிப்பான 'இளைஞர் அணி' படத்தின் கதையை விளக்கியுள்ளார் ராதாரவி. கதையை எழுதியிருப்பதும் ராதாரவிதான். திரைக்கதை-இயக்கம் கே.ஆர்.செல்வராஜ்.

இது செல்வராஜ் இயக்கும் முதல்படம். ராஜராஜன் என்னும் பெயரில் பொலிஸ் அதிகாரியாகவும் நடிக்கிறார் ராதாரவி.

## முத்தமிட்டதா-காற்று முத்தமிட்டதா?

எகிப்தில் உள்ள பிரமிட் போன்று அரங்கம் அமைத்து 'பவித்ரா' படத்தின் பாடல் காட்சியொன்று படமாக்கப்பட்டது.

புதுமுகம் அஜித்குமார்-கீர்த்தனா ஆகியோர் நடித்த பாடல் காட்சியின் முதல் வரிகள் இவைதான்:

"மொட்டு விட்டதா மொட்டுவிட்டதா
பெண் மனதில் முத்தமிட்டதா முதல்முறை
காற்று வந்து முத்தமிட்டதா..."

நாசர்-ராதிகா ஜோடி நடித்துவரும் 'பவித்ரா' படத்திற்கு இசை-ஏ.ஆர்.ரகுமான். பாடல்கள்-வைரமுத்து.

## பெயர் வரும்

விக்னேஷ் கதாநாயகனாக நடிக்க கீர்த்தனா-ரூபஸ்ரீ இருவரும் அவருக்கு ஜோடியாக நடித்துவரும் படம் 'வெற்றிமுகம்.' "தென்னவன் இயக்கிவரும் 'வெற்றிமுகம்' இளைய தலைமுறையைக் கவரும். எனக்கும் பெயர் தேடித்தரும்" என்கிறார் 'கிழக்குச் சீமையிலே' புகழ் விக்னேஷ்.

## இவையும் குசியாக

5 அடி நீளமான 2 பாம்புகள். ஒரு கழுகு. 100 பெருச்சாளிகள். இவையெல்லாம் படு குசியாக நடித்துவரும் படம் 'சின்ன தேவன்.' கணேஷ்-சரண்யா ஜோடி நடித்துவரும் படம் இது.

## நாயகி ஹீரா

'மகளிர் மட்டும்' படத்தை தயாரித்தது போல பாலுமகேந்திரா இயக்கத்தில் அடுத்து கமல் தயாரிக்கும் படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார் ஹீரா. கதாநாயகன் ரமேஷ் அரவிந்த். "கமல் தயாரிப்பில் கதாநாயகியாக நடிப்பதை பெருமையாக நினைக்கிறேன்" என்று சொல்கிறார் ஹீரா.

## மினிசினி


- கமலின் நூறாவது படமான 'ராஜபார்வை', 'அபூர்வ சகோதரர்கள்' போன்ற படங்களை இயக்கியவர் சிங்கீதம் சீனிவாசராவ். இவர் விரைவில் பிரபு கதாநாயகனாக நடிக்கும் புதிய படமொன்றை இயக்கவிருக்கிறார்.
- தற்போது படவாய்ப்புகள் ஏதுமின்றி பாடல்காட்சிகளில் நடித்து வருகிறார் ரூபினி. தமிழில் படவாய்ப்புகள் இல்லாதபோதிலும் இரண்டு இந்திப் படங்களில் கதாநாயகியாக நடித்து வருகிறார். இவற்றில் ஜாக்கி ஷெராப் ஜோடியாக ஒரு படத்தில் நடிக்கிறார் ரூபினி.
- திருமணமான பின்னர் மீண்டும் நடிக்க வந்து கே.ஆர்.விஜயா, ஸ்ரீவித்யா, மஞ்சுளா போன்றோர் பிரபலமானார்கள். இந்த வரிசையில் முன்னர் கதாநாயகியாக நடித்த பத்மப்பிரியா இரண்டு புதிய படங்களில் நடித்து வருகிறார்.
- வெளிவரத் தயாராகியுள்ள 'ஜல்லிக்கட்டுக்காளை' படத்தை அடுத்து இப்படத்தின் தயாரிப்பாளரான கே.பி.பாலு, கார்த்திக் நடிக்கும் புதிய படமொன்றைத் தயாரிக்கவுள்ளார். இதில் கார்த்திக்கிற்கு ஜோடியாக மீனா நடிக்கவுள்ளார்.
- சத்தியராஜ் நடிக்கும் 'வீரப்பதக்கம்' படத்தின் கதாநாயகியான ஊர்வசி, அமைச்சர் வேடத்தில் நடிக்கிறார்.
- 'சிக்கு புக்கு சிக்கு புக்கு ரயிலே' பாடலின் ஆரம்ப வரிகளைப் பாடியவர் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானின் சகோதரி மகன் பிரகாஷ்குமார். அண்மையில் பிரகாஷ்குமார் பிரபல இந்தி இசையமைப்பாளர் அனுமாலிக் இசையில் இந்திப் படமொன்றிற்காகப் பாடலொன்றைப் பாடியுள்ளார்.
- தெலுங்கில் 'பாம் பிரெண்ட்' என்ற படத்தை இயக்கியுள்ள ஒளிப்பதிவாளர் அசோக்குமார், இப்போது 'பிரேமிக்குப் பிரேமின் தெலுசா' என்ற படத்தை இயக்கி வருகிறார்.
- சிவாஜி பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்த 'உரிமை கீதம்' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் ஆர்.வி.உதயகுமார். இவர், சிவாஜி பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் புதிய படத்தினை இயக்கவுள்ளார்.



அஜித்-அஸ்வினி
படம்-முதல் பயணம்

## தீபாவளி ரிலீஸ்





## பச்சைக் கிளி

பச்சைக் கிளி பச்சைக்கிளி
பழம் தின்னும் பச்சைக்கிளி
அச்சமின்றி பறந்து வந்து
அழகாய் விளையாடும் பச்சைக்கிளி

சொன்னதைச் சொல்லும் சின்னக்கிளி
கண்ணைச் சிமிட்டும் வண்ணக்கிளி
தென்னை மரத்துச் சோலைக்கிளி
என்னைச் சுற்றி வரும் அன்புக்கிளி

கீக்கி என்று கத்தும்கிளி
கிட்டத்தில் வந்தால் தொற்றும்கிளி
தூக்கி மகிழச் சொல்லும் கிளி
துள்ளித் துள்ளி ஓடும் கிளி



கூண்டில் உனை அடைத்திடுவேன்
கோபம் கொண்டு எனைப் பார்த்திடுவாய்
தாண்டி வரத் துடித்திடுவாய்
தாளாமல் நானும் திறந்து விடுவேன்.

ஏ.சி.மஹீஸா
முதலைப்பாளி மு.வி.-பள்ளிவாசல்துறை.

"சின்னஞ் சிறுகுருவி போலே-நீ
திரிந்து பறந்துவா பாப்பா!
வண்ணப் பறவைகளைக் கண்டு -நீ
மனத்தில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா!"
-சுப்பிரமணிய பாரதியார்-

**பாப்பா முரசு சிறுகதை**

# யார் அதிபுத்திசாலி?

முரளிக்குத் தன்னை விட்டால் இந்த ஊரில படித்தவன் எவனும் இல்லை தான்தான் அறிவாளி, என்கின்ற கர்வம் எப்போதும் உண்டு. யாருடனாவது பேசும் போதும், "எனக்குத் தெரியாத விஷயங்களை இல்லை, என்பான்.

அவனுடைய நண்பன் குமரனுக்கு அவனது கர்வத்தை அடக்க வேண்டும் எனத் தோன்றியது. அதற்கான சந்தர்ப் பத்தையும் எதிர்நோக்கிக் காத்திருந்தான்.

ஒருநாள் பள்ளியில் பொது அறிவுப் போட்டி நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந் தார்கள். அந்தப் போட்டியில் கேள்வி கேட்பது முரளிதான். அவனுடைய கேள்விகளுக்கு யார் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம். விடை தெரியாத வர்கள் முரளியிடம் தோற்றவர்களாகி விடுவார்கள். அத்துடன் யாரும் முரளி யிடம் கேள்விகேட்டு அவனை மடக்கலாம்.

குமரன் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு முரளியை பலர் முன்னிலையில் தோற்கடிக்க வேண்டும் என்று முடிவு செய்துகொண்டான்.

நிகழ்ச்சி நடைபெறும் அன்று-

முரளி கேள்விகளைக் கேட்பதற்கு மணி அடிக்கப்பட்டது.

முரளி எழுந்து மற்ற மாணவர்களைப் பார்த்து, "உங்களுள் யார் அதிபுத்தி சாலியோ அவன் என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்ல மேடைக்கு வரலாம்," என்று வழக்கமாகக் கூறுவதைக் கூறினான்.

குமரன் முன்பே சொல்லி வைத்தபடி அத்தனை மாணவர்களும் குமரனுடன் எழுந்து மேடைக்கு வந்தார்கள்.

முரளி கோபமாக, "நான் ஒரே ஒருவரிடம்தான் கேள்விகளைக் கேட்பேன். அவன் அதிபுத்தி சாலியாக இருக்கவேண் டும் இதுதான் என் நிபந்தனை," என்றான்.

"நானே அந்த அதிபுத்தி சாலி."

"நானே அந்த அதிபுத்தி சாலி."

"நானே அந்த அதிபுத்தி சாலி."

கூட்டத்தில் இருந்த மாணவர்கள் அனைவரும் குமரன் சொல்லிக் கொடுத்த படி கூக்குரலிட ஆரம்பித் தார்கள்.

முரளிக்கு ஒரே குழப்பம்.

"அனைவரும் அதிபுத்தி சாலி என்றால் எப்படி? யாரோ ஒருவன் தானே அதிபுத்திசாலியாக இருக்க முடியும்?" என்று முரளி கூறினான்.

இந்தப் பதிலைத்தான் குமரன் எதிர்நோக்கி இருந்தான்.

"முரளி, இங்கே அதிபுத்திசாலியாக ஒருவன் மட்டுமே இருக்க முடியும் என்று நீ சொன்னது சொன்னதுதானே, அதில் மாற்றம் இருக்காதே?" என்றான் குமரன்.

"நிச்சயம் இருக்காது. நீங்கள் எத்தனை பேர் மேடைக்கு வந்திருக்கிறீர்கள்," என்று கேட்டான் முரளி.

"உன்னையும் சேர்த்து இருபது பேர்" என்றான் குமரன்.

"சரி இதில் அதிபுத்திசாலியை நீயே தேர்ந்தெடு, அல்லது அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டுவிடு நான் தேர்ந்தெடுக் கிறேன்," என்றான் முரளி.

"சரி நானே தேர்ந்தெடுக்கிறேன்...எவன் ஒருவன் வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் எத்தனை என்று கூறுகிறானோ அவனே அதிபுத்திசாலி... என்ன சொல்கிறாய்?" என்று முரளியைப் பார்த்துக்கேட்டான் குமரன்.



முரளி தன்னிடம் குமரன் இப்படி ஒரு கேள்வியைக் கேட்பான் என்று எதிர்பார்க்கவே இல்லை. அதனால் அதிர்ந்து போனான்.

"ஒரு இலட்சத்து எண்பதினாயிரம்."

"இல்லை ஒரு கோடியே எட்டு இலட்சம்."

"இல்லை இல்லை கோடானு கோடி உள்ளன."

இவ்வாறு கூட்டத்தில் ஆளுக்கொரு பதில் சொல்லிக்கொண்டே வந்தார்கள். இது சரியான பதில் அல்ல எனச் சொல்லி அனைவரையும் கீழே இறங்கிப் போகச் சொன்னான் குமரன்.

கடைசியாக மேடையில் மிஞ்சியது முரளியும், குமரனும்தான். முரளிக்கு இக்கேள்விக்குரிய விடை தெரியவில்லை.

"குமரா எனக்குத் தெரியவில்லை உன்னால் சொல்ல முடியுமென்றால் சொல். அது சரி என நிரூபித்தால் உன்னையே அதிபுத்திசாலி என ஏற்றுக் கொள்கிறேன்," என்று சொன்னான் முரளி.

"நூறுகோடி நட்சத்திரங்களுள் எத்தனை நட்சத்திரங்கள் இல்லையோ அதைக் கழித்துவிட்டால் மீதி எவ்வளவோ அத்தனை நட்சத்திரங்கள் உள்ளன," என்றான்.

"இந்த பதிலில் நேர்மையில்லை" என்று முரளி வாதாடினாலும் அப்போதைக்கு அக்கேள்விக்கு ஒரு பதிலைச் சொல்லிச் சமாளிக்கும் திறமை தன்னிடம் இல்லை என்பதை ஒப்புக்கொண்டு தன் தோல்வியை ஒப்புக்கொண்டான் முரளி.

அன்றுடன் முரளியின் கர்வமும் அழிந்தது.

## அறிஞர்களின் அறிவுரைகள்


- நாம் அனுபவிக்கும் கஷ்டங்களே நமக்குக் கடமையை உணர்த்தி மனத்தெளிவையும் உறுதியையும் அளிக்க வேண்டும். -காந்தியண்ணல்-
- இருட்டைக் கடிந்து ஏசாதே பயனில்லை விளக்கை ஏற்று இருள் தானாகவே நீங்கிவிடும். -லெனின்-
- நீ ஒரு பெரிய புத்தகத்தை அவசரமாக படித்து முடிப்பதைவிட ஒரு பக்கத்தை நன்றாய்ப் படித்து அறிவு பெறுவது மேலானது. -மெக்கலே-



- எந்தக் கையும் ஓர் அலையையோ ஒரு நிழலையோ பற்றிக்கொள்ள முடியாது. உனக்காக உன் தொழிலாளர் வர்க்கத் திற்காக இன்றே, இப்போதே உறுதி யோடு போராடு வெற்றி பெறுவாய். -மா ஓ சே துங்-
- மன்னிக்கும் மனப்பான்மை பெற்றவர் களே இனிய நண்பர்களாகவும், ஆசான்களாகவும், தலைவர்களாகவும் உயருகிறார்கள். -ஜேம்ஸ் ஆலன்-

கந்தப்பெருமாள் நிமலதாசன்
மட்/மாங்காடு சரஸ்வதி வித்தியாலயம்
செட்டிபாளையம்.

## செய்து பாருங்கள் வண்ணாத்திப்பூச்சி



இரண்டு தாள்களை எடுத்து அதில் ஒரு சிறிய வட்டம் மற்றும் ஒரு பெரிய வட்டத்தை வெட்டி எடுத்துக்கொள்ளவேண்டும். தேவையானால் இரு வட்டங்களுக்கும் வர்ணம் தீட்டிக்கொள்ளுங்கள். அந்த வட்டங்களை படத்தில் காட்டியுள்ளபடி மடித்து அவற்றை நடுவில் ஒன்றாகச் சேர்த்துக்கட்ட வேண்டும். இவைதான் வண்ணாத்திப் பூச்சியின் சிறகுகள், இவற்றை ஒரு அட்டையில் ஒட்டி நடுவில் வயிறு, தலை போன்றவற்றை வரையவும்.

## விடுகதைகளும் விடைகளும்

1. ஒரு முழக்குழியிலே கால் படி மல்லிகைப்பூ. அது என்ன?
2. ஒற்றைக்காலில் ஆடுவான். ஓய்ந்துபோனால் படுப்பான். அவன் யார்?
3. ஓங்கி வளர்ந்தவன் ஒரு பக்கம் சாய்ந்தான். அவன் யார்?
4. ஓடுவான். நிற்கமாட்டான். ஒளிந்து கொள்வான். வெளிவருவான். அவன் யார்?
5. ஒரு சாண் இரு பலகை இருநூறு தலைவாசல். அது என்ன?
6. ஒற்றைக்கால் மனிதனுக்கு எட்டுக்கை. அவன் யார்?
7. ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டை.அது என்ன?
8. ஓட்டுத் திண்ணையிலே பட்டு காயுது. அது என்ன?
9. ஒரு மரம் ஏறி ஒரு மரம் பூசி ஒரு மரம் வீசிப் போகிறான். அவை எவை?
10. ஓட்டம் நின்றால் ஆட்டம் போச்சு எந்த ஓட்டம்?

**விடைகள்**

1. நெருப்பு 2. பம்பரம் 3. மூங்கில்
4. நிலா 5. தேன்குழல் பிடி
6. குடை 7. அடுப்பு 8. மூக்குத்தி
9. பாதக்குறடு-சந்தனம்-விசிறி
10. ரத்த ஓட்டம்

அனுப்பியது: கே.ஜுனைட்-கொழும்பு-10.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01.10.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 58
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## எண் விநோதம்

49=7×7
4489=67×67
444889=667×667
44448889=6667×6667
4444488889=66667×66667
444444888889=666667×666667
44444448888889=6666667×6666667

அனீஸ் எம்.ஷாகிர்-கும்புகந்துறை.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 56


**பரிசுக்குரியவர்**
வி.ராதிகா
இராமநாதன் மகளிர் கல்லூரி-பம்பலப்பிட்டி

**பாராட்டுக்குரியவர்கள்**

ஏ.கே.காளிதாசன்-இறம்பொடை த.ம.வி-இறம்பொடை.
பா.பாலரஞ்சனி-அக்கரப்பத்தனை.
ப.தயாபரன்-இ.கி.ச.ஸ்ரீ.கோணேஸ்வரா இந்துக்கல்லூரி-திருகோணமலை.
ஜி.சுதர்சினி-கொழும்பு-06.
ராஷிதா ஹுசைன்தி-மு.ம.வித்தியாலயம்-திருகோணமலை.
ச.சண்முகலதா-புனித சிசிலியா பெ.ம.வித்தியாலயம்-மட்டக்களப்பு.
செ.குமுதராஜா-கொழும்பு-09.
விநாயகமணி டெனிற்றா-விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயம்-மட்டக்களப்பு.
இந்திரநாதன்-பெரும்தெரு விகேணேஸ்வரா மகா வித்தியாலயம்-திருகோணமலை.
எஸ்.எம்.பாரிஸ்-புத்தளம்.
எஸ்.செல்வகுமார்-கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம்-கொட்டகலை.

## டொல்பின்கள்

- **டொல்பின்கள் என்றால் என்ன?**
சிறிய திமிங்கலங்களுக்கு டொல்பின்கள் என்று பெயர். நீர்வாழ் உயிரினங்களிலேயே மிகவும் புத்திசாலிகள் இவை.
- **கடலில் நீரில் மட்டும்தான் டொல்பின்கள் உயிர் வாழுமா?**
இல்லை. இவை நன்னீரிலும் உயிர் வாழக்கூடியவை.
- **கடல் நீரில் வாழும் டொல்பின்களுக்கும், நன்னீரில் வாழும் டொல்பின்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் என்ன?**
நன்னீரில் வாழும் டொல்பின்களுக்குப் பார்வை கிடையாது. வௌவால்கள் எப்படி ஒ[illegible] அதிர்வுகளை ஏற்படுத்தி சரியான திசையில் செல்கிறதோ அ[illegible]போன்றுதான் நன்னீரில் வாழும் டொல்பின்களும் ஒலி [illegible]திர்வுகளின்மூலம் சரியான பாதையில் செல்கின்றன.
- **இவை உலகில் அதிகளவாகக் காணப்படுகின்றனவா?**
இல்லை. இவற்றின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.
- **இவை குறைந்து வருவதற்கான கா[illegible]ணங்கள் என்ன?**
இவற்றிலிருந்து கிடைக்கும் ஒருவகை எண்ணெய், மூட்டு வலிக்கு மருந்தாகப் பயன்படுவதால் டொல்பின்கள் அதிகளவு வேட்டையாடப்படுகின்றன.



## நடந்து வா கிளி!

இந்த
மறைமுதல்
போக்குகளை
எப்படித்தாங்கும்
என்–மனசு...?

என்–கிராமத்து
கிளியே
நாளென்ன...
பிணம் தின்னும்
'கழுகா'...?
இல்லை...
சாதாரண
மனிதன் தானே.

சும்மா
வெட்டி, வெட்டி
போகாம
திரும்பி பாரு....மணி!!

ஒவ்வொரு
பொழுதுகளிலும்
இரண்டு நேரம்
உன்னை
விசாரிக்காமல்
விட்டதில்லையே!
இப்படி
இருக்கையில்
உன்–
பூசனிக்காய்
கன்னத்தை
ஏனடி
புடவையுள்
மறைக்கிறாய்??

என்னைப் போல்
உனக்கும்
மனசுக்குள்
ஏதோ
இருக்கும்போது
ஏன் புள்ள
இந்த
'டிஸ்கோ, போக்கு?

ஆலம்குளத்தின்
அந்தப் புர ராணியே!
இத்தனை
விலைவாசிக்கு
நடுவில்
உன்
'மெரி கோல்ட்'
மேனியை
எப்படியடி
அழகுபடுத்துகிறாய்?

எனக்குள்
தோன்றியுள்ள
இந்த
'கத்தரிக்காய்'
காதலுக்கு
வெறும்
சிரிப்புதான்
அடையாளம்
என்றால்
பார்க்காமல்
போ....கிளி....
இல்லையேல்
என்னை
நாடி
நடந்து வா கிளி?

ஆலம்குளத்தூர்
ரோஷான் ஏ.ஜிப்ரி.

# தேன் கிண்ணம்



## ரசிக்கும் நேரம்

நிலவு
காய்வதென்னவோ
வான்வெளியில்தான்!

மிதக்கும்
பொருளும் நீரில்தான்!

மணம்
தருவதும் மலரில்தான்

இவை
இயற்கையின் நீதி!

ஆனால்...!
'ஆமாம்'
என் இதயவானிலும்
இதயவூற்றிலும்
இதயவனத்திலும்..!
என்றும்...

உலாவருவதும்
நீச்சலடிப்பதும்,
பூத்து நிற்பதும்
நீ..!
ஒருத்திதான்!

ஓ...
என் அன்பே!
கொட்டும் பனியும்
முட்டும் தென்றலும்
உன்
'எவரெஸ்ட்' இமய
இதயத்தில்
காதலைக்
கூவிக்கொள்வது
ஒலிப்பதில்லையா?

ஜீவ மனோ

பிரளயத்தில்
இரு ஜீவன்கள்–
கூடி மகிழ்வதனை
ரசிக்கும் நேரம்.

உறைந்த பனிப்படல
உள்ளத்தில்!
கதிரவன் வரவால்
அகம் மலரும்
ஆவல் வருவதில்லையா?

கிண்ணியா–ஹசன்ஜி.

## தாஜ்மஹாலுக்கு ஒரு விண்ணப்பம்

உன்
மன பிரதேசத்தில்
நாட்டப்படாத
காதல் தாவரம்
நான். உன்
காதலை தா வரமாய்
எனக்கது தேன்!

உன்
தேசத்திற்கான
ஒப்பந்தத்தை
வார்த்தைகளால்
எழுத நினைக்கும்
பொழுதுகளில்
வேலை நிறுத்தம்
செய்து விடுகின்றன என்
உதடுகள்.

காதல் தொழிலுக்கான
சகல
தஸ்தாவேஜுகளுடன்
இருந்த போதுங்கூட
உன் விழிகளின்
விசாரணைகளில்
தைரியத்தின்
அடையாள அட்டை
இழந்து நிற்கும்
அப்பாவியாகிறேன்.

மௌனமென்னும்
பரீட்சைக் கூடத்தில்
காதலை எழுதவிட்டு
இதயத்தால்
கண்காணிக்கா
இதயமே....

என்
பதில்களுக்கான
கேள்வியை
நீயுன் விழிகளால்
எழுதிவிட்டால் போதும்.
நான் பரீட்சை
எழுதாமலேயே
சித்தியடைந்து
கொள்கிறேன்.

மெய்யன் நடராஜ்
பூண்டுலோயா.



## காதல் ரோஜாவே..!

ஸ்நேகிதி!
விடைகளை
நீ–
விழிகளில்
வைத்திருப்பதேன்?
திரும்பிப்பார்
வினாக்குறியில்
நான்
தொங்கிக் கிடப்பதை.

•

என்
கவிதைகளுக்கு
உயிரில்லாமல்
இருக்கலாம்
உனக்கோர்
காதல்
உயில் எழுத,
ஆனால்
கரங்களுக்கு
உரமுண்டு
கடைசிவரைக்கும்
அணைத்துக்கொள்ள,

•

நிலவினை
இரவு
தழுவுதலை
நேசிக்கும்–நீ
தூரத்து
மணல் வெளியில்
விரக்தியாய்
அலையும்
என் உணர்வுகளை
நிராகரிப்பதேன்?

•

நீ புரியும்
மௌனயுத்தம்
வெலிக்கடைக்
கைதியாக
அல்லவா
என்னை
வேதனை
செய்து
வேடிக்கை
பார்க்கின்றது!

•

வா...அன்பே..
வந்து...
என்னை மாலையிடு!

•

செவ்வாய்க்
கிரகத்தில்
சேர்ந்து நாம்
காதல் விதிகளை
வரையறை
செய்யலாம்.

ஆரையம்பதி–மனோ.



## கணக்கின் விடை யாரறிவாரோ!

கூட்டல் கணக்குக்கு!
விடைக் கேட்டு நின்றே
கழித்தல் கணக்கின்
விடையாகி விட்டோம்!
பிரித்தல் கணக்கொன்றே
சரியான தென்று
விடைக்காய் நாமும்
கணக்கொன்று செய்தோம்!

பெருக்கல் கணக்காக
படைமு காம்கள்
அதற்கு இணையாக
அகதிமு காம்கள்
தடையாக வந்தே
தருகின்ற விடைகள்
விடைகாணா சினைகள்!
பிரித்தலின் வினைகள்!

அரசியல் வரைவுகள்
சமச்சீர் அச்சற்ற
உச்சியாள் கூறுகள்!
இழிவுப் பெறுமானம்
இவர்களின் தெரிவுகள்!
உயர் பெறுமானமோ
உயிர்களின் சேதங்கள்
உறைவிட நாசங்கள்!

இணைகர தேற்றங்கள்
நிறுவலில் மாற்றங்கள்!
இருவித தோற்றங்கள்
இணையாத கூட்டங்கள்!
இனங்களின் தேவையோ
இருபடிக் கோவைகள்!
இவர்களின் தேவையோ
தேர்தலில் போர்வைகள்!

பல்வேறு அடிகள்
கணிதபடி முறைகள்
இவர்கற்ற போதும்
இருபடி சமன்கள்
இல்லாது சினங்கள்
தீர்த்திடும் குணங்கள்
இனங்களில் பிணங்கள்
ஆக்கிடும் சமன்கள்!

சூனியத் தொடைகள்
இருபக்க நிலைகள்!
முடிவில்(லா) தொடைகள்
போராடும் படைகள்!
இயற்கைச் சைன்கள்
தேர்தலில் பொய்கள்
இயற்கைகோ சைன்கள்
விரக்தியில் மனங்கள்!

கிழக்கை வடக்கை
இணைக்காது மடக்கை
காணுமோர் கணக்கை
மறைக்கும் தனிக்–கை
கூறுமா நம்பிக்கைக்
கொள்ளவே பிணக்கைத்
தீர்க்குமோர் கணக்கை
பறிக்குமுன் வாக்கை?

வைத்துமுன் நம்பிக்கை
கொடுத்தபின் வாக்கை
எடுத்ததே தும்பிக்கை
இதுவரை துவக்கை!
மாற்றுமுன் கணக்கை
தீர்த்திட பிணக்கை
கூறுமோ ஓர்விடை
தேற்றவே வடக்கை?

கவிஞர். மலைவாணன்.

## மின்னல்

இன்றைய
சம்பள நாளின்
குறியீடு!

அந்தரத்தில்
நெளிந்துசெல்லும்
பாம்புகள்!

மழைவருகின்றதென்று
வானமகள்
நிலகுடிகளுக்கு....
எழுதியனுப்பும்
தந்தி எழுத்து!

அரசியல்வாதிகளின்
வார்த்தையில்
வந்த–
சருக்கெழுத்து!

கட்சிதாவும்
அரசியல்வாதிகளின்
வேகத்தோடு....
போட்டிபோடும்
போட்டியாளன்!

கொடியிடை
தேடியவனுக்கு
நூலிடையாய்
காட்சி தருபவள்!

சோ.ஸ்ரீதரன்
பொகவந்தலாவை.

## கண்ணீர்

வெய்யில் இன்றியே வீசிய வெம்மையில்
மேகங்கள் இன்றியே உதிர்ந்த மழைத்துளி.

## மனம்

கற்பனை வானில் உயரே பறக்க
நிஜமெனும் நூலை அறுத்திடும் பட்டம்.

## பூக்கள்

ஊமைகள் எழுதிவைத்த
காதற் கடிதங்கள்.

## தலையணை

கனவுகளின் கர்ப்பப்பை

## பணம்

வாழ்க்கை என்கின்ற சூதாட்டத்தில்
பகிரப்பட்ட சீட்டுக்கட்டு

## நிலவு

இரவின் நெற்றியில் சந்தனப் பொட்டு
இரவல் அழகில்
உலவும் கனவு



## மது

புட்டிக்குள் அடைக்கப்பட்ட
குட்டிச் சாத்தான்.

## இருள்

இல்லாமையின் இருப்பு.

## டயறி

நாட்களின் மரணசாசனம்.

## மனிதன்

எதிர்காலத்தைப் பெறுவதற்காய்
நிகழ்காலத்தை விற்றுவிட்டுக்
கடந்தகாலத்தை எண்ணி ஏங்கும்
பரிதாபப் பிறவி.

## சினிமா

திறந்த விழிகள் காணும் கனவு.

–மதுரகவி–

# உதடு எப்படி? உள்ளம் அப்படி!

ஒருவரின் உதடுகளை வைத்து அவர் எப்படிப்பட்டவர் என்று சொல்லிவிட முடியும். இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் உதடுகளை வைத்து உங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்.



**அகன்ற,அழுத்தமான உதடு:** திறமைசாலிகள்,நெருக்கடி நேரங்களில் பிறருக்கு கைகொடுப்பவர்கள்.



**பெரிய கீழ் உதடு:** மென்மையான உள்ளம் கொண்டவர்கள். எளிதில் ஏமாறுபவர்கள்.



**முன்னோக்கித் தூக்கிய மேல் உதடு:** சுயநலவாதிகள். அதிகம் பேசாதவர்கள். சட்டென்று கோபம் வரும்.



**தடித்த உதடு:** பாசம் நிறைந்தவர்கள். ஆனால் கோபக்காரர்கள்.



**பிரிந்தே இருக்கும் உதடு:** சுறுசுறுப்பு குறைந்தவர்கள். கள்ளம், கபடம் இல்லாதவர்கள்.



**மெல்லிய நீண்ட உதடு:** எதற்கும் அயராதவர்கள். பிரச்சனைகளைச் சமாளிப்பதில் சூரர்கள்.

(நூறுவீதம் சரியென்று நம்பவேண்டாம்)

நன்றி–'சாவி'

# இந்த வாரம் உங்கள் பலன்

(25.09.94 முதல் 01.10.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | – சூரியன், புதன் |
| துலாம் | – வியாழன், சுக்கிரன், இராகு |
| கும்பம்– | – சனி |
| மேடம் | – கேது |
| கர்க்கடகம் | – செவ்வாய் |

சந்திரன்–இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- பயணமிகுதி, கௌரவக் குறைவு. | பி.ப 2 மணி |
| திங்கள்- உயர்ந்த நட்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| செவ்வாய்- தொழில் மேன்மை, பணவரவு. | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 8 மணி |
| வியாழன்- குடும்ப சுகம், தன்னம்பிக்கை. | பி.ப 1 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- தனலாபம், தொழில் நன்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 2

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 9 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் 11 மணி |
| வியாழன்- தனலாபம், உறவினர் உதவி. | காலை 8 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, மன்மகிழ்ச்சி. | காலை 10 மணி |
| சனி- காரியானுகூலம், முன்னேற்ற மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும். | காலை 10 மணி |
| திங்கள்- அகால போசனம், துயர் நீங்கும். | காலை 6 மணி |
| செவ்வாய்- பலவித நற்பேறு, செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| புதன்- உறவினர் பகை, மன அமைதி குன்றும். | பி.ப 1 மணி |
| வியாழன்- கடன் தொல்லை நீங்கும், வெளியிட பயணம். | காலை 10 மணி |
| வெள்ளி- தனலாபம், தொழில் மந்தம். | பகல் 12 மணி |
| சனி- கடன்தொல்லை, கௌரவக் குறைவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனப் பயம் நீங்கும். | காலை 9 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மறைமுக எதிர்ப்பு. | பகல் 12 மணி |
| புதன்- பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 11 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, பணவரவு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், வெளியிட வாசம். | பகல் 12 மணி |
| சனி- துயர் நீங்கும், பணத்தடை விலகும். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, மனப் பயம் நீங்கும். | காலை 7 மணி |
| செவ்வாய்- தொழில் சித்தி, ஆடம்பரச் செலவு. | காலை 7 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | பகல் 1 மணி |
| வியாழன்- துயர் அதிகம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- அந்நியரால் நன்மை, மன மகிழ்ச்சி.. | காலை 8 மணி |
| சனி- தொழில் சித்தி, பணவரவு. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 6

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- காரியசித்தி, பொருள் வரவு. | பி.ப 2 மணி |
| திங்கள- பெரியோர் நட்பு, பூமியால் லாபம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, பொருள் வரவு. | காலை 10 மணி |
| புதன்- மனப்பயம் நீங்கும், கௌரவம், மேன்மை. | காலை 7 மணி |
| வியாழன்- திடீர் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- எடுத்த கருமம் வெற்றி, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| சனி- பயனற்ற செயல், முன்னேற்றம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 9

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பணவரவு, காரியசித்தி. | காலை 8 மணி |
| திங்கள்- தொழில் மேன்மை, மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், உறவினர் பகை. | காலை 9 மணி |
| புதன்- துயர் நீங்கும், தெய்வானுகூலம். | பி.ப 1 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| வெள்ளி- பணக்கஷ்டம், திடீர் பிரயாணம். | பகல் 11 மணி |
| சனி- மனக்கலக்கம், உயர்ந்த நட்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மேன்மை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- தனலாபம், காரியானுகூலம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- மன அமைதி குன்றும், வீண் சந்தேகம். | காலை 8 மணி |
| புதன்- உறவினர் உதவி, முயற்சி தடை. | பகல் 12 மணி |
| வியாழன்- மனக்கலக்கம், அந்நியர் சகாயம். | காலை 9 மணி |
| வெள்ளி- தன்னம்பிக்கை, வெளியிடப் பயணம். | பி.ப 1 மணி |
| சனி- வீண் குறை கேட்டல், துயர் நீங்கும். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சித்தி, முயற்சி பலிதம். | பி.ப 2 மணி |
| திங்கள்- வீண் குறை தீரும், மன மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், பணவரவு. | காலை 6 மணி |
| புதன்- குடும்ப சுகம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், மனக்கலக்கம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், தேகசுக நன்மை. | பி.ப 2 மணி |
| சனி- வெளியிடப் பயணம், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நட்பு, முயற்சி பலிதம். | பகல் 11 மணி |
| புதன்- தொழில் மேன்மை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- கௌரவக் குறைவு, பொருட் சேதம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், உயர்ந்த நட்பு. | காலை 6 மணி |
| சனி- வெளியிட பயணம், ஆடம்பர வாழ்க்கை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- எடுத்த கருமம் வெற்றி, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், துயர் நீங்கும். | பி.ப 2 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| வியாழன்- அந்நியர் சகவாசம், ஆடம்பரச் செலவு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| சனி- முயற்சி மேன்மை, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் கேடு, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| திங்கள்- உறவினர் பகை, காரியக்கேடு. | காலை 6 மணி |
| செவ்வாய்- பயனற்ற செயல், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| புதன்- காரியானுகூலம், பொருள் வரவு. | காலை 7 மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், மனக்குறை நீங்கும். | பி.ப 2 மணி |
| வெள்ளி- மறைமுக எதிர்ப்பு, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| சனி- உயர்ந்த நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ விந்தைகள்

## என்றும் பதினாறு போல் இருக்கவிருப்பமா?

**வ**யது முதிர்ந்தாலும் மாறாத இளமையுடன் வாழ்வதற்கேற்ற தனிச் சிறப்பு வாய்ந்த விட்டமின்கள் உதவுகின்றன என்று புதிய ஆய்வுகள் கூறுகின்றன.

### விட்டமின் இருக்கப் பயமேன்?



விட்டமின் 'சி', 'இ' மற்றும் பெற்றா-கரோடின் ஆகிய- உயிரகத்துடன் இணைந்த கூறுகளுக்கு ஊறு விளைவிக்காதவை, குருதிக்குழாய்களில் கழிவுப் பொருட்கள் தேங்கி அடைப்பேற்படுத்தாமல் தடுத்து விடுகின்றன. இத்தகைய அழுக்குகளும் வேறு வேண்டப்படாத தேக்கமடையும் கழிவுப் பொருட்களும் உயிர்மங்களின் சேதத்தை அதிகரிக்க வைக்கின்றன. இதனால் நமது உடல் விரைவில் வலுவிழந்துபோக நேரிடுகிறது.

இருதய நோய், புற்றுநோய், மூட்டு வீக்கம்- வாதம் மற்றும் கண் விழி விறைப்பு நோய்களிலிருந்து மேற்கூறப் பட்ட விட்டமின்கள் பாதுகாப்பளிக்கின்றன. இதனை பிரிட்டனைச் சேர்ந்த ஆய்வாளரான- உயிர்வேதியியலாளர் டாக்டர் ஏர்னஸ்ட் பிராக்ஸ் கூறுகிறார். உயிரகத்துடனிணைந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்ட குழுவுக்கு தலைமை தாங்கியவர் டாக்டர் பிராக்ஸ்.

உணவு மற்றும் மருந்துகளுக்கான அதிகார சபையினால் பரிந்துரைக்கப் பட்ட அளவினை விட 30 சதவிகிதம் அதிகமான அளவில் இம்மூன்று சிறப்பு விட்டமின்களும் அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ளப்பட்டால், வயதினால் உடல் தளர்ச்சியடைவதைக் குறைப்பதுடன் மட்டுமல்லாமல் இளமைப் பொலிவினை மென்மேலும் அதிகரிக்கவே செய்கின்றன என்று டாக்டர் பிராக்ஸ் தெரிவிக்கிறார்.

இருதயத்துக்கு இரத்தத்தை எடுத்துச் செல்லும் குருதிக்குழாய்களில் அழுக்குப் படிவங்களும் ஏனைய கொழுப்புச் சத்துக்களும் கலந்திருக்கும். இவை குருதிக்குழாய்களின் ஓரங்களில் படிவதனால் இருதயக் கோளாறுகள் தோன்றுகின்றன. மேற்கூறப் பட்ட விட்டமின்கள் இத்தகைய அழுக்குகளையும் கொழுப்பையும் எரித்துவிடும் தன்மையுடையன என்பதனை தங்கள் ஆய்வின்போது கண்டுகொண்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

உடலின் ஊன்ம ஆக்கச் சிதைவு மாறுபாடுகளினால் வெளியிடப்படும் தேவையற்ற கழிவுகள் உயிர்மங்களின் சிதைவுக்கும் வழி கோலுகின்றன. இந்தக் கழிவுகளினால் ஏற்படும் தீமைகளை இந்த மூன்று விட்டமின்களும் தடுக்கின்றன. புகைத்தல் மற்றும் உணவுகளில் சேர்ந்திருக்கும் ஒவ்வாத இரசாயனப் பதார்த்தங்களினால் ஏற்படும் தீங்குகளையும் தடுக்க வல்லனவாக இவை விளங்குகின்றன. உயிர்மங்களில் ஒன்றுக்குச் சிதைவு ஏற்பட்டால் அதனைத் தொடர்ந்து பல்லாயிரம்- இலட்சம் உயிர்மங்கள் சிதைவுறுகின்றன.

புகைப்பவர்களுக்கும் நீரிழிவுப் பிணியாளர்களுக்கும் விட்டமின் 'சி' சத்து குறைவதனால்தான் இருதயக் கோளாறு தோன்றுகிறது. இருதய நோயுள்ளவர்களுக்கு விட்டமின் 'இ' குறைபாட்டின் காரணமாக மார்புவலி ஏற்படுகிறது.

விட்டமின் சி, விட்டமின் இ மற்றும் பெற்றா-கரோடின் ஆகிய சத்துக்கள் அடங்கிய உணவுகளை பெருமளவில் உண்பவர்கள் நோய்களை அணுகவிடாது தடுப்பதுடன் முதுமைத் தோற்றமடையாமலும் வாழ வாய்ப்புண்டு என்று கூறுகிறார் டாக்டர் ஏர்னஸ்ட் பிராக்ஸ்.

## உடல் மெலிய உகந்த வழி

### அளவு மீறி ஒருநாளும் உண்ணவேண்டாம்!

**அ**ளவுக்கு மீறி கண்ட கண்ட பதார்த்தங்களை உண்டு கொழுப்பவர்கள் அழகைக் கெடுப்பதுடன் ஆயுளையும் குறைத்துக்கொள்ளுகின்றனர். அளவுடன் உண்டு ஆரோக்கியமாக வாழ அருமையான சில ஆலோசனைகளை டாக்டர் ஃபிரெட்றிக் ஸ்ரெயர் கூறுகிறார். ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் சத்துணவியல் துறையினை உருவாக்கியதுடன் அதன் தலைவராகவும் விளங்குகிறார் இவர்.

அமெரிக்காவில் பிரசித்திபெற்ற தொலைக்காட்சி-நல்வாழ்வு நிகழ்ச்சிகளில் தோன்றும் அழகி லோனி அண்டர்சன், இம்முறையினைப் பின்பற்றி இளமையும் அழகும் பொலிவுற விளங்குவதாக டாக்டர் ஸ்ரெயர் கூறுகிறார். அவருடைய திட்டத்துக்கு "லோனி திட்டம்" என்றே பெயரிட்டுள்ளார்.

- நீங்கள் ஆணானால் உங்கள் அன்றாட உணவின் அளவு 1,800 கலோரியைத் தாண்டக்கூடாது. பெண்கள் தங்கள் உணவை 1,500 கலோரியுடன் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.
  இந்த அளவிலும் நீங்கள் உணவு உட்கொண்டு, உங்கள் எடையோ உடலின் பருமனோ குறையவில்லையானால் உட்கொள்ளும் உணவின் கலோரியினைக் குறைத்துக்கொள்ளலாம். ஆனால் தினசரி 1,250 கலோரிக்குக் குறையாதிருக்க வேண்டும்.
- தினமும் மூன்று வேளை உணவு முக்கியம். ஒரு வேளை உணவினை உட்கொள்ளாதிருக்க நேர்ந்தால் அடுத்து உண்ணும் உணவின் அளவு அதிகரிக்க ஏதுவாகும்.
- நாளொன்றுக்கு 8 அவுன்ஸ் எடை கொள்ளக்கூடிய 8 பாத்திர அளவுத் தண்ணீர் பருக வேண்டும். காப்பி, தேனீர் போன்ற பானங்களைப் பருகுவதானால் கொழுப்பற்ற பாலையும் (சீனி-சர்க்கரையற்ற) செயற்கை இனிப் பூட்டிகளையும் பாவிக்கலாம்.
- இறைச்சி (கொழுப்பற்றது) மீன் ஆகியவற்றை எண்ணையில் பொரிக்காமல் நீரில் வேகவைத்தோ நீராவியால் சமைத்தோ உண்ண வேண்டும். வெண்ணை, நெய், பாற்கட்டி போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.
  காய்கறி, கீரை வகைகள் போன்றவற்றையும் வேக வைத்தோ அல்லது பச்சையாகவோ உண்ணலாம். பழவகைகளையும் அளவோடு உண்ணலாம்.
- அளவோடு கூடிய தேகப் பயிற்சி அன்றாடம் இடம்பெறவேண்டும். தேகப் பயிற்சிகளில் ஈடுபட முடியாதவர்கள் காலையிலோ மாலையிலோ 20 நிமிடங்களாவது வேகமாக நடப்பது இன்றியமையாதது என்று வற்புறுத்திகிறார் டாக்டர் ஸ்ரெயர். சைக்கிள் ஓடுவது, நீச்சலடிப்பது போன்ற பயிற்சியும் நல்ல பலனளிக்கும் என்கிறார் அவர்.



எடை குறைந்த தோற்றத்தோடு லோனி

"உணவுக் கட்டுப்பாடு சில வேளை மன வெறுப்பினைத் தரவும்கூடும். ஆகவே மாதத்தில் ஒருதடவை மட்டும் ஆசைக்காக-வேண்டியவற்றை ஒரு பிடி பிடிக்கலாம். ஆனால் அந்த ஆசையினை ஒரு தடவையுடன் அடக்கிவிட வேண்டும். அடுத்து கட்டுப்பாட்டை இடைவிடாது கடைப்பிடிக்க வேண்டும்." இவ்வாறு கூறும் டாக்டர் ஸ்ரெயர், "உணவுக் கட்டுப்பாட்டினை ஆரம்பிப்பதற்கு முன்னர் உங்கள் மருத்துவருடன் கலந்தாலோசிப்பது முக்கியமாகும். உங்கள் உடலுக்கேற்ற உணவு மற்றும் உடற் பயிற்சி ஆகியவற்றை அவரே நிர்ணயிக்க வேண்டும்" என்று எச்சரிக்கிறார்.


"உணவுக் கட்டுப்பாட்டுக்காலங் களில் போதுமான புரதம், விட்டமின் சத்துக்கள் தவிர்க்கப்படக்கூடும் என்பதனால் விட்டமின் கூட்டு மற்றும் தாதுக்கள் ஆகியவற்றை மாத்திரைகளாகவும் உட்கொள்ள மருத்துவரின் ஆலோசனை அவசியம்" என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

## 'மூட் அவுட்' சங்கதி

### யாவரும் கவனிக்கவும்

**த**டுமல், குளிர் காய்ச்சல் (ஃபுளு) போன்று ஒருவருடைய மனநிலையில் ஏற்படும் மாற்றமும் பிறருக்கு இலகுவில் தொற்றிவிடக்கூடியது. மகிழ்ச்சிகரமானாலும் துன்ப துயரங்களுடன் தொடர்பு கொண்டதானாலும் ஒருவருக்கு ஏற்படும் மாற்றம் அவரைச் சுற்றியிருப்பவரையும் சுலபமாகப் பற்றிக்கொண்டுவிடும்.

வைரஸ் கிருமிகளைப்போன்று வேகமாகப் பற்றிக்கொள்ளும் தன்மை மனநிலை மாற்றத்துக்குமுண்டு என்று பிரபல உளவியலாளர் டாக்டர் எலைன் ஹெற்ஃபீல்ட் கூறுகிறார். ஒருவர் மிக்க மகிழ்ச்சியில் காணப்படுவாரானால் அவரைச் சார்ந்தவர்களும் சுற்றியுள்ளவர்களும் மகிழ்ச்சியில் திளைப்பார்கள். ஒருவருக்கு



அளவுக்கு மீறிய துயரம் ஏற்பட்டால், அவரைச் சார்ந்தவர்களுக்கு அறிந்தோ அறியாமலோ, தானாகவே அந்தத் துயரம் ஒட்டிக்கொள்ளும்.

சிரிப்பும் அழுகையும்கூட தொற்றிக் கொள்ளும் தன்மையுடையவையே என்று டாக்டர் ஹெற்ஃபீல்ட் சொல்லுகிறார். இவை காலதாமதமின்றி, உடனடியாகத் தொற்றிக்கொள்பவை. இன்பகரமான சூழலைவிட துன்பியல் தொடர்பான அம்சங்களே மிக வேகமாக தொற்றும் தன்மை கொண்டவை என்கிறார் அவர்.

மனோநிலை மாற்றங்களினால் ஏற்படும் தொற்றினை நீக்குவதற்கு எத்தகைய மருந்தும் கிடையாது. இதனால், பெரும் பாதிப்புகளும் ஏற்படுவதில்லை. எவ்வாறு தொற்றியதோ அதே வேகத்தில் தீர்ந்து போகும் தன்மையும் இத்தொற்றுக்கு இருப்பதனால், இதற்கான பிரத்தியேகத் தொற்று நீக்கியினை உருவாக்க எவரும் இதுவரை முன்வரவில்லை.

மனநிலை மாற்றங்கள் தொற்றிக் கொள்ளும் பழக்கம் மனிதன் குகைகளில் வாழ்ந்த மிகப் பண்டைக்காலத்திலிருந்தே ஏற்பட்டிருக்க வேண்டும் என்று டாக்டர் ஹெற்ஃபீல்ட் கருதுகிறார். அக்காலங்களில் தொடர்பாடல் முறை வெறுமனே முகபாவங்கள் மற்றும் கைச் சைகைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தமையினால், ஒருவருடைய மனோநிலை மற்றவருக்கு உடனடியாக உணர்த்தப் பட்டுவிடுகிறது. இதுவே மனோநிலை விரைவில் மற்றவரைப் பீடித்துவிடக் காரணமாயிருந்திருக்க வேண்டும் என்கிறார் அவர்.

## ரிலாக்ஸ்



ஒருவர்: கொஞ்ச நாளா எனக்குத் தூக்கமே வரமாட்டேங்குது.
டாக்டர்: ஒஃபீசிலையா? வீட்டிலையா...?

கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ் கிரைம் நியூஸ்

## மணமுடித்தது 10 பேரை பிணமாக்கியது 2



ஜில் கைதானபோது

**ஜி**ல் கொய்ற் என்பவள் ஒருவர் பின் ஒருவராக 10 ஆண்களை மணம் முடித்தாள். சில மாதங்களிலேயே ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி விவாகரத்துச் செய்துகொண்டு, சில வாரங்களிலேயே புதிய கணவனைத் தேர்ந்தெடுப்பதுதான் அவளுடைய பழக்கமாக இருந்து வந்தது.

ஜில்லுடைய ஒன்பதாவது கணவன் ஜெரி பொக்ஸ் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளான். இக்கொலையில் ஜில்லுக்கும் தொடர்பிருக்கக்கூடும் என்று சந்தேகம் வலுத்தமையினால், விசாரணை நடத்திய பொலிசார் ஜில்லுடன் அவளுடைய புதிய கணவனான மைக்கேல் பக்கசையும் கைது செய்துள்ளனர். மைக்கேலுக்கு 48 வயதாகிறது. தொலைபேசி திருத்துவது அவன் பணி.

ஜில்லின் ஒன்பதாவது கணவனைப் போலவே அவளுடைய மூன்றாவது கணவனான கிளார்க் கொய்ற் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவ்விரு கொலைகளும் ஒரே சாயலில் நடைபெற்றிருப்பதால் ஏற்கனவே நடைபெற்ற கொலைக்கும் ஜில்லே பொறுப்பாளி என்று பொலிசார் சந்தேகப்படுகின்றனர். பூட்டப்படாத வீட்டுக்குள் புகுந்த ஒரு கொலையாளியே 1972ல் கிளார்க் கொய்ற்றையும் தற்போது ஒன்பதாவது கணவனான ஜெரி பொக்சையும் கொன்றிருக்கின்றான். இக்கொலையினை ஒருவனே புரிந்தானா அல்லது இருவேறு நபர்கள் புரிந்துள்ளனரா என்பதனை அறிய விசாரணைகள் தொடர்கின்றன. எனினும் இவ்விரு கொலைகளையும் தூண்டியவள் ஜில் என்பது ஏறத்தாழ நிச்சயமாகிவிட்டதொன்று.

1972ல் கிளார்க் கொல்ற் கொலை செய்யப்பட்டதும் தனது மனநிலை பேதலித்துவிட்டது என்று மருத்துவர்களின் அத்தாட்சியுடன் ஜில் மனநோயாளர் விடுதியில் புகுந்து, விசாரணைகளிலிருந்து தப்பிக்கொண்டாள். ஆனால், "இப்பொழுது கிடைத்திருக்கும் ஆதாரங்களின் படி ஜில் கொல்ற் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது" என்கிறார் கொலாரடோ மாநிலம், ஸ்ரீம்போட் ஸ்பிரிங்சைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

> "காணுகின்ற காட்சிகளும் நிலைப்பதில்லை-சுகம்
> கைக்குவந்த பின்னாலும் இருப்பதில்லை!
> தோணுகின்ற ஆசைகளும் முடிவதில்லை-இதைத்
> துன்பம் என்று சொல்வதற்கு இடமுமில்லை!"
> -கவியரசு கண்ணதாசன்-

# அங்கம் 32

# கொலை விழும் நேரம்



எழுதுவது
## ரசிகன்

வினோ திரும்பிப்பார்த்து "நீங்களா?" என்று கேட்க, சலவை மடிப்புக் கலையாத காக்கி யூனிபோமுக்குள் உடம்பை திணித்திருந்த கம்பீரமான டி.ஐ.ஜி.டென்சில், வினோவை பார்த்துச் சிரித்தபடி, முன்னேறிவந்து,

"காயத்திரி உன்னைச் சுடமாட்டாள். காயத்திரி உன்னைக் காதலிப்பதால், காயத்திரி உன்னைக் காயப்படுத்தமாட்டாள். காயத்திரி உன்னை நேசிப்பது மகா உண்மை என்பதால் காயத்திரி உன்னை தன் துப்பாக்கி பேபிக்கு காணிக்கையாக்கமாட்டாள்."

என்று சொல்லி கண்ணடித்தார். இந்திரா பயந்துபோய் நின்றுகொண்டிருக்க அவள் மார்புகள் பயத்தில் ஏறி இறங்கிக் கொண்டிருக்க, காயத்திரி வழக்கம்போல யுனிபோமோடு படிந்துவிட்ட மேலதிகாரிகளைக் கண்டால் ஏற்படும் பவ்வியத்தோடு 'சல்யூட்' வழங்கிவிட்டு, உத்தரவுக்கு காத்து நிற்க,

"வினோ நீ அதிஷ்டசாலி. கடமை தவறாத காயத்திரியையே கைது செய்துவிட்டாய். ஐ மீன் அவள் மனதை."

வினோ அதிர்ச்சியிலிருந்து மீண்டு,

"தவறு டி.ஐ.ஜி. காதலும் இல்லை. ஒரு மண்ணும் இல்லை. நீங்கள் அனாவசியமாக என் தனிப்பட்ட உணர்வுகளை அவமதிக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்."

" ஓ.ஐ.ஸி. கோபமா வினோ?"

"யெஸ்! பட் அநியாயமான கோபமல்ல!"

"யா! உன் கோபம் எதுவும் அநியாயமல்ல. நியாயம்! ஆனால் சட்டம், நீதிமன்றம் என்றெல்லாம் இருக்கிறது பார், அவற்றின் பார்வையில் குற்றம் என்று அர்த்தமாகி விடுமோ தெரியாது."

வினோ அவரை வெறித்துப் பார்த்தான்.

"டியர் டி.ஐ.ஜி. நீங்கள் என் நேரத்தை மிக மோசமாக சேதப்படுத்துகிறீர்கள். நான் வெளியே போகவேண்டும்."

"அவசர வேலையோ?"

"தேவையில்லை. நீங்கள் அதை அறியும் தேவையில்லை. நான் அதை உங்களுக்குச் சொல்லும் அவசியமும் இல்லை."

வினோ சொல்ல, டி.ஐ.ஜி.டென்சில் கோபப்படப்போகிறார் என்று பயந்து காயத்திரி அவர் முகம் பார்த்தாள்.

டென்சில் சினம் தவிர்த்துவிட்டு உதட்டில் சிரிப்பேற்றிக்கொண்டு,

"வெளியாட்களை விசாரிப்பதுதான் நாகரிகமில்லை. என் விருந்தாளி, எனக்கு மிக-மிக வேண்டப்பட்ட நண்பன், உன்னைத்தான் சொல்கிறேன், அப்படிப்பட்ட உன்னை எங்கே போகிறாய் என்று அன்போடு கேட்க எனக்கு உரிமையுண்டு நண்பனே!"

கேலியை, கேலி தெரியாத குரலில் செய்ய, வினோவுக்கு எரிச்சலாக இருந்தது. அவரை நேருக்கு நேர் பார்ப்பதை தவிர்த்து காயத்திரியைப் பார்த்தான்.

அவள் இப்போதும் வலது கரத்தில் கைத்துப்பாக்கியோடு நின்று, நடப்பதையெல்லாம் மௌனமாக அவதானித்துக் கொண்டிருந்தாள். வினோ அவளையும், அவள் கரத்தில் இருந்த துப்பாக்கியையும் பார்த்துக்கொண்டு,

" டி.ஐ.ஜி.! பொலிசை நான் நம்புவதில்லை. அதனால் பொலிசில் உள்ள எவரையும் எனக்கு நண்பர்களாக நான் நினைப்பதில்லை."

"காயத்திரியையும் சேர்த்தா?"

" டி.ஐ.ஜி. நீங்கள்..?"

"ஓ.கே. ஓ.கே. உன் தனிப்பட்ட உணர்வுகளில் டச் பண்ணக்கூடாது. ரைட். இப்போது நான் என்ன சொல்லப் போகிறேன் என்றால், உன்னை கைது செய்யப் போவதாகச் சொல்லப் போகிறேன்."

வினோ சட்டென்று நிமிர்ந்து தன்னைவிட உயரமாக இருந்த டி.ஐ.ஜி.டென்சிலைப் பார்க்க,

"ஏன் என்று கேட்பாய் என்று எதிர் பார்த்தேன். கேட்கவில்லை. சோ...உனக்கு காரணம் தெரிந்திருக்கிறது!"

"விளையாடுகிறீர்களா டி.ஐ.ஜி?"

"சும்மா போ ராஜா. எனக்கு இப்போதெல்லாம் விளையாட நேரம் கிடைப்பதே இல்லையப்பா. எப்போது நீ கொலை ஒரு கலையாக கொல்லத் தொடங்கினாயோ அன்றிலிருந்து மாலையில் டென்னிஸ் விளையாடக்கூட நேரம் கிடைப்பதில்லை."

வினோ முறைக்க, அவர் புன்னகைத்து,

"என்ன அப்படிப் பார்க்கிறாய்? காலையில் பயிற்சி செய்யக்கூட முடிவதில்லை. பயிற்சியை பொட்டென்று நிறுத்தியதால் தொந்திகூட வந்துவிட்டது. என் மனைவிகூட தொந்தியில் செல்லமாகக் குத்தி, "இது தொந்தரவு குறையுங்கள்" என்று சொல்லி... சரி விடு என் சோகக்கதை எதற்கு? போகலாமா வினோ?"

இனிப் பேசுவதால் பயனில்லை என்று வினோவுக்கு புரிந்தது. தயாரானான். இந்திரா ஓவென்று வாய்விட்டு அழத் தொடங்க, காயத்திரியும் லேசாக கண் கலங்கினாள்.

**'தொடர் கொலைகளின் சூத்திரதாரி கைது!' 'பொலிஸ் வீசிய வலையில் வசமாக சிக்கினார்!!'**

தினசரிகள் தம் நெற்றியில் அச்சிட்டுக் கொண்டு வந்தன.

**"சித்ராவுக்கும் வினோவுக்கும் காதல் இருந்தது.**

**"வினோவை காதலித்த சித்ரா தொழிலதிபர் ஹரிகரனை காதலிக்க நினைத்து வினோவை தன் இதயத்தில் இருந்து இறக்கிவிட்டாள்.**

**"இறக்கப்பட்ட வினோ மகா கோபப்பட்டு சித்ராவை பழிவாங்க மாதம், திகதி, நாள் குறித்து, அதற்கு முன் ஹரிகரனை முடித்துவிட்டு, குறித்த நாளில் சித்ராவை குளோஸ் பண்ணிவிட்டான் என்று பொலிஸ் வட்டாரங்கள் கூறுகின்றன.**

**"வினோவால் செய்யப்பட்ட ஏனைய கொலைகள் அதற்கான காரணங்கள் பற்றி பொலிஸ் தொடர்ந்து விசாரித்து வருகிறது."**

செய்திகளைப் படித்துவிட்டு இந்திரா துடித்தாள்.

காயத்திரி இந்திராவுக்கு ஆறுதல் சொல்ல தேடி வந்தாள்.

"போ வெளியே. நீதானே என் அண்ணாவை பிரித்தாய்? கடமையாம். என்ன கடமை? நிரபராதியைப் பிடித்து உள்ளே போட்டுவிட்டு பத்திரிகைகளுக்கு கதை சொல்லுகிறீர்கள். இதுதானா கடமை!!"

அழுதுகொண்டே கத்தினாள். காயத்திரி பொறுமையாக, மௌனமாக இருந்து சகலதும் சகித்துக்கொண்டாள்.

"ஏன் இன்னமும் நிற்கிறாய்? 'மெடல்' தருவதற்கு தேடப்போகிறார்கள். போ. போய் மார்பைக் காட்டு. போ."

அவமானம் முகத்தில் பட்டது. நெஞ்சில் வலித்தது. காயத்திரி தாங்கினாள்.

இந்திரா திடீரென்று அழுவதை நிறுத்தினாள். கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

கண்கள் இரண்டும் அழுது சிவந்து வீங்கியிருந்தன.

வினோ அழைத்துச் செல்லப்பட்டதில் இருந்து அவள் சாப்பிடவேயில்லை.

சோர்வாகத் தெரிந்தாள். காயத்திரிக்கு இந்திராவின் கோபம் நியாயம் என்று பட்டதால் அவள் பேசியது எதனையும் விரோதமாக நினைத்து வெளியே போகவில்லை.

இந்திராவின் சோகத்தில் தானும் பகிர்ந்துகொள்ளவே காயத்திரி விரும்பினாள்.

இந்திரா கண்களைத் துடைத்துவிட்டு, விறு-விறுவென்று சமையலறையை நோக்கி போனாள்.

இந்திராவின் திடீர் மாற்றம் காயத்திரிக்கு விசித்திரமாகப்பட்டது. விபரீதமாகவும் தெரிந்தது.

இந்திராவின் பின்னால் காயத்திரியும் பதட்டமாய்- கிட்டத்தட்ட ஓடிப்போனாள்.

□□

"கொண்டு வந்தாயா?"

என்று அவள் கேட்க, அவன் "எதை?" என்று பதிலுக்குக் கேட்டான்.

அதற்குப் பதிலாக அவள் சிரித்த சிரிப்பு சாவித்துவாரத்தின் வழியாக கவனித்துக்கொண்டிருந்த நிர்மலாவையும் அச்சப்படவைத்தது.

அவனுக்கும் அவள் சிரித்தது வித்தியாசமாக தெரிந்திருக்கவேண்டும்.

மீண்டும் அவன் அவளிடம்,

"எதை?"

என்று கேட்ட குரலில் இருந்த தடுமாற்றம் அவன் குழப்பத்தைக் காட்டியது.

அவள் தன் எடுப்பான மார்புகள் உயர்ந்து தணிவதை அவன் குழப்பத்திலும் இரசிப்பதைக் கவனித்துக்கொண்டு, நாவால் தன் மேலுதட்டை ஈரம் செய்துகொண்டு,

"சித்ராவுக்கு ஹரிகரன் எழுதிய கடிதங்களை!"

என்றாள். குரலில் வெகு சாதாரணத்தனம் தெரிந்தது.

அவன் உள்ளங்காலில் ஆணி ஏறியது போல் துணுக்குற்று, ஓரடி பின்வாங்கி,

"கடி..கடித..ங்களா?"

என்றான்.

"பூபால் அன்ட் பிரதர்ஸ் உதவி மனேஜர் மிஸ்டர் சாரங்கன் அவர்களே! நடித்தது போதும். உண்மை பேசுவது உமது உயிருக்கு உறுதி. பொய் பேசினால் உமது பெண்டாட்டிக்கு பூவும் இருக்காது. பொட்டும் இருக்காது. சொல்லடா ராஸ்கல். எங்கே கடிதங்கள்?"

என்றாள். குரலும் உயர்ந்தது- அவளும் எழுந்தாள்.

அவள் வலது கரத்தில் 2.2 கைத் துப்பாக்கியும் இருந்தது.

"நோ..நோ.. சுடாதே."

"சுடவில்லை. சொல்லு."

"என்னிடமில்லை!"

"உன்னிடம் இருக்கிறது. தெரியும். எங்கே என்பது மட்டும் தெரிந்தால் போதும். சொல்லு."

"நீ ...உன்னை..உங்களை"

"என்ன எங்கேயோ பார்த்தமாதிரி இருக்கிறதா? யோசி இப்போதல்ல- கடிதங்களை தந்துவிட்டு,"

சாரங்கன் யோசித்து, அவள் துணிந்தவள் என்று ஊகித்து,

"சொல்கிறேன். அதற்கு முன்.."

"முன்?"

"நீ..நீங்கள் யார் என்று தெரிந்து கொள்வது..."

"ரொம்ப அவசியமாக்கும்....? அதைவிட அவசியம். இதற்குள் ஆறு குண்டுகள் இருப்பதை நீ அறிந்துகொள்வது."

என்று-கைத்துப்பாக்கியை உயர்த்திக் காட்டிச் சிரித்தாள்.

"தினம் ஒரு பெண் இல்லாவிட்டால் நீயும் தூங்கமாட்டாயாமே? இப்போது செத்துப்போனால் நிம்மதியாகத் தூங்கலாம். அழகான பெண்களை சேகரிக்கத் தேவையில்லை என்று நினைக்கிறாயாக்கும்? ஓ.கே. உன் சித்தம்- இந்தத் துப்பாக்கியின் பாக்கியம்."

நெற்றிக்கு நேரே கைத்துப்பாக்கி உயர்த்தி விசையில் விரல் வைத்தாள்.

அதே நேரம் எதிரே இருந்த ஜன்னல் வெளியே இருந்து இழுத்துத் திறக்கப்பட்டது.

"சுடாதே பிரியா."

என்று வந்த குரலோடு ஜன்னல்வழியே முகம் காட்டியவர் குலாம்ஷா.

"கதவைத்திற பிரியா!"

என்றார் குலாம்ஷா, அவளை ஜன்னல் கம்பி வழியாக பார்த்துக்கொண்டு.

பிரியா-பிரியா பகபதி- குலாம்ஷாவை கண்டு கவனம் தவறிய நொடிகள் சாரங்கனுக்குப் போதுமானதாக இருந்தது.

ஒரே பாய்ச்சலாக அவளை நோக்கிப் பாய்ந்தான்.

அவளின் மணிக்கட்டில் தனது வலது கரத்தால் வெட்டினான்.

கைத்துப்பாக்கி கீழே விழுந்தது. வேகமாய் குனிந்து அதை எடுத்துக் கொண்டான்.

இப்போது பிரியாவிற்கு நேராக, முகத்தின் எதிரே கைத்துப்பாக்கியை பிடித்துக்கொண்டு, அவள் இடதுகரத்தை பிடித்து தன்னை நோக்கி இழுத்தான்.

அப்படியே திரும்பி,

"டியர் கிரைம்புலி குலாம்ஷா! பிரியா உயிரோடு வேண்டும் என்றால் என் உயிரோடு விளையாடாதீர்கள். நான் வெளியேற இடையூறு செய்யாதீர்கள். நான் முக்கியமா? பிரியா, முக்கியமா? நான்தான் முக்கியம் என்றால் நீங்கள் குறுக்கிடலாம். ஆனால் பிரியாவும் செத்துப் போவாள். என் உயிரும் மிஞ்சாது. உங்களுக்கு தேவையான விபரங்களும் கிடைக்காது. சோ. ஆடு புலி ஆட்டம் வேண்டாம்."

என்றான். பிரியாவை முன்நோக்கி நகர்த்திய கதவு நோக்கி முன்னேறினான்.

குலாம்ஷா ஜன்னல் வழியாக அவனது நகர்வைக் கவனித்தபடியே எப்படி மடக்கலாம் இவனை என்று மூளையைக் குடைந்தார்.

அவன்-சாரங்கன்-பிரியாவின் பின்னம் தலை மையத்தில் துப்பாக்கியின் உதட்டை உரசவைத்தபடி. குலாம்ஷாவை பார்வைக்குள் வைத்துக்கொண்டு,

"ஜன்னலை விட்டு நகர வேண்டாம் குலாம்ஷா."

என்று சொல்லிக்கொண்டு, கதவருகே பிரியாவை கொண்டுபோய் நிறுத்தி,

"கதவைத்திற..இப்போது கதவைத் திற. பின்னர்.."

என்று விகாரமாய் சிரித்தான்.

பிரியா தயங்கி, பின்னர் கதவின் தாழ்பாள் விலக்க கை நீட்ட,

'...டுமீல், டுமீல்..'

சாரங்கனிடமிருந்து,

"அ...அம்...மா."

தீனமாய் குரல்வர, பிரியா பதறித் திரும்ப,

முதுகின் மையத்தில் துப்பாக்கிக் குண்டுகள் கச்சிதமாய் போட்டிருந்த துளைகள் வழியே பீறிட்டு பாய்ந்த குருதியோடு,

சாரங்கன் முகத்தால் தரையை முத்தமிட்டு விழுந்தான்.

துப்பாக்கியோடு நின்று- பிரியாவைப் பார்த்து புன்னகைத்துவிட்டு,

குலாம்ஷாவைப் பார்த்து குறும்பாக கண்சிமிட்டினார்-

டி.ஐ.ஜி.டென்சில்!

"பிரியா உனக்கு ஒரு தாங்யூ. குற்றவாளியை நெருங்கிவிட்டது மகா சந்தோசம்."

அவர் பேசுவது புரியாமல்,

"யார் குற்றவாளி?"

என்றாள் பிரியா.

"ஏன் நீயாக இருக்கக்கூடாது? பாவம் வினோ உள்ளே இருக்கிறான்."

என்று டி.ஐ.ஜி. சொல்லிச் சிரிக்க, பிரியாவுக்கு மூச்சே நின்றுவிடும்போல் இருந்தது.

(தொடர்ந்து வரும்)

---

## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: ஆர்.இராஜேந்திரன்
வயது: 24
முகவரி: இல.14, கொழும்பு வீதி, சிலாபம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், கதை எழுதுதல்.



பெயர்: எஸ்.பாருகல் பராஜ்
வயது: 25
முகவரி: கடையாமோட்டை, மதுரங்குளி.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, பேனா நண்பர் தொடர்பு.



பெயர்: அ.நந்தினி
வயது: 17
முகவரி: பாரதி வீதி, ஆ.மு.குடியிருப்பு, தன்னாமுனை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: ஐ.மும்தாஜ்
வயது: 21
முகவரி: 63/13, ரீ.சி.வீதி, காத்தான்குடி-03.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, பேனா நட்பு.



பெயர்: எஸ்.நாதன்
வயது: 25
முகவரி: ST. GALLEN STR-11, 8716, SCHMERIKON, SWITZERLAND.
பொ.போ: பத்திரிகை வாசித்தல், முத்திரை சேகரித்தல், கரப்பந்து விளையாடுதல்.



பெயர்: எம்.முனவ்வர்
முகவரி: T.C.C. 91/91, P.O.BOX-2630, DOHA-QATAR.
பொ.போக்கு: பத்திரிகை, இயற்கைக் காட்சிகளை இரசித்தல்.

பெயர்: ஜெ.ரொபின்சன்
வயது: 20
முகவரி: பேர்ன்லன்ஸ் எஸ்டேட், புண்டுலோயா.
பொ.போ: வழமையானவை.

பெயர்: எம்.அமீன்
வயது: 22
முகவரி: 50, அகார டிவிஷன், ஹொரம்பாவ.
பொ.போக்கு: கிரிக்கெட், நண்பர் தொடர்பு, பத்திரிகை.

பெயர்: ஜே.பெர்னாண்டோ
முகவரி: 4/25, P.O.BOX- 10023, HAFAR-AL-BATIN-31991, K.S.A.
பொ.போ: ரீ.வி.பார்த்தல், பேனா நட்பு.

பெயர்: எம். ஹம்ஸா
வயது: 27
முகவரி: P.O.BOX-792, CODE NO-22008, SALMIYAH, KUWAIT.
பொ.போ: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: எஸ்.செல்வநாதன்
வயது: 19
முகவரி: 84/4, இரண்டாம் குறுக்குத்தெரு, கொழும்பு-11.
பொ.போ: வானொலி, பத்திரிகை.

பெயர்: இ.முகமது ஜஸீர்
வயது: 16
முகவரி: 95/68, அப்துல் ஹமீத் வீதி, கொழும்பு-12.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சினிமா, நண்பர் தொடர்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# உண்மையே உன் விலை என்ன?

சிலாபம்-பொ.புஷ்பராஜு



**வெ**ளியே மழை கொட்டுகிறது. ரவி தலையணையை அணைத்தவாறே கண்களை மூடிக்கொண்டான். உடலில்தான் எவ்வளவு உஷ்ணம். படுக்கையை விட்டு தரையில் படுத்துக்கொண்டான் ரவி.

ரவியின் மாமா மகள் கீதா சிறு வயதிலிருந்தே அவன்மேல் அளவில்லா பாசம் வைத்திருந்தாள். "அத்தான், அத்தான்" என ரவியைச் சுற்றி சுற்றி வருவதைப் பார்க்கும் அவனது நண்பர்கள், கீதாவைப் பல் வேறு அடை மொழியில் கேலி செய்வார்கள். என்னதான் கேலி செய்தாலும் கீதா கோபப்படமாட்டாள். அவள் விசித்திர மானவள்.

கீதா, டிக்கோயாவில் இருக்கும் ரவியின் வீட்டிற்க்கு பருவ மங்கையாய் ஆனபின் இன்றுதான் முதன் முறையாக வந்திருக் கிறாள். கொழும்பில் பிரபல பெண்கள் கல்லூரி ஒன்றில் கீதா கல்வி கற்கின்றாள். அவளின் அப்பா கொழும்பில் ஒரு பெரும் வர்த்தகர். கொழும்பு நாகரீகத்திற்கு மத்தியில் வாழும் அவர்களுக்கு டிக்கோயாவில் ரவியின் வீட்டைச் சுற்றியிருக்கும் தேயிலைச் செடிகளைக் கண்டு வியப்பில் நிற்பதைக் காணும்போது ஒரு சிறு சந்தேகம் வந்தது.

'என்னடா கீதாவின் அப்பாவும் ஒரு காலத்தில் வனராஜா தோட்டத்தில் வாழ்ந்த வர்தானே? பெரிய கங்காணியின் தொழிற் சங்க நடவடிக்கையால் பாதிப்படைந்து பொடி மெனிக்கா ரயிலில் டிக்கெட் இல்லாது கொழும்புக்கு ஓடிவர்தானே? எப்படியோ அவர் இவரின் கால், கைகளைப் பிடித்து, உழைத்து, உழைப்பில் உயர்ந்து பெரும் பணக்கார முதலாளியாகி விட்டார். கார் பங்களா என வசதி கிடைத்தபின் இந்தத் தோட்டத்து வாழ்க்கையையே மறந்து விட்டார். அவர்தான் அப்படியிருக்கார்ன்னு பார்த்தாலும் இந்தப் புள்ளையுமா இப்படி...?' ரவியின் மனதுக்குள் அவனே பேசிக் கொண்டான்.

ரவியின் தங்கை சுவர்ணாவின் திருமணத் திற்கு இன்னும் இரண்டு நாட்களே உள்ளன. திருமணத்திற்கு முதல்நாள் வீட்டில் நடைபெறவேண்டிய சில சமய சடங்குகள், விருந்துகள், உற்றார், உறவினர்களின் கலகலப்பான வாழ்த்துக்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக முடிகிறது. இவை எல்லாவற்றையும்விட ரவியின் உணர்வில் உறுத்துவது கீதாவின் சந்திர வதனம்தான்.

எப்போது மாடியிலிருந்து கீதா இறங்கி வருவாள் என எதிர்பார்த்துக்கொண்டிருந்தான் ரவி. மாயப் பறவையொன்று வானில் பறந்து வந்து 'வா'வென அழைப்பது போன்று மெல்ல, மெல்ல மாடிப்படிகளில் இருந்து கீழே இறங்கி வந்தாள் கீதா. ரவியின் விழிகளும், மனதும் கீதாவைப் பற்றிப்பிடிக்கின்றன. ரவி மாடிக்கு செல்வதற்காக வேகமாக மாடிப்படிகளில் ஏறுகின்றான். கீதா ரவியின் எதிரில் வந்து விட்டாள். அவள் கையில் இருந்த மாலை கை நழுவுகிறது.

ரவி கீழே விழுந்த மல்லிகைப்பூ மாலையை எடுத்துக்கொடுக்க குனிகிறான். கீதாவும் குனிகிறாள். ரவி அவளது மெல்லிய கரங்களைத் தீண்டுகிறான்.

நினைக்கவே மெய் சிலிர்க்கிறது. ஒரு நிமிடம் ரவியின் கண்களும், கீதாவின் கண்களும் ஒன்றை ஒன்று சந்திக்கின்றன. கீதாவின் நெருப்புப் பொறி சிந்தும் கோபப் பார்வை ரவியின் மேல் படுகிறது. அவள் முகத்தை மூடியபடியே மீண்டும் மேல் மாடிக்கு ஓடுகிறாள்.

ரவியும் அவளைப்பின் தொடர்ந்து ஓடுகிறான். கீதா கதவை மூடிவிடுகிறாள். உறவினர்கள் அனைவரும் புகழ்கின்றனர், கீதாவை குணக்குன்று என்று, ஆனால் ரவியைக் கண்டால் மட்டும் அவளுக்கு வெறுப்பு என்ன? தீயாக மாறுகிறாளே? ரவிக்கு புரியவில்லை. அவனது முடியை அவனே தடவிக்கொண்டு யோசிக்கிறான்.

சிறிது நேரத்தில் கதவு திறக்கப்படுகிறது.

ரவி அவள் எதிரே நிற்பதைக் கண்டதும் மீண்டும் கோபம் கொண்டவள்போல் முரட்டுப் பார்வை பார்க்கிறாள்.

ரவி புன்னகை புரிகிறான்.

"செய்வதையும் செய்துவிட்டு இங்கு எதற்கு வந்தீங்க? நாலுபேரு பார்த்தா என்ன சொல்லுவாங்க?" என கோபத்துடன் சாடுகிறாள்.

'உஸ்' என்பதற்காக வாயில் விரலை வைத்த ரவி, அறையின் மூலையில் இருந்த அவனது சூட்கேஸைக் காட்டினான். அவளும் ஒன்றும் பேசாமல் எடுத்தாள்.

கீதா சூட்கேசை அறையின் வெளியே வைத்துவிட்டு கதவை மூடிவிட்டாள். ரவி அவன் அறையில் வந்து படுத்துக்கொண்டான். அவன் அறையின் அருகே கீதாவும் ரவியின் தங்கை சுவர்ணாவும் பேசிக்கொள்வது ரவியின் காதில் விழுகிறது.

"இங்கேயே நில்லுடி, பாத்ரூமுக்கு ஓடிவிட்டு வந்து விடுகிறேன்" என்கிறாள் சுவர்ணா.

"சுணங்காது வாடி தூக்கம் வருகுது." அவளின் பேச்சு குரலும், கல,கல என்று கண்ணாடி வளையள்கள் குலுங்கும் சத்தமும் அவனது காதில் விழுகிறது.

□□

**கீ**தா ரவியின் அருகில் வந்துவிட்டாள். ரவி உறங்குவதைப்போல பாசாங்கு செய்தான். அவனையே அறியாத புதுமையான தென்றல் காற்று அவன்மேல் படுகிறது போன்ற ஒருவித உணர்ச்சியால் ரவி திடீரென கீதாவின் முடியைப் பற்றி இழுத்தான்.

"சும்மாயிருங்க சுவர்ணா வந்து விடுவாள்."

அதற்குள் சுவர்ணாவின் காலடி ஓசையுடன், அவளின் கால்களை அலங்கரித்துக்கொண்டிருந்த தஞ்சாவூர் வெள்ளி கொலுசு ஜோடி றிங் றிங் என்ற ஓசையுடன் வருவதைக் கேட்ட கீதா ஓடிவிட்டாள்.

இன்று திருமண நாள். சுவர்ணாவின் வாழ்வில் மறக்க முடியாத ஒருநாள். ரவிக்கும்தான். ரவி காலை ஆறு மணிக்கே கல்யாண மண்டபத்திற்குச் சென்று விட்டான். மணமகனுடன் ஒரு சில வார்த்தைகளை அவனது மொழியில் பேசிவிட்டு மண மேடைக்குப் பின்னால் உள்ள அறையினுள் நுழைகிறான்.

அந்தச் சின்னஞ்சிறு அறையினுள் கீதா உடை உடுத்திக்கொண்டிருந்தாள். ரவியின் திடீர் பிரவேசம் கீதாவின் நிலைமையை மாறவைத்துவிட்டது. தனி அறையில் தனி ஜோடி ஒன்று. மயிலைப் பிடிச்சு காலை உடைச்சு ஆடச் சொன்னால் என்ன செய்யும் மயில்? அதே நிலையில்தான் இந்த இருவரும்.

செயலும் நினைவும் மறந்து ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டேயிருந்தனர்... காளிதாசன் பாடிய சகுந்தலை காவியத்தில் சகுந்தலையும் துஷ்யந்தனும் முதன் முதலாக ஒருவரை ஒருவர் சந்தித்தபோது அப்படித் தான் பிரமித்துப் போயிருப்பார்கள் என ரவி நினைத்துக்கொண்டான். அந்த ஒரு நிமிட நேரத்திற்குள் ரவி, காவியத்தில் வரும் துஷ்யந்தனாகவும், கீதா சகுந்தலை யாகவும் மாறிவிட்டனர்.

"என்ன யோசிக்கிறீர்கள்?"

"நான் எப்படி சொல்வேன் கீதா? வாய் கூசுகிறதே-"

"உங்களுக்கு சொல்ல வாய் கூசினால் ஒரு தாளில் எழுதிக் கொடுங்களேன்?"

ரவியும் ஒரு தாளில் எழுதி கொடுத்தான்.

கீதா வாசித்துவிட்டு கண்களை மூடிக் கொண்டாள்.

அப்போது ரவியின் மனம் பட்ட பாடு. ஒவ்வொரு நிமிடமும் அவன் உள்ளம் கீதாவுக்காக தவித்த தவிப்பு! அவளுக்கும் அதேபோன்ற ஒருவித உணர்வு ஏற்பட்டிருக்கும் என நினைத்துக்கொண்டான்.

"உண்மையாகவா ரவி" என்றாள்.

"கீதா என்னை உன் அன்புக்கு அடிமை யாக்கிவிட்டாய். இனி என்னால் உன் அன்புச் சிறைபிடியிலிருந்து வெளியேற முடியாது." ரவியின் உள்ளம் குமுறுகிறது.

"ரவி நாமிருவரும் ஒருவரை ஒருவர் நேசிக்கிறோம். காதலிக்கிறோம். உலகம் நினைப்பது நினைக்கட்டும். நாம் சந்தோசமாக இருக்க முடியும்வரை சந்தோசமாகயிருப்போம்" என்றாள் கீதா.

கீதாவின் முடிவால் ரவி மின்சாரம் தாக்கப்பட்டவன்போல் அதிர்ச்சியடைந்தான்.

"நாமிருவரும் துரோகிகள் ரவி. உங்களுக்கும் எனக்குமிடையே இன்னொரு பெண் இருக்கிறாள் என்பதை மறந்துவிட்டோமே" என்றாள் கீதா.

## சிறுகதை

ஆலமுண்ட நீலகண்டனைப் போல தடுமாறினான் ரவி. அவனால் கீதாவுடன் தொடர்ந்துபேச நா செயல்பட மறுக்கிறது. கீதா...கீதா...கீதா... என அடிமனதில் நாதம் ஒலிக்கிறது.

ரவி தான் ஊமையாகிவிட்டானே? என்ன செய்ய, எதைச் சொல்ல, 'இறைவா ஏன் என்னை உமையாக்கிவிட்டாய்? என்ன பாவம்தான் செய்தேன்? பாவ மன்னிப்பு தந்து என்னையும் பேச வைத்தால் என்ன?' ரவி மனதுக்குள் ஒரு கேள்வியை எழுப்பிக்கொண்டான்.

"ரவி மனம் தளராதீர்கள். இன்று இரு தாரத்தை மணந்தவர்கள் எமது சமுதாயத்தில் வாழவில்லையா? ரவி வாழ்ந்தால் நாமிருவரும் ஒன்றாகவே வாழ்வோம். செத்தால் ஒன்றாகவே சாவோம். நீங்கள் இல்லாத உலகம், எனக்கு உலகமாக தோன்றாது. மணந்தால் உங்களைத்தான் மணப்பேன். இல்லையேல் வாழ்நாள் முழுவதும் வெள்ளை சாரியை உடுத்திக்கொண்டு கன்னியாகவே வாழ்வேன்." என்றாள் கீதா.

கெட்டிமேளம் கொட்டுகிறது மண மேடையில்.

அறையினுள் ஏற்கனவே திருமணமாகி ஒரு குழந்தைக்கு அப்பாவான ரவி தன் முறைப் பெண்ணான கீதாவுக்கு இரகசியமாக மாலையிட குனிகிறான்.

கீதாவும் குனிந்தாள். இருவரின் தலையும் ஒன்றோடு ஒன்று பலமாக மோதிக் கொண்டது.

□□

**ர**வி தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டான். அவனது பக்கத்தில் அவன் மகன் உறங்குகிறான். அவனது மனைவி காப்பி கோப்பையுடன் படுக்கையை நோக்கி வருகிறாள்.ரவியின்உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. மனைவியை அப்படியே கட்டிப் பிடித்து முத்தம் மாரிப் பொழிகிறான்.

இப்போது மணி காலை 7 ஆகிவிட்டது. இலங்கை வானொலியில் "போவோமா ஊர்கோலம், பூலோகம் எங்கெங்கும்" என்ற பாடல் ஊர் முழுவதும் ஒலித்துக்கொண்டிருந்தது.

ஐயோ பாவம் ரவி. இதுவரை அவன் கண்டது உணர்ச்சிகளையா? அல்லது உணர்வுகளையா? யாருக்குத் தெரியும்?

ஆம்! ரவி கண்டது கனவுதான். அவன் எவ்வாறு தன் மனைவியிடம் முறைப் பெண்ணுக்கும், தனக்கும் கனவில் திருமணம் நடைபெறவிருந்த ஊமைக் கதையைக் கூறுவது. அவளிடம் இறைவன்தான் கூறவேண்டும். ஏனென்றால் அவன் தானே அவனைப் படைத்தவன். இறைவனுக்குத் தெரியாது உலகில் ஒரு அணுவும் அசையாது. இப்போ ரவி யாரிடம் தனது கதையைக் கூறுவது? இறைவன் வாய்பேசாத ஒரு பிறவி ஊமையாக ரவியைப் படைத்து விட்டானே! அவனுக்குத்தான் ரவியின் கதையை கூறவேண்டும்.

அது மட்டுமல்ல, ரவிக்கும் கீதாவுக்கும் இடையில் உள்ள உண்மையின் விலையை இறைவன்தான் நிர்ணயிக்க வேண்டும்.


---

## சிறுகதை

# ஏமாற்றாதே

ஷர்மிளா இஸ்மாயில்
கண்டி

**நி**றைந்து வழிந்த அந்த தனியார் வண்டியில் தங்களைத் திணித்துக் கொண்டனர் நிரோஷாவும் சஹானாவும். கையில் காசை வைத்துக் கொண்டு ஏறாத செயலுக்கு வருந்தியவாறே நிற்கவும் இடமின்றி நிலைதடுமாறி நின்றபோது, "எக்ஸ்கியூஸ் மி மிஸ். அத இப்படிக் கொடுங்க" என்றவாறு ஒரு குரல்.



ஆச்சரியம் கலந்த கண்களுடன் நோக்கிய சஹானாவுக்கும் நிரோஷாவுக்கும் தென்பட்டது ஜன்னலோர சீட்டொன்றில் நெருங்கியடித்தவாறு ஒரு இளைஞன். மடி நிறைய பொருட்கள். அந்த நிலையிலும் இவர்களுக்கு உதவ முன்வந்த வீரநெஞ்சம்! இல்லை தயாள- இளகிய- கருணைநிரம்பிய...... இளைய இதயம்! கண்களால் நன்றி கூறியவர்களாக கையிலுள்ள புத்தகங்கள், கைப்பைகள் முதலியவற்றை அவனிடம் அடைக்கலம் தந்தனர். வாங்கி அடுக்கிக் கொண்டான்.

"ஏய் சஹானா! ஆளப் பார்த்தா அப்பாவி டைப். நம்ம கைவரிசையைக் காட்டலாமா?" நிரோஷா இடையில் நின்ற தலைகளைக் கடந்துபேசினாள். "வேண்டாம்டி, வேண்டாம்". சஹானாவின் பதிலை அலட்சியம் செய்தவள் திட்டத்தை வகுத்து கண்ணடித்தாள். நடுவில் நின்ற தாத்தாவின் முகத்தில் அசடு வழிந்தது. நிரோஷா தலையிலடித்துக் கொண்டாள். அவன் அவர்களைக் கவனித்தான். வார்த்தைகளையும் கேட்டான். வண்டி நகரை அடைந்தது. மெதுவாக இறங்கி கைகால்களை விடுவித்துக்கொண்டு சஹானாவும் நிரோஷாவும் இளைஞனை நோக்க, பாவம் அவர்களது பொருட்களை வைத்துக் கொண்டு தட்டுத்தடுமாறி இறங்கிக் கொண்டிருந்தான் அவன்.

நிரோஷா ஓடிப் போய் அவனருகில் நின்றாள். "தேங் யூ வெரிமச். ரொம்பவும் பெரிய உதவி" புன்னகை மலர கூறினாள். "ஓ... பரவாயில்லை" அவன் பொருட்களை அவளிடம் ஒப்படைக்க "இந்தாடி..... சஹறா.... உண்ட புக்ஸ்...." என்று கொடுத்தவள். "ஐயோ..." என்று பதற்றமாய்க் கேட்டாள். "என்ட குடையைக் காணேல்ல... அதையும் உங்ககிட்டதானே கொடுத்தேன்" சொன்னவளைப் பார்த்த அவன் தடுமாறினான். "இ...இல்லையே மிஸ்... குடைய தந்ததா ஞாபகம் இல்லை...." திடுக்கிட்டவனாய் தனது பேக் முதலானவற்றை திறந்து புரட்டி தேடி.... மீண்டும் வண்டியை நோக்கி ஓடி, அங்கே கிளீனர் பையனிடம் விசாரித்து தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்தான்.

"ஐயோ... என் அழகான புதிய குடை... நீல கலர்ல சின்னச்சின்ன பூப்போட்ட குடை. வாங்கி ஒரு கிழமை தாண்டி...." நிரோஷா மூக்கைத் துடைத்துக் கொண்டாள். சஹானாவுக்கு தலையைச் சுற்றியது. 'பாவி. உதவி செய்த அப்பாவி இளைஞனை என்னமாய் ஏமாற்றுகிறாள்' மனதால் திட்டிய படி மௌனமாய் நின்றாள். "ஜஸ்ட் எ மினிட் மிஸ்" என்ற அவன் மீண்டும் திரும்பி வந்தபோது கையில் நீலநிற அழகிய புதுக்குடை! ஒரு கணம் அதிர்ந்த நிரோஷா சமாளித்தாள். "உங்களுக்கு ஏனிந்த உபத்திரவம்? ஐயையோ... புதுக்குடைவேறு வாங்கிட்டீங்களே..." குழைந்தாள். "பரவாயில்லை மிஸ். காணாமல் போட்டது என் தவறு, எடுங்க" நீட்டினான். "தேங்ஸ்" புன்னகையில் ஒரு குறும்பு. சஹானா மலைத்து நின்றபடி நின்றாள்.

"பாவம்டி அந்த மனுஷன். நல்லா ஏமாத்திட்டியே! ஆண்டவனுக்கே இது பொறுக்காது" சஹானா வாயைத் திறக்க, நிரோஷா சிரித்தபடி போனாள். உண்மையில் நிரோஷா அன்று குடையே கொண்டு வந்திருக்கவில்லை. நாளாந்தம் தொடர்ந்த அவர்களது பயணத்தில் அந்த இளைஞனின் அறிமுகம் கிட்டியது. அழகான புன்னகை அதற்குள் ஒரு சோகம். தனது வாழ்க்கை கதையை லேசான கண்ணின் ஓரக்கசிவுடன் சொல்லி முடித்தான். சஹானாவுக்கும் நிரோஷாவுக்கும் சோகம் பொங்கியது. பெற்றார் இல்லை. உறவினர் இல்லை. நிரந்தரத் தொழிலில்லை. நண்பன் ஒருவனின் தயவில் வாழ்ந்து கொண்டு அவனது கடையில் சேல்ஸ்மேனாக இருந்து கொண்டு எதிர்பார்ப்பில்லாத எதிர்கால நோக்கோடு ஒரு விரக்தி சாயலான வாழ்க்கை அவனது. அப்படித்தான் சொன்னான். சொல்லில் சோகம் தவிர வேறில்லை.

நிரோஷா தடுமாறிப் போனாள். 'பாவம்! இவனையா ஏமாற்றினோம். ஆண்டவனே! என்னை மன்னித்துவிடு' மானசீகமாக வேண்டினாள். சஹானாவோ, "ஏன்டி, நிரோ, சொந்தக் கதை சோகக்கதைன்னு சொன்ன ஆளு, பாரு எப்படி டிப்டொப்பா ஏதோ பெரிய ஓபீஸ்ல வேல பார்க்கற தோரணை? என்னால நம்ப முடியல" "ஆடையைப் பார்த்து ஆளை மதிப்பிடாதேன்னு சொல்வாங்க. அது சரியாப் போச்சுடி." நிரோஷா பரிதாபப்பட்டுக் கொண்டாள்.

பரிதாபம் அன்பாகப் பரிமாணப்பட்டது. அன்பு ஒருபடி மேலே சென்று நேசமாக மாறியது. அவன் அதை உணர்ந்து விலகினான். "வேண்டாம் நிரோஷா. நீங்க வானத்து நிலவு. நான்... நான் சாதாரண மானவன். பூமியில நின்று..... நிற்கக்கூட ஒழுங்கான ஆதாரம் இல்லாத அனாதை"- "இந்த மாதிரி சினிமா டயலாக்ஸ் எல்லாம் பேசாதீங்க. நிச்சயமா உங்க வாழ்க்கைப் பாதையை மாற்றிவிட எனக்கு முடியும். அடுத்த ஞாயிறு எங்க வீட்டுக்கு வர்றீங்க. எங்க டெடி ரொம்ப நல்லவர். நிச்சயமா உங்களுக்கு நம் கம்பெனில ஏதேனும் போஸ்ட் தருவார். அதுவும் என் பேச்சுக்கு மறுப்பில்லை."

அவன் சிரித்துக் கொண்டான். "ஓ.கே. நீங்க இவ்வளவு சொல்றீங்க. நான் ஏன் மறுப்பான். வர்றேன். எல்லாம் விதிப்படி. உங்க டெடி என்னை வரவேற்பாரோ, விரட்டிவிடுவாரோ?" கேள்வியுடன் விடை பெற்றான்.

"வந்திட்டாரு டெடி" அவனை ஆவலோடு ஆரவாரமாய் வரவேற்றவள் கூவினாள். குரல் கொடுத்தாள். புன்னகையோடு வந்த டெடி பின் பெரிதாகச் சிரித்தார். இன்னும் பெரிதாக ஆ....ஆக..ஆக....ஆக....!

"டெடி" நிரோஷா பலவீனமானாள். அவன் மௌனமாக சோபாவில் அமர்ந்து கொண்டான். டெடி சிரித்து முடித்தார்.

"நிரோம்மா, இவரப் பத்தியா நீ சொன்னே?" "ஆமா டெடி."

நிரோஷா தடுமாறினாள். "என்ன கேள்வி இது? இவர் தான் நான் சொன்ன ரகுமான் டெடி."

"ஏமாந்திட்டியே நிரோ! இது..... இல்ல... இவர்.. இவர் யார் தெரியுமோ? ஜி என் ஆர் கம்பனி லிமிடட் ஓணர். என் ப்ரெண்ட் கபீர்கானோட இளைய மகன். இவருக்கு நம்ம கம்பெனில வேலையா? சிரிப்பு வருது மகளே.." முகம் சிவந்த நிரோஷாவை அலட்சியப்படுத்தி அவன் அவளது அப்பாவுடன் "அங்கிள்" என உரையாடத் தொடங்கினான். "ஒரு நாள் என் கார் ரிப்பேராகிட்டுது. அதப் போட்டுட்டு பிரைவட் வேன்ல போனேன். அப்போ தான் அங்கிள் உங்க டோட்டர மீட் பண்ணேன்..." குடை கதையைக் கேட்பதற்கு நிரோஷா அங்கேயில்லை. "என்னோட கார் பயணத்தைக் கூட தியாகம் பண்ணிட்டேன் அங்கிள். நிரோஷாவை நல்லா ஏமாத்திட்டேன்." அவன் குரல் தொடர்ந்தது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

## ஆண்கள் ஸ்பெஷல்

# கர்ப்பம்

அக்குறணை ஹரீரா அனஸ்

**ம**னத்தின் அந்தரம் சொல்லிமாழாது. அவள் உடலில் தானாகவே தோன்றும் எட்டுப்பிள்ளைகளைச் சுமந்த இளைப்பு. ஒவ்வொரு பிள்ளைக்கும் அவள் பட்டபாடு. பிறக்கும்போது ஏற்படும் நோக்காடு சிலவேளை அவளைத் தற்கொலைக்கும் தூண்டும். ஆனால் பிள்ளை பிறந்தவுடன் இயற்கையாய் அவளுள்ளே எழும் பாச உணர்வு, அவளை தன் நினைப்பில் இருந்து மாற்றிவிடும். பின்னரும் கணவனின் உபயத்தில் கரு சுமப்பாள். இப்படி இயந்திர மயமான பிள்ளை பெறும் ஒழுங்கில் செல்லாச்சியின் வாணாள் கழிந்து கொண்டிருந்தது. வரிசையாய் எட்டுப் பிள்ளைகள். இம்முறையும் பிள்ளைத்தாச்சி– வருகிற மார்கழி பெறு மாதம். சிவசேகரம் என்ன செய்வான். குடி சூதென்று போகாதவன். தனது மனைவியே தஞ்சமென்று கிடப்பவன். அவனால் வேறென்ன செய்ய முடியும்? வேறெந்தப் பெண்ணையும் அவன் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. தனக்குப் பத்துப் பிள்ளைகள் இருக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்வான்.

சிவசேகரம் தன் தோட்டத்தில் பிரயாசைப்படுவான். அந்தத் தோட்டத்தில் வரும் வரும்படிதான் அவனது குடும்ப வண்டியை இழுத்துச் செல்கிறது. வரவும் செலவும் ஒன்றாக இருப்பதனால் பரவாயில்லை. இல்லாவிடில் எட்டுப்பிள்ளைகளும் தொடர்ச்சியாய் ஒன்று இரண்டு வருஷ இடைவெளியில்த்தான் எல்லாம் குஞ்சும் குருமனுமாய்...அவள் காலையே சுற்றிச் சுற்றி வரும் பிள்ளைப் பட்டாளம்.

கலியாணம் முடிக்கும்போது எத்தனை விதமான மனவெண்ணங்கள்–தன் அன்புக் கணவனின் மனதை எந்தவிதத்திலும் நோகடிக்கக் கூடாது; அவனோடு மிகவும் அன்பாகப் பழக வேண்டும்; அவனே கதி என்று வாழவேண்டும்; அவனின் சந்தோஷம் தான் தன் சந்தோஷம் என்றெல்லாம் கனவு கண்டாள். கலியாணம் முடித்து முதல் இரண்டு மூன்று வருடங்கள் அப்படித்தான் கழிந்தன.

சினிமா, கடற்கரை, பூங்கா என்று தன் ஆசைக் கணவன் சிவசேகரத்துடன் பயணம் போய் வந்தவள்தான். அதற்குப் பிறகு பிள்ளை பெறுவதென்ற நிலமை வந்தவுடன் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று அடுக்கிக்கொண்டே போனதில் எல்லாப் பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு எங்கே போவது? என்ன செய்வது? முதல் என்றால் கோயில் குளம் என்று போனவளுக்கு இப்போது அந்தப் பயணங்களும் முடியாததாகிவிட்டது. எட்டுக் குஞ்சுகளையும் இழுத்துக் கொண்டு எங்கே போவாள்?

சில நேரங்களில் ஒவ்வொரு பிள்ளையும் செய்யும் அட்டகாசத்துக்கு "உதுகள் எல்லாத்தையும் தூக்கிக் கொண்டு போய் பாழ்கிணத்திலை போட்டுட்டு 'ஏழுபிள்ளை நல்லதங்காள்' மாதிரி நானும் குதிச்சிட்டால் சரிபோலப் படுகுது" என்று திட்டுவாள், அவ்வளவு கரைச்சல்.

பின்னேரம் சிவசேகரம் தோட்டத்தால் வருவான், பிள்ளைகள் எல்லோரும் அவனைச் சூழ்ந்துகொண்டு அப்பா...அப்பா என்று செல்லங் கொஞ்சுவார்கள். தனது அன்புச் செல்வங்களை எல்லாம் மடியில் கொத்தாக கூட்டி வைத்து நிலவில் கதை சொல்லுவான். செல்லாச்சிக்கு கணவனைப் பார்க்கும்போது சில நேரங்களில் சந்தோஷமாகவும், சில நேரங்களில் அந்தரமாகவுமிருக்கும். எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டான். பிள்ளைகள் என்றால் அவ்வளவு கொள்ளை ஆசை அவனுக்கு.

இப்படித்தான் ஐந்தாவது குமரேசனைப் பெத்தவுடன் பக்கத்து வீட்டு கமலம் வந்து செல்லாச்சியின் காதில் சொன்னாள்.

"உதென்னடி நாய்குட்டி போட்டது மாதிரி எல்லே கிடக்குது. உன்ரை புருஷனிட்டைக் கொஞ்சம் சொல்லனடி."

"அதுக்கெங்கக்கா உவர் கேக்கிறாரே. எவ்வளவு சொன்னாலும்- மனிசன் விளங்கிக் கொள்ளுற மாதிரி இல்லையக்கா!"

"புள்ளை செல்லாச்சி ஒண்டில் ஒப்பிறேஷன் செய்து போடலாம். இல்லாட்டி ஏதாவது குளிசை கிளிசை பாவிக்கலாம் தானே?"

"ஓமக்கா! எனக்கும் விருப்பம்தான்."

"அப்ப உவள் எங்கடை 'மிட்வைஃப்' பொடிச்சியிட்டை ஒரு பக்கெட்டு வாங்கியந்து தாறன் போடேன் புள்ளை."

"சரியக்கா வாங்கி வாருங்கோ போட்டுப் பாப்பம்."

இப்படித்தான் ஒருநாள் கொட்டப் பெட்டியை எடுத்து வெத்திலை போடப் போன சிவசேகரம் 'மித்துரி' காட் ஒன்றைக் கண்டு விட்டான். அவனுக்கு முன்பின் அது என்னவென்றே தெரியாது.

"செல்லாச்சி இதென்ன புதுவிதமான குளிசை ஒண்டு கிடக்கு... இப்படி பக்கெட்டுக் கணக்கா பாவிக்கிறது என்ன வருத்தத்துக்கு? என்ன பாவிச்சிருக்கு? நீ எதுக்கொண்டாலும் பாவிச்சனியே?"

செல்லாச்சிக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போய்விட்டது. இப்ப ஒரு பத்து நாட்களுக்கு மேல் பாவிக்கிறாள். ஆனால் இதைப் பாவிக்கிறதாக ஒரு வார்த்தை அவனுக்குச் சொல்லவில்லை.

"ஓம் பாருங்கோ! அது....அது... வந்து உவ கமலம் அக்கா கொண்டு வந்து தந்தவ கொஞ்ச நாளைக்குப் புள்ளை இல்லாமல் இருக்கிறதுக்கு குளிசைப் பக்கெட்டு..."

செல்லாச்சி வாய்மூடவில்லை.

பளார்.... பளார்... என்று இரண்டு அறை விழுந்தது. அவனின் மண்வெட்டி பிடித்துக் காய்த்துப்போன வலது கை அவளின் கன்னத்தைச் சிவப்பாக்கியிருந்தது. செல்லாச்சி துடித்துப் போனாள்.

"என்னடி! கர்ப்பத்தடை மாத்திரையே பாவிக்கிறாய்? ஏனடி! என்னை ஒரு வார்த்தை கேட்டியே? எனக்கு விருப்பமில்லாத ஒண்டை ஏன் செய்யுறாய்? உனக்கு எப்பிடித் துணிவு பாரேன்!"

கன்னம் இரண்டும் சிறிய பூசணிக்காயைப்போல வீங்கி விட்டிருந்தன.



அன்றிலிருந்து அவள் எதுவும் பாவிப்பதில்லை.

□□□

**பி**ள்ளைப்பேறு 'வாட்' நிறைந்து காணப்பட்டது. நிறைமாதக் கர்ப்பிணிகள் தமது பூசணிக்காய் வயிற்றைத் தள்ளிக் கொண்டு காலை அகட்டி வைத்து இங்கும் அங்குமாய் நடந்துகொண்டிருந்தார்கள். சிலர் வயிற்றை முன்னால் தள்ளியபடி ஆஸ்பத்திரி வாங்கில் சாய்ந்திருந்தார்கள்.

செல்லாச்சி பெறப்போகும் ஒன்பதாவது பிள்ளையோடு கடந்த எட்டுப் பிள்ளைகளையும் இந்த வாட்டில்தான் பெற்றெடுத்தாள்.

சிவசேகரம் பெரிய டொக்டரின் அறையில் அமர்ந்திருந்தான். பெரிய டொக்டர் ஊர் மனிசன். அவருக்கு எல்லாம் தெரியும். "சிவசேகரம் இந்தாப்பா உவள் செல்லாச்சியை சோதிச்சுப் பாத்தன் அவளாலை இனிப் புள்ளை பெறுகிற சக்தி உடம்பிலை இல்லை. ஓ... இப்ப அவளுக்கு எத்தினையாவது பத்தாவது புள்ளையே..."

"இல்லை ஐயா ஒன்பது."

"உப்பிடி வருஷத்துக்கொருதரம் புள்ளை பெத்துக்கொண்டு போனா உடம்பு என்னத்துக்கு ஆகும். அவள் என்ன மெசினே?"

"...." சிவசேகரம் மௌனமாய் தலையைக் குனிந்து கொண்டிருந்தான்.

"இஞ்சை பார்! சிவசேகரம். இப்படி பொம்பிளையளைப் போட்டு வதைக்கக் கூடாது. அவளுக்குத்தான் எத்தினை கரைச்சல். புள்ளையைப் பெறவேணும், அதுகளைப் பாதுகாக்க வேணும், அதுகளை பள்ளிக்கூடம் அனுப்ப வேணும், வீட்டு வேலையளைச் செய்ய வேணும், சமைக்க வேணும், மற்றுமுண்டான எத்தினை வேலையளைச் செய்ய வேணும்? ஒரு பொம்பிளைக்குத்தான் எத்தினை கரைச்சல்- புருஷன்ரை கரைச்சல், புள்ளையளின்ரை கரைச்சல், இப்பிடியிருக்கேக்கை அடுக்கடுக்கா புள்ளையளையும் பெத்தா அவள் எங்கை போவாள்? அதோடை பொம்பிளையளின்ரை நாடி நரம்புகள் எல்லாம் ஆம்பிளையளின்ரை மாதிரி இல்லை. பலவீனமானவை. அதுமட்டுமில்லை பிள்ளைப்பேறு நேரம் படுற அவஸ்த்தை, உடம்பைவிட்டு ஓடுற குருதி இதையெல்லாம் ஈடு செய்து அவையின்ரை உடம்பு தேறுற நிலை வாறதுக்கு ஒரு எட்டு மாசத்துக்கு மேலை பிடிக்கும். அப்ப ஒரு பிள்ளையைப் பெத்ததாலை ஏற்படுற களையிலை கருப்பை நல்லா தொஞ்சு போயிடும். அது சரிப்படுறதுக்கு ஒருவருஷத்துக்கு மேலை ஆறுதலா இருக்க விடவேணும். அதுமட்டுமில்லை. பால் குடிக்கிற குழந்தையை மடியிலை வைச்சுக்கொண்டு வயித்திலை இன்னொரு புள்ளை தங்கீட்டுது எண்டா அந்தப் பால் குடிக்கிற பிள்ளைக்கு இந்தக் கர்ப்பிணித் தாயின்ரை பால் நஞ்சாகக்கூட மாறுறதுக்கு காரணமிருக்கு. உப்பிடி எத்தினை விஷயங்களை இந்த ஆம்பிளையள் புரியுறதில்லை. தெரிஞ்சுகொள்ள யோசிக்கிறதுமில்லை.

"சிவசேகரம், இனியாவது புத்தியா நட. உவள் இந்தமுறை அதுதான் உன்ரை பெண்சாதி இந்த முறை பிள்ளை பெறுறதே பெரிய கஷ்டந்தான். உடம்பிலை சக்தியெண்டதே இல்லை. சரியான பலவீனம். உனக்கு நான் சொல்றது எண்டா, இனிமேல் புள்ளை பெறுறதை நிப்பாட்டினால்தான் செல்லாச்சிக்கு நல்லது."

சிவசேகரம் குனிந்த தலை நிமிராமல் கேட்டுக்கொண்டிருந்தான். பெரிய டாக்டர் கதிரையை விட்டெழும்பி 'ஸ்டெதஸ்கோப்பை' கழுத்தில் மாட்டிக்கொண்டு அறையைவிட்டு வெளியே போனார்.

அடுத்த வருடம்-

பெரிய டாக்டரின் ஆலோசனைகள் அவனுக்குப் படவில்லையோ அல்லது அசட்டைப்படுத்தினானோ?

இப்படி எத்தனை ஆண்கள் பெண்களின் உணர்வுகளை, அவளின் உரிமைகளைச் சாகடிக்கிறார்கள்? சிந்தனை இல்லாத பிறவிகள். ஜடங்கள் என்று ஒற்றை வார்த்தைக்குள் திணித்து விடலாம். செல்லாச்சி பத்தாவது பிள்ளையைச் சுமந்துகொண்டு பிள்ளைப் பெறுவாட்டுக்கு வந்திருக்கிறாள்.

கண்கள் குழிவிழுந்து, உடலெல்லாம் சோகை பிடித்து, முகமெல்லாம் ஊதி பிரேதம் போல அவள் நடமாடிக் கொண்டிருந்தாள்.

சிவசேகரத்தின் மனது "பத்துப் பிள்ளைகளின் தகப்பன் நான்" என்று மார் தட்டிக் கொண்டிருந்தது.

வலியெடுத்து கத்திக்கொண்டிருந்தாள் செல்லாச்சி.

"என்னைக் கொண்டு போடுங்கோ! நான் எங்கையாவது ஆத்திலை குளத்திலை விழுந்து சாகப் போறன்" ஆற்றாமையால் கத்தினாள். நேரம் வர அவளை பிள்ளைப் பெறு அறைக்குக் கொண்டு போனார்கள்.

பத்தாவது பிள்ளை மொழு மொழுவென்று ஆணாய்ப் பிறந்தது. ஐந்து பெண்களோடு- ஐந்து ஆண்கள்- இந்தப் பிள்ளை அந்த வீதத்தைச் சமப்படுத்தியது. தாயின் எல்லாச் சத்துக்களையும், அவளின் எல்லா உணர்வுகளையும் அட்டை உறுஞ்சுவதுபோல் உறுஞ்சி உறுஞ்சி அவளைச் சக்கையாக்கிவிட்டு இவன் பிறந்திருக்கிறான்.

பிள்ளைப் பெறு அறையில் இருந்து செல்லாச்சி பிரேதமாகக் கொண்டுவரப் பட்டாள்.

□□□

**ஆ**ஸ்பத்திரியே ஒருமுறை அல்லோல கல்லோலப்பட்டது.

"செல்லாச்சி என்ரை தாயே! நீ என்னை விட்டுட்டுப் போயிட்டியே.... என்னை விட்டுட்டுப் போயிட்டியே... நீயில்லாமல் எப்பிடியம்மா நான் இந்தப் பத்துப் பிள்ளையளையும் வளப்பன்....?

"செல்லாச்சி! நான்தான் உன்னை எமனிட்டைக் குடுத்திட்டன். நான்தான் பாவியடி..

"இந்தப் பத்துப் பிள்ளையளையும் கொண்டு நான் எங்கை போவன்...? செல்லாச்சி! என்ரை செல்லாச்சி...!"

சிவசேகரம் கத்தினான். வாய்விட்டு அலறினான்.

"செல்லாச்சி பெரிய டொக்டர் சொன்னதையும் கேளாமல் பத்துப் பிள்ளை எனக்கு வேணுமெண்ட நினைப்பிலை உன்னைக் கொலை செய்த பாவி நான்தானடி."

'சிவசேகரம் நீ சொல் சரி. செல்லாச்சியைக் கொன்ற பாதகன் நீதான். இது சுடலை ஞானம். உன்னைப் போலுள்ளவர் திருந்துவதற்கு இன்னும் எத்தனை செல்லாச்சிகள் மரணிக்க வேண்டுமோ?'

---

## திருப்பம் முடிவில் உண்டு.

### பொறுமையாகப் படிக்கவும்.

# இரவு ராணி

பேருவளை-ஏ.பீ.எம்.ஜிப்ரி

**இ**ன்றுதான் என் வாழ்வில் மகிழ்ச்சிகரமான நாள்! ஆம்! நேற்றுவரை மாணவர்களோடு மாணவனாக இருந்த நான் இன்று அத்தகைய மாணவர்களுக்கே ஒரு குருவாக, ஆசிரியனாக மாறி இருப்பது சந்தோசமான விஷயம்தானே?

இது என் முதல் அனுபவம். நிச்சயம் அச்சமும், கூச்சமும் என்னை ஒரு பிடி பிடிக்குமென்று எனக்குத் தெரியும்.

ஒரு வேளை எனது ஊரிலே இந்த ஆசிரியர் நியமனம் கிடைத்திருந்தால்..பழகிய பாடசாலை, கண்டு பழகிய முகங்கள், அனுபவப்பட்ட சூழ்நிலை காரணமாக எல்லாம் சகஜமாக இருந்திருக்கும். ஆனால் நான் ஆசிரியனாக பணியாற்றப்போவதோ புது இடம், புதிய பாடசாலை. மாணவர்கள் எப்படி நடந்து கொள்வார்களோ... நினைக்கையில் பாக்கியராஜின் 'சுந்தர காண்டம்' கண்முன்னே வந்து போனது.

ரயில் பெட்டிகளின் 'சடாக்-சடாக் என்ற இறுதி மூச்சு என் கற்பனையையும் களைந்து விட்டது. குறிப்பிட்ட இடம் வந்துவிட்டதால் ரயிலை விட்டு இறங்கி பாடசாலை நோக்கி நடக்கலானேன்.

அங்கு எனக்கு கிடைத்த முதல் தகவல் இரவு ராணிகளைப் பற்றிதான். அதிர்ச்சியாக இருந்தது. ஆனால் அவர்கள் சொன்ன வீடும் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இரவு வேளை வந்து விட்டால் இந்த ராணிகள் அழையா விருந்தாளியாக உள் நுழைந்து பிரச்சினையை தரத் தொடங்கி விடுமாம். சற்றேனும் கண்ணயர்ந்து தூங்கிவிட்டாலும் தூக்கத்தை துவம்சம் செய்துவிட்டு இவர்களோடு சரசமாட வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்படுவதுடன் பயங்கர நோய்களுக்குடம் இரையாக வேண்டியற்படலாம் எனவும் அஞ்சுகின்றனர். ஆனால் நகரப்புறங்களில் இவர்களால் அவ்வளவு பெரிய தொல்லை இல்லையென்றும், பின்தங்கிய கிராமப் புறங்களிலே இவர்களது ஆதிக்கம் அதிகமென்றும் மேலும் கூறினர்.

உண்மைதான். வரும் போது நானும் அவதானித்தேன். மிகவும் பிற்போக்கான கிராமம், பார்க்கும் இடமெல்லாம் கூம்புக் குன்றங்கள்போல் ஓலைக்குடில்கள். அதனைச்சூழ, படர்ந்து விரிந்திருக்கும் காடு வனாந்திரங்கள் எனவே இத்தகைய சூழ்நிலையில் இரவு ராணிகளின் பெருக்கமும்- அவர்களது தேவையும் அதிகம்தான்.

'டான்' சத்தம் வந்த திசையை நோக்கி திரும்பினேன். எனக்கு ஒதுக்கப்பட்ட பாழடைந்த அறையில் கிடந்த கடிகாரம் இரவு 9.00 மணியை காட்டி நின்றது. அறைக்கு கதவுகள்கூட இல்லை பிடவையினால் மறைத்திருந்தார்கள். நான் இங்கு தங்கும் முதல் அனுபவம் இது.

எங்கும் மயான அமைதி குடிகொண்டிருந்தது. குளிர்காற்று வேறு என் வெற்றுடம்பை தழுவித்தழுவி சென்றது தூக்கம் கண்களை மறைத்தாலும் இரவு ராணிகளை நினைக்கும் போது தூக்கம் கூட தூர ஓடிப்போனது.. எங்கோ ஒரு மூலையில் தெரு நாய்களின் ஓலக்குரல் ஒலித்துக்கொண்டிருந்தது.

அப்போது...

எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கின் முன் யாரோ நடமாடுவதுபோல் தெரிந்தது. என் நெற்றிக்கண்ணில் வியர்வை முத்துக்கள் முகாமிட ஆரம்பித்தது. கூடவே பயம் கவ்விக்கொள்ள.. அன்று ஒரு நாள்



நண்பனுடன் ஹொஸ்பிடல் ஒன்றுக்கு சென்றிருந்த சமயம் இரவு ராணிகளின் ஊடலுக்கு இரையாகிய பலர் மோசமாக பாதிக்கப்பட்டிருந்ததும்; அன்றைய தினசரிகளில் இவர்களைப்பற்றிய செய்தி கொட்டை எழுத்துக்களில் வெளிவந்திருந்ததும் ஞாபகத்தில் எழவே புரிந்துவிட்டது. இப்போது வந்திருப்பது யார் என்று.

'ஆண்டவனே' என்னைக் காப்பாற்றப்பா' என மறு பக்கம் திரும்பி படுத்துக் கொண்டேன். அப்போது என் முதுகை தன் இதழால் தொட்டுப் பார்த்து சீ என் தசையை உலுக்கி நழுவிடச் செய்தேன். மறுபடியும் என் பாதுங்களை தொட்டுத் தொட்டுப் பார்த்து 'நீ காலைப்பிடித்தாலும் சரி கையைப்பிடித்தாலும் சரி உன் பாச்சா ஒன்றும் என்னிடம் பலிக்காது.

நான் மானஸ்தன் ஆளை விடு' என கூறினாலும்அது இருக்கும் நிலையில் அதற்கு ஒன்றும் விளங்காது என நினைத்து காலை உள்ளிழுத்துக்கொண்டேன்.

சில வினாடிகள் மௌனத்தில் கரைந்தது.

'அப்பாடா' தப்பித்தேன்' என பெருமூச்சு விட்டேன். ஆனால் அது நீடிக்கவில்லை. சற்று நேரத்திற்கெல்லாம் காதருகில் வந்து ஏதேதோ சொல்லத் தொடங்கிவிட்டது. எனக்கு பாவமாக இருந்தாலும் அதன் செயல் தொடரத் தொடர எரிச்சலாக இருந்தது. என்றாலும் பொறுமையாக 'இதோ பாரம்மா' என்னை விட்டு விடு நான் இந்த ஊருக்குப் புதியவன். அதிலும் உன்னை திருப்திப்படுத்தக்கூடிய நிலையில் நான் இல்லை. ஏற்கனவே விபத்தொன்றில் சிக்கியதால் அதிகப்படியான இரத்தங்களை இழந்து தற்போது விட்டமின் மாத்திரைகளிடம் தஞ்சம் புகுந்துள்ளேன். எனவே உன் சந்தோஷத்திற்காக என் இரத்தத்தை இழந்து நோயினை பெற்றுக்கொள்ள நான் தயாரா இல்லை. பிளீஸ் போய்விடு" என கத்த வேண்டும்போல் இருந்தது.

இரவு ராணிகள் மனிதனை நாசம் செய்வதற்கென்றே பிறவி எடுத்த ஜென்மங்கள்போல் மீண்டும் மீண்டும் முகத்தை முத்தமிட்டது. நான் மசியவில்லை. கைகளால் தள்ளிவிட்டேன். அப்போதுதான் அது நடந்தது.

ஆம்! கொஞ்சம்கூட வெட்கமில்லாமல் என் கன்னத்தை கடித்தெடுத்தது. எனக்கு பொறுமை எல்லை மீறிவிட்டது. கையை நீட்டி அடிப்பதைத் தவிர வேறு ஒன்றும் தோன்றவில்லை.

'சடார்'...இரவின் அமைதியை அந்த ஓசை களங்கப்படுத்தினாலும் என் கையோடு ஒட்டி வந்தது அடிபட்ட நுளம்பு.

# இலக்கிய நயம்

# வசையும் நெய்யாகும்!





தருவது
ரசிகன்

"நில்."

ஒற்றைச் சொல்லாய், இடிபோ என நினைக்கும் குரலில் உத்தரவு வந்தது.

இளமான் அஞ்சியது.

மன்னன் மகேந்திரபூபதி பெரு மலையெனும் தோற்றத்தான் தன் மகள் எதிரே வந்து நின்றான்.

துள்ளி ஓடும் மான் ஒன்றை மத யானை ஒன்று வழிமறித்தது போலிருந்தது.

மன்னன் தன் தடித்த உதடுகள் அசைய,

"செக்கல் பொழுதாகிவிட்டது மகளே!"

என்றான். மான்விழியாளோ மன்னவன் முகம் நோக்கும் துணிச்சல் தொலைத்துவிட்டு தரை நோக்கி விழி அம்புகளை கவிழ்த்தபடி,

"தெரியும் அப்பா."

என்றுரைத்தாள்.

"தெரிந்தும் வெளியே செல்ல விரைந்தது ஏன் மகளே?"

வினாவர பிறை நெற்றியில் வியர்த்தது. விடை சொல்ல காரணம் தேடி வார்த்தைகள் பொறுக்கியெடுத்து,

"காற்று வாங்கலாம் என்று.."

ஒன்றன்பின் ஒன்றாய் இதழ் உதிர்த்த சொற்கள் வாக்கியமாகும் பாக்கியம் பெறுவதை மன்னனின் நகைப்பு குறுக்கிட்டுத் தடுத்தது.

பட்டுடல் பாவை மெல்ல இதழ் மொட்டுப் பிரித்து, மெல்லிய இடைபோல் மெல்லிய குரலில் கேட்டாள்;

"என்னப்பா நகைத்தீர்களா?"

மன்னவன் மகேந்திரபூபதி தன் அடர்த்தியான, அமோக விளைச்சலான மீசையை கட்டை விரலால் ஆசையாக தடவிக்கொண்டு தன் அன்பு மகளை நோக்கினான்.

"நானும் இப்படித்தானம்மா கேட்டிருப்பேன் என் எதிரே நகைத்திருந்தால்! ஆனால் முதுகுக்குப் பின்னால் அல்லவா மகளே நகைக்கிறார்கள்."

சற்றுத் தைரியம் வரவழைத்து மைதீட்டியதால் மேலும் கருமையாகி மிரட்டும் விற்புருவங்கள் வளைத்து, பொற்றாமரை முகத்தாள் மெல்ல முகம் உயர்த்தி,

"என்னப்பா சொல்கிறீர்கள்? எனக்கு எதுவுமே புரியவில்லை."

"கள்வெறி உச்சிவரை ஏறிவிட்டால் சுற்றம் கொல் என்று சப்தமிட்டு நகைத்தாலும் செவிவழியே ஏறாது. சித்தத்திலும் உறைக்காது மகளே."

"பொடிவைத்துப் பேசுகிறீர்கள் தந்தையே!"

"இல்லை மகளே! நான் குறிவைத்திருக்கும் எதிரியின் மகன் வைத்த பொறியில் நீ போய்விழுந்தாய் என்று அறிந்தபோதும் வெஞ்சினம் கொள்ளாமல், இன்னும் நீ குழந்தை என்றெண்ணி கொஞ்சிப் பேசுகிறேன்."

மன்னவன் எண்ணம் மகளுக்குப் புரிந்தது.

இதமான வார்த்தைகள் என்னும் சாம்பல் மூடியிருக்கும் மன்னவன் நெஞ்சத்துக் கோபம் அறிய முடிந்தது.

பதிலுக்கு பதில் படபடப்பான வார்த்தை பேசினால் சாம்பல் விலகும். கோபம் சிவந்த தணலாய் கண் திறக்கும். மௌனித்தாள் மன்னன் மகள்.

"பேசு மகளே! இன்று அரண்மனையே நகைக்கிறது. நாளை இந்த நாடே நகைக்கும் மௌனமாய் இருக்கலாம் நீ. இருந்திட முடியுமா நான்? உதடுகளை மூடிக்கொள்ளலாம் நீ. ஊர் மூடுமோ சொல்."

மாங்கனிப்பாவை மெல்ல செம்பவள வாயிதழ் திறந்தாள்,

"காதல் என்பது கைகொட்டி நகைக்கும் விசயமா தந்தையே?"

"வெல்ல முத்தம் பொழிந்து நிலாச்சோறு பிசைந்தூட்டி கண்ணின் மணிபோல காத்து வளர்த்தவனையே கேள்வி கேட்கத் துணிந்துவிட்டாய்."

"பேசவும் சொல்கிறீர்கள். பேசினால் பிழையும் காணுகிறீர்கள். என்னப்பா நான் செய்ய?"

"படரத்துடிக்கும் கொடியாகிவிட்டாய். பக்குவம் சொன்னால் புரியாது. பதைக்கத்தான் செய்வாய்."

"பிறர்சொல் கேட்டு பெற்ற மகள்மீது குற்றம் காண்கிறீர்களா அப்பா?"

"குற்றம் என்றால்கூட கொற்றவன் சபையில் மன்னிப்புண்டு மகளே. துரோகம் என்றால் சொந்த இரத்தமேயென்றாலும் இரக்கம் காட்டப்படுவதற்கு எங்கள் நீதி முறையில் இடமில்லை மகளே."

மன்னவன் குரலில் முன்பிருந்த கனிவு காணாமல் போய்க்கொண்டிருந்தது. மன்னன் மகளுக்கோ தன் நியாயம் சொல்லும் துடிப்பேறிக்கொண்டிருந்தது.

"தவிக்கிறதே முல்லை என்பதற்காக தன் விருப்பத்துக்குரிய தேரைக் கொடுத்து, வள்ளல் என்று பார் புகழும் பாரி வழிவந்த மன்னவர் தாங்களப்பா! ஆனால் உங்கள் பிள்ளையின் காதலைப் பிரித்து தவிக்கவிட, உயிர்த்துடிக்கவிட நினைக்கிறீர்களே நியாயமா? சொல்லுங்கள் அப்பா!"

மன்னன் சற்றே யோசித்தான். என்னை விட அவனே உசத்தியாகிவிட்டானா என்ற பாசம் கலந்த பொறாமை நெஞ்சில் வளர்ந்தது.

"ஏன் அப்பா பேசாதிருக்கிறீர்கள் கோபமா அப்பா?"

"கோபம் எப்படி வரும் மகளே? பெற்றவன் என்று நான் இருந்தாலும் உன் இதயத்தைப் பெற்றவன் அவனல்லவா? என் வார்த்தைகளைவிட அவன்மீதுள்ள வாஞ்சை பெரிதல்லவா உனக்கு. மன்னவன் மானம் காற்றில் பறந்தால் உனக்கென்ன மகளே, மையல் கொண்டவன் மீதுள்ள மோகம் உயரமல்லவா உனக்கு?"

வார்த்தைகள் வாளாகி நெஞ்சைப் பிளந்தன.

மன்னன் மகள் முகம் திருப்பி உள்ளே ஓடினாள். விழிகள் ஆறாக, ஆறாத ரணமாய் நெஞ்சுக்குள் வலி பெருக, அம்புதைத்து விழுந்த புறாவாய், சோக அம்புகள் தைக்க பஞ்சணையில் போய் விழுந்தாள்.

கொவ்வை இதழ், கொஞ்சுமொழி, கோல விழி, கள்வெறி கொட்டும் உடல், குத்தவரும் கொம்புகள்போல் எழில்கள் யாவும் சோர்ந்துபோக கோவென்று அழுதாள் கோதையவள்.

விழிக்குடங்கள் கொட்டிய நீர் ஆறாகிப் பாய, அந்த ஆற்றிலே துடுப்பு வலித்து வந்து,

"வா மயிலே. வந்தெனக்குத் தா மயிலே. வெல்லப்பாகினிமை, பலாச்சுளையினிமை என்பதெல்லாம் பொய்யென்றாக்கிய பூங்குயிலே. உன் இதழினிமை நான் அறிந்த நாள் முதலாய் சித்தமெல்லாம் தேனாகி, செவி வழியே பூமுத்த இச் ஒலியே எப்போதும் கேட்பதுபோல் பித்தாகிப் போனேனடி. மகரந்த வரம் தேடும் வண்டுக்கு பூ இரங்கும். நீ இரங்க மாட்டாயோ என்றெண்ணி நான் கலங்கும் நிலையறியமாட்டாயா? பொன் பூவே இரங்கிவிடு. பொன் அள்ளிக் கொடுத்தாலும் பூவுலகில் கிடைக்காத உன் தேக அழகையெல்லாம் காதல் வரம் கேட்டு தவமிருக்கும் முனியெனக்கு அள்ளிக்கொடு."

செவிக்குள் கேட்டது அவன் அழைப்பு. சோகம் பறந்தது. சோர்வு அகன்றது. வெட்கப்பட்டது நிலா,

"ச்சே... நீங்கள்..மோசம்தான். தந்தது போதும்தான். அதிகம் வேண்டாம் இந்த தாகம்தான். குறும்பத்தான் உங்களுக்கு விடுங்களத்தான் என்னைத்தான்."

என்று இதழ் பிரித்து உளறியது.

"என்னை விடு. இதென்ன பிடி. உடும்புப்பிடி."

என்றாள் தோழி. விழி திறந்து பார்த்தாள். தன் பிடியில் தோழி திணறுவதை அறிந்து அளவற்ற வெட்கமானாள். தோழி கேட்டாள்.

"மன்னவருக்கு விசயம் தெரிந்துவிட்டது. ஊரவருக்கும் மெல்ல கசிந்துவிட்டது. நீயோ மேலும் மேலும் உருகிப்போகிறாயே அவரை நினைத்து."

அதற்கு வண்ணமயில் சொன்னது விடை.

"அடியே என் தோழி! இதுகேள்: ஊர் தூற்றும் ஒவ்வோர் சொல்லும் என் ஆசை வளர்வதற்கு ஊற்றுகின்ற நெய்யாகும். எரிகின்ற நெருப்புக்கு பழிச்சொல்லே நெய்யாகும் என்றறியா சுற்றத்தார் தூற்றட்டும். எனக்கதனால் கோபமில்லை. இலாபம்தான்."

அவள் சொன்ன விளக்கம் கேட்டு தோழி நினைத்துக்கொண்டாள் தெரிந்துதான் சொன்னார் திருவள்ளுவர் என்று. தோழி நினைத்த குறள் இதோ உங்களுக்கும்.

**"கவ்வையால் கவ்விது காமம் அது-<br>இன்றேல்<br>தவ்வென்னும் தன்மை இழந்து"**

குறள்–1144
அதிகாரம்–115

## குறுக்கெழுத்துப் போட்டி இல–68

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | | 3 |
| | ■ | ■ | 4 | | | |
| | 5 | 6 | ■ | ■ | ■ | |
| ■ | | | ■ | 7 | | |
| 8 | | | ■ | | ■ | ■ |
| | ■ | 9 | | | | ■ |
| 10 | | ■ | 11 | | | |

### இடமிருந்து வலம்

1. நண்பர்களுக்கு ஒத்த கருத்துள்ள செந்தமிழ்ச் சொல்.
2. சிறகைப் பறித்து விட்டால் இதன் பயணம் தடைப்பட்டு விடும்.
4. முழுக்க நனைந்த பின் இது எதற்கு என்பார்கள்.
7. இதுவும் பொதி சுமக்கும்.
9. இதற்கு சிறப்பு விருந்தினர்களையும் அழைப்பதுண்டு.
10. சொல்வதைத் திரும்பச் சொல்ல இதற்குக் கற்றுக் கொடுக்கலாம்.
11. வீண் செலவுகளைத் தவிர்த்து இதனைக் காலியாகாமல் தடுப்பது அரசின் கடமையாகும்.

### மேலிருந்து கீழ்

1. சீப்பிற்கும் இதற்கும் தொடர்பிருக்கிறது.
3. முரசின் பாப்பா முரசில் இதனைக் காணலாம்.
5. இது சொல்வதை வைத்து சிலர் சகுனம், அபசகுனம் கணிப்பார்கள்.
6. திருமண விருந்துகளில் இதற்கு உண்டோ குறை?
7. இங்கேதான் எமது தொடக்கம்.
8. குழந்தைகளை இரசிக்க வைக்கும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 01.10.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-68
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-66க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பா | ல | ம் | ■ | 2 மு | த் | 3 து |
| ட | ■ | 4 ச | ங் | கீ | த | ம் |
| 5 சா | ப் | பா | டு | ■ | ■ | பி |
| லை | ■ | 6 நா | ண | ய | ம் | ■ |
| ■ | 7 கு | ய | ■ | 8 சி | னி | 9 மா |
| 10 க | ம் | க | ல | ■ | ■ | து |
| 11 தி | மி | ர் | ■ | 12 வெ | ள் | ளை |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.66இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. எம்.ராமானுஜம் அவிசாவளை.
2. எம்.ஹாலீத் ஏறாவூர்–03.
3. ஆர்.விமல்ராஜ் கொழும்பு–09.
4. கே.குமுதினி ஹட்டன்.
5. பரீக்கா ஆரிபீன் பதுளை.
6. மு.கருணாகரன் எட்டியாந்தோட்டை.
7. ஸிஹானா இஸ்மாயில் ஹேனமுல்லை.
8. ஆர்.சசிரேகா மட்டக்களப்பு.
9. எம்.சஹீட் ஹசன் இரத்தினபுரி.
10. மு.சந்திரமோகன் நீர்கொழும்பு.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

---

சமீபத்தில் உங்களை பிரமிக்கச் செய்தவர் யார்?

**எம்.கலாதரன்–கொழும்பு–06.**

*12 வயதில் ஆங்கிலக் கால்வாயை 11மணி 36 நிமிடங்களில் கடந்த தமிழக குட்டிப்பையன் குற்றாலீஸ்வரன். கடுகு சிறிது. காரம் பெரிது.*

□□

இலங்கை அணி சிங்கர் கிண்ணத்தை தவறவிட்டது பற்றி?

**கே.தவநாதன்–நீர்கொழும்பு.**

*மதிப்புக்குரிய தோல்வி. இறுதிவரை போராடினார்கள் என்பது இலங்கை அணியை குறைத்து மதிப்பிட முடியாத நிலையை ஏற்படுத்திவிட்டது. கிண்ணம் போனாலும் போராடும் எண்ணம் இருப்பதால் எதிர்காலத்தில் கிண்ணம் பெறுவது திண்ணம் என்று வாழ்த்துவோமே.*

□□

சிங்கர் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் உங்களைக் கவர்ந்தவர்கள் யார்?

**வி.எல்.சம்சுதீன்–புத்தளம்.**

*பார்வையாளர் பகுதியில் இலங்கை அணிக்காக ஆதரவுக் குரல்கொடுத்து துள்ளிக்கொண்டிருந்த இளமையான பெண்கள். ஆண்களின் விளையாட்டு தலைநகரப் பெண்களை மெய்மறக்க வைத்து விட்டதை இரசிக்காமல் விடலாமா?!*

□□

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 'சதம்' போட்ட டெண்டுல்கர் இலங்கை அணியிடம் பூச்சியத்தோடு போனது ஏன்?

**ஆர்.சர்மிளா–திருகோணமலை.**

*ஆரம்பத்திலேயே அதிகமாக உணர்ச்சிவசப்பட்டு விட்டார். பந்தை விரயமாக்காமல் ஆடிமுடிக்கும் அவசர உணர்ச்சி.*

சிவாஜிகணேசனுக்கு பிரான்ஸ் நாட்டு விருதான 'செவாலியர்' விருது கிடைத்திருப்பது மகிழ்ச்சிதானே?

**என்.சியோன்–ஹட்டன்.**

*எங்கெல்லாம் தமிழ் பேசுவோர் இருக்கிறார்களோ அங்கெல்லாம் மகிழ்ச்சிதான். இமயத்தின் பெறுமதியை இந்தியா இதுவரை உணராததுதான் கவலை.*

□□

கண்ணால் காண முடியாத ஒன்று சொல்லவும்?

**ஏ.ரவிராஜ்–வவுனியா.**

*இந்த மாதிரி ஒரு கேள்வியைக் கேட்டுள்ள உங்கள் நோக்கம்.*

□□

இ.தொ.கா.தலைவர் தொண்டா ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பார் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்?

**கு.விஜயகுமார்–அப்புத்தளை.**

*மதிப்பிற்குரிய ஒரு பெண்மணியை.*

## சிங்கர் கிண்ணப் போட்டியில் கவர்ந்தவர்கள் யார்?

சந்திரிக்கா ஒரு வாரத்தில் யாழ் செல்வாராமே?

**வி.ஜெயராஜ்–கொழும்பு–07.**

*யார் சொன்ன பொய்?!*

□□

தற்போது தமிழில் நம்பர் 1 நடிகை யார்?

**அ.லோகநாதன்–மட்டக்களப்பு.**

*குஷ்புவுக்குப் பின் ஆசனம் காலி. பலத்த போட்டி நடக்கிறது. துணிகள் பறக்கின்றன. ஜொள்ளப் பிரியர்களுக்கு லாபம்.*

□□

யுத்தம் ஏன் தொடர்கிறது?

**எம்.ஜோசப்–மன்னார்.**

*எல்லோரும் காந்தியல்ல. அதனால்.*

□□

புதிய அமைச்சர்களில் யாரைப் பாராட்டலாம் என்று தோன்றுகிறது?

**எஸ்.ஏ. முகமட்–ஏறாவூர்.**

*ஆட்டம் தொடங்கியவுடன் அபிப்பிராயம் சொல்வது சரியல்ல. அதே சமயம் என்னதான் பணிகள் இருந்தாலும் நமது பிரதமர் பாராளுமன்றத்திற்கு வர தாமதித்ததும், அதனால் பா.மன்றம் ஒத்தி வைக்கப்பட்டதும் சரியல்ல.*

## மகாபாரதம் தொடர்ச்சி

நாட்டின் பெரும் பேரரசன் துருபதனார்
பெற்றெடுத்த பாஞ்சாலி நானின்று
அத்தினா புரத்தின் அரியணையின்
முன்னின்று அபகீர்த்திக்காளானேன்!
தீக்குண்டத்தில் லுதித்த தூயவள் நான்!
என்னுடலை காற்றேனும் தீண்டிக்
கறைபடிய விட்டதில்லை. கூற்றின்
வலியறியாக் கொடியவர்கள் நின்
முன்னா வென்கூந்தல் தனைக்கொய்
திழுத்தார். மானந்தனைக் காக்க
மங்கையிவள் போர்த்திருந்த தூய
துயிலுரிந்து தாய்மைக்கே உலை
வைத்தார். குருகுலத்தின் பெருமைக்கே
பெரும் பழியையே இழைத்தார்.
பெருமை மிகு பாரதத்தின் பெண்
குலத்தின் மாண்புதனை சிறுமைக்கிழுத்
திங்கு சீரழித்து விட்டீர்கள்!
வில்லேந்தும் வீரர்களும் சொல்லேரு
ழவர்களும் சூதின் கொடுமைதனை
சோதனையிட்டறிந் தோரும் கோழைகளாகி
விட்டீர்! கொடியவரே உங்கள் குலங்க
ளெல்லாம் கொடியோடறுந் திடவே
கொடுஞ் சாபமிடும் கட்டம் கூடி
வந்துவிட்டதிப்போ!

**காந்தாரி:** *(ஓடி வந்தவண்ணம்)*
பொறு மகளே...! பொறு தாயே!

**எங்கும் எதிரொலிக்கிறது.**

**பின்னணிப் பாடல்:**

**அவை நடுவே அபலையவள் அறை கூவி ஆர்ப்பரிக்க**
**தரை பார்த்த வண்ணம் தலை தாழ்த்தி நின்றார்கள்**
**அரியவர்க்கு ஆணவத்தால் அபகீர்த்தி இழைப்பவர்கள்**
**ஆண்டவன் தன் அறவாளின் அழைப்புக்கே ஆளாவர்!**

(தொடர்ந்து வரும்)

எம்.ரீ.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

**இவ்வாரம் (25.09.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

# மகாபாரதம்

அங்கம் 47

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** இம்மகா காவியத்தின் இவ்வங்கம் இழிவும் இக்கட்டும் சூழ்ந்த கட்டத்தைத் தொட்டு நிற்கிறது. மரபு வழிப் பண்பின் வரம்பின் ஒரு கரையில் திரௌபதியாள் தனித்து நிற்க, கங்கை தன் மைந்தர் பீஷ்மர், துரோணாச்சாரியாருடன் கிருப்பாச்சாரியார் பாண்டு புத்திரர்கள் இவருடன் ஏனையோரும் மறுகரையில் நிற்பதனைக் காண்கின்றோம். ஒழுக்கமுடைமைக்கு ஒப்பாகும் வரம்பு எதுவென்று எல்லோரும் எண்ணிப் பார்க்கின்ற ஒப்பரிய கட்டமிது. இங்கு அரங்கேறும் இழிவான கட்சிக்கு இங்குள்ளோரெல்லாம் இணையில்லாச் சாட்சியங்கள்!

**-காட்சி தொடக்கம்-**

சொக்கட்டான் ஆட்டத்தில் ஒவ்வொன்றாய்த் தோற்கும் யுதிஷ்டிரன், இளைய தம்பி நகுலன் முதல் சகாதேவன், அர்ச்சுனன் மற்றும் பீமனையும் பணயமாக வைத்தாடித் தோற்கின்றான். அடுத்து தன்னையும் பந்தயமாக வைத்தாடித் தோற்றதன்பின் மனைவி திரௌபதியையும் பணயமாக வைத்து தோற்றுவிட்டான்.

(அங்கம் 46ல் இடம்பெற்ற காட்சிகளிலிருந்து இக்காட்சிகள் தொகுத்தளிக்கப்படுகின்றன.)

திரௌபதியின் அந்தப்புரம்– காவலனிடம்...

**திரெள:** அவர் சூதாட்டத்தில் என்னைத் தோற்றபின் தன்னை தோற்றாரா? அல்லது தன்னைத் தோற்றபின் என்னை தோற்றாரா? இதற்கான பதிலை அவரிடம் கேட்டு அறிந்துவா...!

**-காட்சி மாற்றம்-**

சூதாடு மண்டபம்– பாண்டவர்கள் தலை குனிந்து நாணிக் குறுகிக் கிடக்கின்றனர். சகுனி அட்டகாசமாகச் சிரிக்கிறான்.

**கிருபா:** மன்னவா! இந்த ராஜ்ஜியத்தின் குலகுரு என்பதனால் எச்சரிக்கிறேன்! மிதமிஞ்சிய மகிழ்ச்சி, வரம்பு மீறிய வேட்டை, அளவுக்குள் அடங்கா சூதாட்டம்... அத்தனையும் மனிதனை வதைத்து அவனுடைய பேரழிவுக்கே வழிகோலும்.

**துரியோ:** குலகுரு அவர்களே! ஆட்டத்தில் நான் தோற்றிருந்தால் நிச்சயமாக இந்த அற்புதமான வார்த்தைகளை உதிர்த்திருக்க மாட்டீர்களல்லவா? உணவளிக்கும் கையினையே கடித்துப் பதம் பார்க்கிறீர்களா? அமருங்கள்... இருக்கையில் அமர்ந்து விடுங்கள்.

**பீஷ்ம:** மூங்கில் மரம் பட்டொழிந்து போகு முன்னே பூப்பூக்குமாம்! அஸ்தினாபுர மரத்தில் அத்தகைய பூவுக் கொப்பானவன் துரியோதனன் எதனை ஒதுக்கினாலும் திரௌபதி நமது மருமகள் என்பதை ஒதுக்கிவிட முடியுமா? எண்ணிப் பாருங்கள். அவளுக்கு ஏற்படும் அவமானம் நமது முழு வம்சத்துக்குமே களங்கம் என்பதை மறக்க வேண்டாம்.

**துரியோ:** திரௌபதி இனிமேல் நமது மருமகளல்ல- அவள் அரண்மனையிலுள்ள ஏனைய பணிப்பெண்களுடன் வாழ வேண்டியவள்.

**பீஷ்ம:** மகாராஜா! அஸ்தினாபுரியின் அரியணைக்குத்தான் நான் கட்டுப்பட்டவன். துரியோதனனின் முரட்டுப் பிடிவாதத்துக்கல்ல..!

**துரியோ:** அரியணையில் அமர்ந்திருப்பவரே என் அருமைத் தந்தையார்தானே!

**விகர்ணன்:** தாத்தாவின் கூற்றினையே நான் ஆமோதிக்கிறேன். அப்பா! அண்ணிக்கு ஏற்படுத்தப்படும் அவமரியாதை பரத வம்சம் அனைத்தையுமே அவமதிப்பதாகும்.

**துரியோ:** விகர்ணா! மரியாதை அவமரியாதை பற்றிய உனது விளக்கம் இங்கு அவசியமற்றது. அமர்ந்துகொள். இந்த அடிமைகளின் சிரங்களில் இன்னும் மகுடங்கள் ஏன்? அவற்றையெல்லாம் கழற்றி என் காலடியில் வையுங்கள்.

பாண்டவர்கள் தங்கள் முடிகளை கழற்றி துரியோதனனின் காலடியில் வைக்கின்றனர். துரியோதனன், சகுனி முதலானோர் ஆனந்தக் களிப்பில் சிரிக்கின்றனர். இதேவேளை காவலன் வருகிறான்.

**துரியோ:** என்ன தனியாகவே திரும்புகிறாய்?

**காவ:** இளவரசே! தனது வினாவுக்கு தகுந்த விடைபெற்று வரும்படி மகாராணி பணித்தார்!

**துரியோ:** மகாராணியா..? ஒரு சாதாரண வேலைக்காரப் பெண்ணை மகாராணி என்று அழைக்கலாமா? இது இங்குள்ள மன்னர்களுக்கே அவமானம்! உம்...என்ன சொன்னாள் அந்தத் தாதிப் பெண்?

**காவ:** 'மகாராஜா தன்னை தோற்றபின் என்னை தோற்றாரா இல்லை என்னைத் தோற்றபின் தன்னை இழந்தாரா' என்ற வினாவுக்கு விடை அறிந்து வரச் சொன்னார் இளவரசே!

**துரியோ:** ஐவருக்கு மனைவியான அந்தப் பெண்ணிடம்- அவள் கேட்க வேண்டிய கேள்விகளை இங்கே வந்து கேட்கும்படி கூறு...போ...!

**-காட்சி மாற்றம்-**

திரௌபதியின் அந்தப்புரம்.

**திரெள:** எனது வினாவுக்கு என்ன விடை கொண்டு வந்தீர்?

**காவ:** அரசர் அமைதியாகவிருந்தார். அங்கு தாங்களே வந்து கேள்வியினைக் கேட்கும்படி இளவரசர் கூறினார் மகாராணி!

**திரெள:** மற்றுமோர் உதவி செய்வாயா? சூதாடும் சபைக்கு கௌரவ வம்சத்து மருமகளாகிய நான் வரவேண்டும் என்று பிதாமகர் பீஷ்மர் அழைத்தால் நான் அங்கு வருகிறேன். மாமா திருதராட்டிரர் கட்டளையிட்டால் நான் பணிந்து அங்கு வருகிறேன். நான் அங்கு வருவது சரியென மாமா விதுரர் கருதினால் வரச் சித்தமாயுள்ளேன். ஆனால் இவர்களில் எவரும் விரும்பவில்லையானால் நான் வர முடியாது.

**-காட்சி மாற்றம்-**

**துரியோ:** கௌரவ வம்சப் பெரியவர்களிடம் இவள் என்ன கேள்வி கேட்பது? அவள் என் கட்டளைக்குப் பணிந்து நடக்கக் கடமைப்பட்ட அடிமை தானே!

**பீஷ்ம:** மகாராஜா! கடவுளுக்காக இந்த விளையாட்டை உடனே நிறுத்துங்கள்!

**துரியோ:** பிதாமகரே! மகாராஜாவால் எனக்கு அநீதி இழைக்க முடியாது. யுதிஷ்டிரர் திரௌபதியை வைத்து ஆடும்போதே, அரச குலத்தினதும் பாரத நாட்டினதும் மதிப்பும் மரியாதையும் இழிவுக்கிழுக்கப் படுகிறதே என்று நீங்கள் ஏன் தடுக்க முன்வரவில்லை? இவ் வினாக்கள் யாவும், நான் வெற்றியீட்டியதனால் தானே விடுக்கப்படுகின்றன. எனது இந்தக் கேள்விக்கு யாராவது பதிலிறுக்க முடியுமா?

எங்கும் அமைதி நிலவுகிறது.

**துரியோ:** துச்சாதனா! நீ போ! ஐவருக்கும் மனைவியான அவள் கூந்தலைப் பற்றி சபைக்கு இழுத்து வா தம்பி!

***

திரௌபதியின் அந்தப்புரம்.

**துச்சா:** வந்து விடு பெண்ணே! உன்னை வெற்றி கொண்டு விட்டோம்..வா!

**திரெள:** காந்தாரி மைந்தனே! பெண்மைக்கு மதிப்புக் கொடுக்கக் கற்றுக்கொள். குடியிருந்த கோயிலுக்குக் களங்கம் தேடாதே!

**துச்சா:** நீயாக வர மறுத்தால் உன்னை இழுத்துக்கொண்டுதான் போவேன்... வந்துவிடு!

**திரெள:** இந்நிலையில் என்னை அங்கு அழைத்துப் போகாதே! கௌரவர்களின் மருமகளுக்கு அபகீர்த்தியை உண்டு பண்ணிவிடாதே! மாதவிடாய் கண்டநான் இன்னும் தலை முழுகாதிருக்கிறேன். மக்கள்முன் நான் செல்வது தகாது.

**துச்சா:** நீ இப்பொழுது ஒரு வேலைக்காரி தானே! வாடி.

**திரெள:** என் கணவரின் தந்தை பாண்டு மன்னரின் அண்ணாவான மாமன்னரை காண்பதற்கு நான் இன்னும் போக முடியாதிருக்கிறேன். இந்நிலையில் பலபேர் கூடியிருக்கும் அவைக்கு என்னை அழைத்துச் செல்கிறாய். என்னை அறிந்தவர்கள் என்னிலையினை அறிவார்கள். அறியாத அந்நியர் முன் நான் வருவது இந்நிலையில் அடுக்காது. கேவலமாக என்னை அழைத்துச் செல்லும் நீ என்னை யாரென்று கூறுவாய்? பாண்டு மாமன்னவரின் மருமகள் இவளென்று கூற உன்னால் முடியுமா? உன் அண்ணன்மார் ஐவரும் தான் என் கணவராவர். அவர்களிடம் என்ன கூறப்போகிறாய்? கௌரவரின் குடும்ப மாண்பினையும் மதிப்பினையும் இழிவுக்குள்ளே இழுத்து கௌரவத்தை அழித்து விட்டதாகக் கூறத்தான் போகிறாயா? எனக்கு இழைக்கப்படும் இக் கொடுமைக்கு பாண்டவர்கள் உன்னை மன்னிக்கமாட் டார்கள். அவர்கள் மன்னித்தாலும் நான் என்றுமே உன்னை மன்னிக்கமாட்டேன்!

**துச்சா:** இவற்றையெல்லாம் எவரும் பொருட்படுத்தப் போவதில்லை. அமைதியாக வாடி!

**திரெள:** துச்சாதனா! எனக்கு இழைக்கப்படும் இக்கொடுமையால் உண்டான காயம் என்றும் ஆறாதடா! இதற்காக பழி வாங்காமல் நான் விடப்போவதுமில்லை!

<u>**பின்னணிப் பாடல்:**</u>

**திரௌபதியின் திரழ் கூந்தல்**
**தன் கரத்தால் பற்றியந்த**
**துரியனவன் தம்பி கொடும்**
**துச்சாதன னிழுத்தான்**
**அரியபெரு மரசர்குலம்**
**அழியாது காத்து வந்த**
**பெருமை புகழ் பேரெல்லாம்**
**அழிந்தொழிந்து இழிந்தனவே!**

திரௌபதியின் சிகையைப் பற்றி சபைக்கு இழுத்து வருகிறான் துச்சாதனன். பாண்டவர்கள் செயலிழந்து உதவியற்றிருக்கின்றனர். சபையிலுள்ளோரும் செய்வதறியாது இருக்கின்றனர்.

**துச்சா:** அண்ணா! அந்த ஐவருக்கும் தேவியான அடிமையை அவைக்கிழுத்து வந்துவிட்டேன்..!

**துரியோ:** அன்று என்ன சொன்னாய் அடி பெண்ணே! 'அந்தகனின் மைந்தனுக்கும் கண் பார்வையற்றுவிட்டதோ' என்றா கூறிவிட்டாய்? அவளை இங்கு இழுத்து வந்து என் தொடையில் அமர்த்தடா அருமைத்தம்பி!

**பீமன்:** துரியோதனா! தொடைதன்னில் அமர்த்திடவோ சொன்னாயடா? உன் தொடைதனை உடைக்காமல் இடையில் நான் போய்விட்டால் எடுக்கும் ஏழு பிறவியிலும் உனக்கே நானடிமையடா!

**துரியோ:** சத்திரியர்க்குரிய சபதமெல்லாம் இனிமேல் இத்தரையிலுமக்கில்லை அமர்ந்திடடா பீமா நீ!

**கர்ணா:** கலங்காதே நண்பா! அறிவதற்கும் நாளாகும். அதுபோல மறப்பதற்கும் நாளாகும். அரச குடும்பத்தில் அவதரித்த இவர்களெல்லாம் அடிமைகளாய் ஆன கதை அமைதியாக அறிவிலெழும்!

**சகுனி:** ஆமாம் மருமகனே! அடிமைகள் இவர்களுக்கு அடிமை உணர்வு இனி அமைதியாக வந்தணையும்!

திரௌபதி துச்சாதனனின் பிடியிலிருந்து விடுவித்து சபையிலுள்ள பீஷ்மர், விதுரர், கிருபாச்சாரியார், துரோணாச்சாரியார் அனைவரையும் பார்க்கிறாள். அவர்கள் அவமானத்தால் தலை கவிழ்கின்றனர்.

**திரெள:** பிதாமகரே! உங்கள் மருமகள் நான்! உருக்குலைந்து நிற்கின்றேன். தலை தாழ்த்தி நிற்கின்றீர்! தீர்த்திடுமோ என் துயரம்? மாதவிடாய் கண்டவள் நான்– முழுகாமல் நிற்கின்றேன். வாழ்க என்று வாயார வாழ்த்திடுவீர் அன்று! ஏது சொல்லி எனை வாழ்த்த நினைக்கின்றீரின்று? கௌரவர் குடியினுக்கோர் குலக்கோமான் நீரன்றோ? வீரத்தில், விவேகத்தில் கூரான ஆற்றலிலே குறைவற்ற தங்கள் முன்பு தவிக்கின்ற மனத்தோடு களங்கத்தை அணைத்தவளாய் கதியற்று நிற்கின்றேன். கூறுங்கள் உங்கள் கருத்துக்கு நான் பணிந்து நடப்பதுவே என் கடமை. கௌரவரின் குடும்ப குலப்பெருமை இது தானோ? கூறுங்கள் பிதாமகரே! நான் சார்ந்த வம்சத்தின் நடைமுறைகள் வேறு. வீட்டுக்கு வந்த மாட்டுப் பெண்ணவளின் மாட்சிக்கு மாசு கூறும் மற்றவரை மாய்க்காமல் விடமாட்டார் என் குலத்தோர். பரதன் வழிவந்த பாரத வம்சத்தில் நீதிமுறை மாறுமோ? நேர்மை வழி வேறோ? நானறிய-இங்கு நிறைந்திருக்கும் நல்லவர்கள் தானறியக் கூறுங்கள்! பிதாமகரே! நீரறிந்த நீதியினை நாவெடுத்து நவின்றிடுவீர்!

மணமகளாய் அன்று முதன் முதலில் தாழ் பணிந்தேன். மணங்கமழ என்றும் மங்கலமாய் வாழ்கவென்று வாழ்த்தியதை மறந்தீரோ! வாழ்த்துக்கள் கூறிய தங்கள் வாரிசின் வாழ்க்கையினை வீணர் சிதைக்கின்றார் உங்கள் விழி முன்னே! இந்தக் கொடுமைக்கு நீங்களுமா பங்கு? இல்லையென்று கண்டால் எடுங்கள் உங்கள் வாளை! மன்னன் மகளாய்ப் பிறந்து மன்னனுக்கே மாலையிட்ட என்னை இழிவாக்கி இறுமாப்புறும் இவரின் தலையைக் கொய்துங்கள் தரத்தை உயர்த்துங்கள்.

பிதாமகரே! பேரழிவின் விழிம்பில் நின்று பொல்லாங்கு தேடுகின்ற பித்தர்களின் மத்தியிலே பேராற்றல் மிக்கவரே! தங்களுக்கிங்கு என்ன தரமான பணியுண்டு? வெளியேறிச் சென்று விபரீதம் தவிர்த்திடுங்கள். போகுமுன்னே என் கேள்வி ஒன்றுண்டு! விடை பகன்றுபின் போங்கள்!

வேதங்கள், சாத்திரங்கள் விருப்புடனே கற்றறிந்த வேளம் நிகர் தங்களிடம் பேதையிவள் வேண்டுகிறேன். 'தன்னைத் தோற்ற பின்னே தன்னவளை தாயத்தில் பொன்னைப்போல் வைத்தாட தருமத்திலிடமுண்டோ?" திரௌபதியாள் இந்தக் கேள்விதனைத் தனக்காகக் கேட்கவில்லை. எமை ஈன்ற பூமாதா தனக்காகக் கேட்கின்றாள். பெருமை மிகு பாரதத்தின் எதிர்கால பெண்களுக்காய் கேட்கின்றாள் பிதாமகரே! விடை தாரும்...!

**பீஷ்ம:** மகளே!

**திரெள:** மகளே என அழைத்து உறவு முறை கூறி உரிமைகளை யாசிக்க நான் இங்கு வரவில்லை! என் கண்ணீருடன் கலந்த கறை களையக் கோருகிறேன்! மனைவியவள் கணவனின் மாறுபடாச் சொத்து. கணவனவன் தன்னை தாயத்தில் தோற்றுவிட்டால் தானாக தன் மனைவியும் அவனுடன் சேர்ந்தே தோற்கடிக்கப்படுகின்றாள். தன்னை அவர் தோற்ற பின்பு தன் மனைவியினை எவ்வாறு தாயத்தில் பணயமாக வைத்தாட முடியும்? மனைவி கணவனின் சொத்தல்லவென்று கொண்டால், அவளுடைய அனுமதியைக் கோராமல் அவளை வைத்தாட அவர்க்குரிமையுண்டோ? பாரத வம்சத்தின் நீதி என்ன புகல்கிறது? மகள் என்று எனை அழைத்தீர்! உமது மகள் நானென்றால் உமக்கு உறுத்தாதோ எனக்கிந்த உலுத்தர்கள் ஊட்டும் வினை! மறு வீட்டுப் பெண் தானே! மானமிழந்தாலும் தங்கள் மாண்பு குலையாதே!

**அர்ச்:** பிதாமகரே! பாஞ்சாலி கூற்றினுக்கோர் மாற்றுண்டோ சாற்றுங்கள்!

**திரெள:** பிதாமகரா விடையளிப்பார்...? விடைகாண முடியாத வினாவாக வளைந்து விட்டவர் அவரால் விடைகூற வழி தேட முடியாத வினாவானாரவரன்றோ?

திரௌபதி திருதராட்டினர் முன் செல்கிறாள்.

**திரெள:** மாமா! மாபெரிய தேசத்தின் மாண்பு முடிதரித்திங்கு மாசில்லா நல்லாட்சிக் கானதொரு அத்தாட்சியாகி விட்டீர். உங்கள் வீட்டு மருமகள் நான்! உங்கள் தம்பி பாண்டுபெற்ற பிள்ளைகளின் பத்தினி நான்– பாஞ்சாலி எந்தன் பேர்! என் நிலை கண்டீரோ! காணவில்லை நீங்கள் நல்லவர் தான்! இக்கொடுமைதனைக் காண அஞ்சியதால்தானன்றோ அந்தகராயாகிவிட்டீர்! பார்ப்பதற்கு விழியிருந்தால் இன்று என் நிலையைப் பார்த்ததுமே விழியழிந்து போயிருப்பீர்!

**திருத:** என்னிம் ஏதும் எடுத்துரைத்து என்ன பயன்? கேட்பதை உன் கணவனிடம் கூசாமல் கேட்டுக்கொள். பந்தயப் பொருளாக பாவை உனை வைத்தாட பாவி எனைக் கேட்டானா? உன்னையும் வென்றுவிட உரிய வழியுண்டோவென என் மகனும் கேட்கவில்லை. உன்னை வைத்தாடியதால் உன் கணவன் உயர் நாட்டின் பெருமைக்கே உலை வைத்துவிட்டான் பார்! பாரத நாட்டிற்கே பெரும் பழியைச் சேர்த்துவிட்டான்!

**திரெள:** நன்றே பகன்றீர்கள்! என் நாயகனை நாடி நான் செல்லுமுன் என் தந்தையின் நண்பராம் துரோணரிடம் ஒரு வார்த்தை! வில்லுக்கும் சொல்லுக்கும் வேரறிந்த உத்தமரே! என்னை மகளாகவும் மருமகளாகவும் எற்று மற்றவர்க்குச் சொல்வீரே! இன்று இந்தச் சபை நடுவே அப்பா என்றழைக்கவா அருமை மாமாவோ என்று அறை கூவவா?

துரோணாச்சாரியார் எதுவும் கூறாது தலை குனிகிறார்.

**திரெள:** அமைதியை அணிகலனாய் அணிந்து விட்டீர்! கௌரவரின் குலகுருவே! கூறுங்கள் உங்கள் உயர்வான கருத்துக்களை.

கிருபாச்சாரியாரும் தலை கவிழ்கிறார். திரௌபதி விதுரரிடம் வருகிறாள்.

**திரெள:** விவேகத்தில் வான் நிகர்த்த விதுரர் மகாத்துமனே! உண்மை கசக்குமிது உண்மையென உணர்ந்தாலும் திண்ணமாக எடுத்துரைக்கும் திறமைதனைப் படைத்தவரே! திறவுங்கள் தங்கள் திருவாய்க் கதவதனை! தோற்றுவிட்ட கணவன், தோற்றதன்பின் தன் மனைவிதனை தாயத்தில் பந்தயமாய் வைத்தாட வழியுண்டோ? அடிமையானதன் பின்னர் வேறோர் அரிவையினை வைத்தாட அவர்க்குரிமை தானுண்டோ?

**விதுர:** அண்ணியின் வினாவுக்கு விடை கூறுங்கள்!

**துரியோ:** விகர்ணர..!

**சகுனி:** பேசுபவரெல்லாம் பேசட்டும் விட்டுவிடு. நடப்பதென்னவோ நடந்து முடிந்துவிட்டதே! யுதிஷ்டிரன் திரௌபதியைத் தோற்றுவிட்டான் அவ்வளவுதான்!

**திரெள:** அத்தோடு முடியவில்லை! என்னை வைத்தாட அவர்கேது தனிஉரிமை? அவர்க்கு மட்டும் நானுடமையாக மாட்டேன் அன்றோ! ஐவருக்கும் என்மீது அளவான உரிமையுண்டு. (நகுலரைப் பார்த்து) உங்கள் மனையாளை பந்தயமாய் வைத்தாட உங்களிடம் கேட்டாரா உத்தரவு? (சகா தேவனிடம்) அதற்கான உரிமையினை அண்ணனுக்கு நீங்கள் அளித்ததுமுண்டா? (அர்ச்சுனரிடம்) சுயம் வர மண்டபத்தில் வீரச் செயல்புரிந்து விண்ணவரும் வாழ்த்துரைக்க வீறுடனே கரம் தொட்டீர்! சூதாடும் மண்டபத்தில் சூதறியா எனை வைத்து சொக்கட்டானாட சோதரர்க்குச் சொன்னீரோ? சதுரங்க ஆட்டத்தில் சத்திரியர் தோற்பதுண்டு! எவரும் சொந்த மனையாளை சூது மேடைக்கழைத்ததில்லை. இன்று என்னை பந்தயப் பொருளாக எடுத்த கொடுமைதனை ஏனென்று கேட்க எழவில்லை நீங்கள்! உங்கள் வீரத்தை விழலுக்கே விலை பேசி விட்டீரோ? வெட்கம், மானம் என்றெந்த விவேகமும் வீழ்ந்தொழிந்து விட்டதுவோ?

**பீமன்:** அண்ணா! பாஞ்சாலி கேட்கின்றாள்! விடை கூற முடியாதோ? தருமத்தின் திருவுருவாம் அறவொழுக்கம் அத்தனைக்கும் அவதாரமெடுத்தவராம். அவனி போற்றுகிறது தங்களை! அண்ணா! நீங்கள் என் அண்ணனாக மட்டும் இல்லாதிருந்தால் அந்த ஆண்டவன்மேல் ஆணை! அருமைமிகு பாஞ்சாலிதனை இந்தச் சபையினிலே பந்தயமாய் வைத்தாட துணிந்துவிட்ட தங்கள் கையைத் துண்டாடத் தயங்க மாட்டேன்!

**சகுனி:** ஆகா...! நான் ஆவலுடன் காத்திருந்த அருமையான சந்தர்ப்பம்! அண்ணன் தம்பி ஐவருக்கும் பொதுவாக நிலைத்திருந்த ஐக்கியத்தை அறுத்தெறியும் அந்த அருமையான பொழுதினை நான் ஆவலுடன் காத்திருந்தேன்!

**விகர்ணன்:** செல்லரித்துச் சீரழியும் செழுமை மிகு பெருமரம்போல், சிறு கிருமிக்கிரையாகி சாய்ந்து விழும் சர்ரம் போல், அண்ணிதனக்கிழைக்கும் அநீதியினால் பரத வம்சம் அடித்தளத்தில் அழிவினுக்கோர் அத்திவாரமாகிவிடும். ஆதி மகர் பிதாமகரும் அவரோடிணைந்து அமர்ந்திருக்கும் அறவோரும் பாஞ்சாலி தான் விடுத்த வினாவுக்கு விடையளித்து வடு நீங்க வழி சமைப்பீர்! மனையாளைப் பிணையாக மன்றினில் வைத்தாட மணாளனுக்கு உரிமையுண்டோ? கூறுங்கள்! தக்க விடைதான் பகராது விட்டுவிடுவீரென நின்றால் மிக்க பழி தீராது எப்பிறவி எடுத்தாலும்!

**பீஷ்ம:** தருமன் தவறிழைத்துவிட்டான்! திரௌபதியை வைத்தாடியது தருமநெறிக் கொவ்வாதெனினும், தன் மனைவி மீது தன் கணவர்க்குண்டான தனியுரிமை தன் வலியால் தடைகோர முடியாது- பிறர் எவரும் தலையிடவும் முடியாது! இஃதுண்மை!

**திரெள:** உரிமை உரிமை என்ற உரைக்கின்றீர் பிதாமகரே! மாலையிட்ட மனைவியவள் மான பங்கமுறும்போது மௌனமாகச் செயலிழந்து சோர்ந்திருத்தல் மன்னவரின் தனிப்பண்போ? மனைவியவள் மனந்தனைக் காப்பது கணவனின் கடமையன்றோ...?

**கர்ண:** உனைக் காக்கும் உரிமைதனை இழந்துவிட்டார் ஐவரிங்கே! அந்த ஐவருக்கும் தேவியாக இருந்துவிட்ட உன்னால் ஆறாவது நாயகனாமென் அன்பனை ஏற்க அவமானம் ஏனோ? அமர்ந்துவிடு அவன் தொடையில்!

**அர்ச்:** உளமுறுத்தும் வார்த்தைகளை உதிர்க்கின்றாய் கர்ணா? உரிய வகை பழிதீர்த்து உனை மாய்ப்பேன் திண்ணம்!

**துரியோ:** என் நண்பனுக்கு எதிராக நாவை அசைக்காதே! அறுத்தெறிவேன் அந் நாக்கை-அடங்கி இரு!

**கர்ண:** அவன் அடிமை ஆகிவிட்ட உணர்வு உறுத்தும்வரை உளறட்டும். ஐவருக்கும் தேவியாக ஆகிவிட்ட அவளுக்கு மதிப்பேது? மானம் தானேது? பரத்தை நிகரானவள். துணியின்றித் திரிந்தாலும் பங்கமும் எவர்க்குமில்லையன்றோ..?

பாண்டவர்கள் கோபத்துடன் எழுகின்றனர்.

**துரியோ:** அடிமைகளே! அமருங்கள். அன்பன் கூற்றதில் தப்பேது? தம்பி துச்சாதனா! நான் வென்றுவிட்ட வனிதையினை துயிலுரிந்து வெற்றுடம்புக் கோலத்தில் நிறுத்திடடா சபையில்..!

**பீமன்:** துச்சாதனா! திரௌபதியின் துயிலினை நீ தொட்டாயானால் துண்டாக்குவேனடா உன் துர்க் கையிரண்டும். ஆணை இது!

**துச்சா:** தானாக அவளே துயிலை உரிந்து விட்டால் நானேன் தொடப் போறேன்? ஐவருக்கும் நாயகியே! நீயே துணி களையத் தொடங்குவாயா...? இல்லை துணைக்குத் தான் நான் வரவா..?

துச்சாதனன் திரௌபதியின் தாவணியைப் பிடித்து இழுக்கிறான். திரௌபதி தடுக்க முயன்றும் முடியாமல் இறுதியில் கிருஷ்ணனை நினைத்து அழைக்கின்றாள்.

**திரெள:** ஏ பரந்தாமா! பாரிலுள்ளோர் குறை தீர்க்கும் பரம் பொருளே! துவாரகீஸ்வரா! தூயவர் நெஞ்சில் குடியிருப்பவனே! தேவ தேவனே தேவர்க்கருள் புரி தீன தயாளனே! இந்த அபலைக்கிரங்கி என் மானங்காத்தருள் நாராயணா...! நாராயணா..! அரே நாராயணா!

துச்சாதனன் தொடர்ந்து துயிலை உரிகிறான். வேறு எவர் கண்ணிலும் தோற்றாமல் நின்று கிருஷ்ணன், வண்ணம் வண்ணமாக துணி அளிக்கிறார். துரியோதனனும் அவனைச் சார்ந்தோரும் துச்சாதனனுக்கு உற்சாகமளித்த போதும் தொடர்ந்து துயிலுரிய அவனால் முடியாமல் களைப்புற்று கீழே சாய்கிறான். "ஹேய் கிருஷ்ணா" என்று வாயில் ஜெபித்த வண்ணம் திரௌபதியும் தரையில் விழுகின்றாள். சபையிலுள்ள பாண்டவர்களும் ஏனையோரும் தலை கவிழ்ந்து காணப் படுகின்றனர்.

**பீமன்:** பாண்டுவின் புதல்வன் யான் பீமனுரைத்திடும் வாசகத்தைக் கேளுங்கள்! தர்மத்தின் தகைமைக்கே தனிக் களங்கமாய் விளங்கும் துரியோதனன் மார்பை தனிக்கையால்தான் பிளந்து துடித்தெந்தே பாய்ந்து வரும் உதிரத்தைத்தான் பருகி செருக்களத்திலே எந்தன் சினத்தையுமே நான் தீர்த்து தாகம் தணிந்திடுவேன். இச்சபதம் முடிக்காமல் நான் சாகப்போவதில்லை! இது திண்ணம்!

**விதுர:** நடக்க முடியாதவை அனைத்தும் நடந்தேறிவிட்டன. கேட்கமுடியாத சொற்கள் கேட்க வேண்டியதாயிற்று. அறிவிற் சிறந்தவர்கள், அறத்தின் வழி வந்தவர்கள் அவையின் கண் அமர்ந்திருக்க அறம் மறைந்து போயிற்று. அவலத்தை அணைத்தவளாய் அவை நடுவே அபலையிவள் பெண்மைக்குரிய பெருமதிப்பைத்தானிழந்து தாய்மைக்குரிய தனித்துவத்தை தவறவிட்டு கண் திறந்து பார்க்கவுமோர் களை இழந்து நிற்கின்றாள். வினா தொடுத்து நிற்கின்றாள், வேதனையின் விளிம்பில் நின்று! விடை கூற முடியாத வீணர்களா இங்கிருப்போர்? கார்கையாள் தான் வடிக்கும் கண்ணீர்தனைத் துடைக்க நாதியற்றுப் போனோமோ? நடைப்பிணங்களானோமா? சூதறியா திரௌபதியே சூதுக்கிரையாகி விட்டார்! தீதினையே விதைத்த இந்த தீயவரின் துர்ச்சபையில் நீதிதனை நாடி நீ நிற்பதிலோர் நயமுமில்லை. பாதி இறந்தவர்கள் பரந்திருக்கும் சபையை விட்டு வேறு திசையேகி வேண்டும் பதில் வேண்டம்மா...!

அமைதி சூழ்ந்திருக்க அவமானத்துக்குள்ளான பாஞ்சாலி ஆக்ரோஷமாக எழுகிறாள்.

**திரெள:** மன்னர்க்கு மன்னவனே! மனுக் குலத்தின் பின்னவனே! திருதராட்டிரன் எனும் குருகுலத்துக்கதிபதியே! பாஞ்சால

(18ம் பக்கம் பார்க்க)

அருள் ஜுவலர்ஸ்

4
3
6
3
3
1



பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

## தருவது வியோ டெ

வெளிநாடாம் வெளிநாடு. நம் நாட்டிலும் செல்ல நாய் வளர்ப்பும் சொகுசான வசதி செய்து கொடுக்கும் கவனிப்பும் உண்டு என்று வெளிப் படுத்த அவருக்கு ஆசையோ ஆசை.



## நேசமுடன் வாசிப்பு

முரசை சுவைக்க தடையில்லை வயது

Kala



61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

வெளிநாடுகளில் நாய்களுக்கு சொகுசான செல்லம் கொடுக்கும் செய்திகள் முரசில் வெளிவந்தன.

செய்தியைப் பார்த்ததும் முரசின் இலங்கை வாசகர் ஒருவருக்கு வந்தது பாருங்கள் கோபம்.

தனது வீட்டில் பஞ்சு மெத்தையில் பவிசாக வாழும் போக போக நாயாரை கமரா வால் பதிவு செய்து அனுப்பி வைத்திருக்கிறார். முடிந்தால் படிக்கவும் என்று நாயாருக்கு புத்தக வசதியும் செய்யப்பட்டுள்ளது.

## இங்கேயும் செல்லம்!



நாளைய வானில்
சிறகடிக்கப் போகும்
சிறுசுக்கு-
இன்றில்-
சேகரித்துக்கொள்ள
வாசிப்பு
கைகொடுக்கும்.

ஏட்டறிவு மட்டுமல்ல
பொது அறிவும்
சேர்த்து ஊட்டுவதே
உலகை அறியவும்
வாழ்வை இரசிக்கவும்
வருங்கால விருட்சங்களை
தயார்படுத்த உதவும்.



## உடலோடு ஒரு உடை





## பயமில்லா முயற்சி



அபூர்வமான வன விலங்குகள், அரிய பறவை இனங்கள் மற்றும் ஊர்வன பிராணிகளின் தொகை நாளுக்கு நாள் அருகி வருகிறது. இவற்றை களவாக வேட்டையாடுவோர், உயிருடன் பிடித்துக் கள்ளத்தனமாகக் கடத்துவோர்- இப்பிராணிகளை வேட்டையாடுவதன் மூலமும் உயிருடன் பிடிப்பதன் மூலமும் ஏராளமான பணம் சம்பாதிக்கின்றனர். கரடியின் பித்தப் பைக்கு இன்று உலகில் பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது. புலியின் பாகங்களுக்கும் கிராக்கி அதிகம். இவை பல தீராத நோய்களைத் தீர்க்குமாம். அத்துடன் வீரிய சக்தியையும் அதிகரிக்கச் செய்யுமாம். சில வகைப் பாம்புகளை உயிருடன் கொண்டுபோய்க் கொடுத்தால் பல்லாயிரக் கணக்கில் பணம் தர தனவந்தர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒருவகை சாம்பல் வர்ண பாம்பு கடத்தப்படும்போது பிடி →

## பிறந்தநாள் வாழ்த்து

வெள்ளவத்தை சந்திரேசன் கோகிலா ஜெயந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வி பவித்ரா 04வது பிறந்தநாளை 24.09.1994 கொண்டாடுகிறாள். இவளை ஜெர்மனி அப்பா, அம்மா, அம்மம்மா, இருபாலை அப்பப்பா மற்றும் ஜெர்மன் பெரியப்பா குடும்பம், சித்தப்பாமார், மாமா குடும்பம், சந்திரேசன் மாமா, மேமல் கலி மாமா, மாமா மாமா வாழ்த்துகின்றனர்.

